விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 26 வெள்ளிக்கிழமை (11.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 235

# பதவியை துறந்தார் ரவி கருணாநாயக்க!

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று சிறப்புரையொன்றை ஆற்றிய பின்னர் தனது ராஜினாமாவைப்பற்றி அறிவித்த அவர், நாடாளுமன்றத்தின் பின்வரிசையில் சென்று அமர்ந்து கொண்டார். (23ஆம் பக்கம் பார்க்க)



## வட.மா. சபையில் நேற்று அமைதி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வு பெரிதாக எந்த குழப்பங்களும் இன்றி அமைதியான முறையில் நடைபெற்று முடிந்துள்ளது.

வடக்கு மாகாண சபையின் 101 வது அமர்வானது நேற் 23☛

## நம்பிக்கை.பிரேரணை இனி அவசியமில்லை – சபாநாயகர்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தனது பதவியில் இருந்து விலகியுள்ளதால், அவருக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி முன்வைத்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு 23☛

## இந்திய மீனவரின் தொடரும் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட போது இலங்கை கடற்படையால் நேற்றையதினம் அதிகாலை கைது செய்யப்பட 12 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 23 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கு 24☛

## அரசு நற்பெயரை பாதுகாக்க ரவியை பலியாக மாற்றியது

### கூட்டு எதிர்க்கட்சி

(கொழும்பு)

அரசாங்கத்தின் நற்பெயரை பாதுகாத்துக் கொள்ள அமைச்சர் பதவியில் இருந்து விலகுமாறு ரவி கருணாநாயக்கவுக்கு கடும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியினர் கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே 23☛

## ரவியின் தன்னிலை விளக்கம்

(கொழும்பு)

முன்னாள் .வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்றைய தினம் நாடாளுமன்றத்தில் விசேட உரை ஒன்றை நிகழ்த்திய பின்னர் பதவியை ராஜினாமா செய்தார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையிலான இணக்க அரசாங்கத்திற்காக தான் தனது பதவியை அர்ப்பணிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

சமூக வலைத்தளங்கள் மற்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்னை குறித்து அண்மைக்காலமாக பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருவதால், அதனை தெளிவுபடுத்தி தனது நிலைப்பாடுகளை தெரியப்படுத்த வேண்டியது அவசியம் என்பதால் 23☛

## வருமானம் அதிகரித்து கடனை செலுத்தும் நிலைமை

### பிரதமர் ரணில் நம்பிக்கை



(கொழும்பு)

அடுத்த வருடம் மிகவும் கஷ்டமான வருடம் எனவும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளிலேயே அதிகமாக கடன் செலுத்தப்பட வேண்டியுள்ளது எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 23☛

## புதிய அரசியலமைப்பை தெற்கு தலைவர்கள் மக்களிடையே எடுத்துச்செல்ல வேண்டும்!

### சம்பந்தன் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள ஐக்கிய அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுக்காலை கொழும்பில் இடம் பெற்றது. 23☛



## ஊடகவியலாளர்களுக்கு அச்சத்தை நீக்கியது நல்லாட்சியே - மங்கள

(தெல்லிப்பழை)

ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் இந்த நல்லாட்சி அரசில் முற்றாக இல்லாமல் செய்யப்பட்டுள்ளது என நிதி மற்றும் தகவல் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

சுங்கத்திணைக்களத்தின் உப சுங்கத்தடுப்பு பிரிவு அலுவல 23☛



## ரவியின் முடிவு துணிச்சலானது சம்பந்தன் பாராட்டு

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க தனது பதவியில் இருந்து விலகியமையானது துணிச்சலான ஒரு விடயம் என எதிர்க்கட்சித் 24☛

## வடக்கில் ஆரம்பிக்கும் திட்டங்களில் எம் இளைஞர்கள் சேர்க்கப்பட வேண்டும்

### – வட மாகாண ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

நல்லாட்சி அரசாங்கம் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகளில் விசேட கவனம் செலுத்த வேண்டும் என வட மாகாண ஆளுநர் றெயினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

சுங்கத்திணைக்களத்தின் உப சுங்கத்தடுப்பு பிரிவு அலுவலகம் நேற்றைய தினம் தெல்லிப்பழையில் திறந்து வைக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 23☛

## எனது ஆட்சியை கவிழ்த்ததும் மகேந்திரன் போன்றோரே!

### மகிந்த ஆதங்கம்

(கொழும்பு)

எனது ஆட்சியை கவிழ்த்தது அர்ஜுன மகேந்திரன் போன்றோர் கொட்டிய பணமே காரணமென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



பொலநறுவை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கலாரத்ன விஜேயசிங்கவின் 28 ஆம் வருட நினைவு தினத்தில் இவ்வாறு மகிந்த கூறியுள்ளார். 23☛

## போக்குவரத்து குற்றங்களுக்கு அதிகரித்த தண்டம் அறிவிப்பு

(கொழும்பு)

போக்குவரத்துக் குற்றங்களுக்கான தண்டப்பணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக, காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளர்களில் ஒருவருமான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் போக்குவரத்துக் குற்றங்களுக்கு அறவிடப்படுகின்ற தண்டப்பணத்தில் திருத்தம் செய்வது தொடர்பாக, போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் முன்வைக் 24☛

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முன்னாள் கடற்படை பேச்சாளரின் விளக்கமறியல் நீடிப்பு



கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் கப்டன் டி.கே.பி.தசநாயக்க உட்பட 5 பேரின் விளக்கமறியலை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2008 ஆம் மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் கொழும்பு மற்றும் கொழும்பின் புறநகர் பகுதிகளில் 11 தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே அவர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இதையடுத்து இவரை மீண்டும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோது அவரை எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. (மு-11)

# கூரற்ற ஆயுதத்தால் தாக்கியே லசந்த கொலை செய்யப்பட்டார்

## 2-வது பிரேத பரிசோதனை அறிக்கையில் தகவல்

(கொழும்பு)

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கூரற்ற ஆயுதத்தால் தலையில் பலமாகத் தாக்கப்பட்டமையாலேயே உயிரிழந்தமையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

லசந்த விக்ரமதுங்கவின் இரண்டாவது பிரேத பரிசோதனை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றம் இந்த விடயத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு கல்கிசை பிரதம நீதவான் மொஹமட் நிஹைறம் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது தடவை மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையின் அறிக்கையை மூவரடங்கிய வைத்தியர் குழாம் மன்றில் நேற்று சமர்ப்பித்தது.

துப்பாக்கிச்சூட்டினால் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க உயிரிழந்ததாக ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கையை நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (மு-11)

# இயக்கச்சியில் குடும்பப் பிரச்சினை வாள்வெட்டில் முடிந்தது; 4 பேர் காயம்

(மல்லாவி)

பளைப் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள இயக்கச்சி சங்கத்தார் வயல் பகுதியில் குடும்பப் பிரச்சினை காரணமாக இரண்டு தரப்பினர்களுக்கிடையே இடம்பெற்ற வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறிய நிலையில் அது வாள் வெட்டில் முடிந்த போது 4 பேர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு பளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில்,

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு ஒருவரும் மிகுதி 3 பேர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கும் மாற்றப்பட்டுள்ளதாகவும் தற்போது நிலைமை பொலிஸாரின் கட்டுப் பாட்டின்கீழ் உள்ளதாக பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எஸ்.டபிள்யூ. ரஞ்சன பண்பார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30, மணியளவில் பளைப் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள இயக்கச்சி சங்கத்தார் வயல் பகுதியில் உள்ள இரு குடும்பங்களுக்கிடையே குடும்பப் பிணக்கு காரணமாக ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவே இந்த வாள்வெட்டுச் சம்பவம் நடை பெற்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

நேற்றைய தினம் ஒருதரப்பினருக்கு ஆதரவாக பருத்தித்துறைப் பகுதியில் இருந்து சிலர் சேர்ந்து கொண்ட நிலையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பின்னர் அது இரு தரப்பினரிடையேயும் கைகலப்பாக மாறிய போது வாள்வெட்டு இடம் பெற்றுள்ளது.

இந்நிலையில், வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களும் படுகாயமடைந்துள்ள நிலையில் அவர்களை சிகிச்சையின் பின்னர் கைது செய்து பொலிஸ் விசாரணைகளின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதுடன்,

மேலும் சிலர் வாள்வெட்டுடன் தொடர்புபட்ட நிலையில் பிரதேசத்தை விட்டு தலைமறைவாகியுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதை அடுத்து அவர்களை கைது செய்யவும் விசாரணைகளை முன்னெடுத்துச் செல்லவுமாக விசேட பொலிஸ் அணியினரை நியமித்துள்ளதாகவும் அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளார். (மு-15)

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித நடபாஸ்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(தி-9281)

# மகிழ்ச்சி!

(கொழும்பு)

ரவி கருணாநாயக்க பதவியில் இருந்து விலகியது குறித்து மகிழ்ச்சியடைவதாகவும் அதேபோல் பிணை முறிப்பத்திர விவகாரம் சம்பந்தமான சகல தகவல்களும் வெளியாகி, அதில் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்டம் சரியாக அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். (மு-11)

# உலக சைவ இளைஞர் மாநாடு இன்று யாழில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)


"தமிழ் எங்கள் மொழி சைவம் எங்கள் வழி" எனும் தொனிப்பொருளில் உலக சைவ இளைஞர் மாநாடு இன்றைய தினம் யாழ். இலங்கைவேந்தன் கலைக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

அகில இலங்கை சைவ மகாசபையின் ஏற்பாட்டில் சைவத்தமிழ் மறுமலர்ச்சியில் இளைஞரின் பங்கும் பணியும் என்ற தலைப்பில் இன்றில் இருந்து 3 நாட்கள் குறித்த மாநாடு நடைபெறவுள்ளது.

ஆரம்ப நாளான இன்றைய தினம், காலை 7 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் இருந்து பேரணி ஆரம்பமாகி யாழ் நகர் வீதிகளுடாக இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியை சென்றடைந்து காலை 9 மணிக்கு மாநாடு ஆரம்பமாகவுள்ளது.

ஆரம்ப பேரணியில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், தென்கயிலை ஆதீன குருமகா சந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளார், தமிழக பேரூராதீன இளைய பட்டம் தவத்திரு மருத்தாச்சலம் அடிகளார், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (மு-9)

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு : 30.01.1937
இறப்பு : 08.08.2017

## அமரர்
## கந்தையா பஞ்சாட்சரம்
## (காரைநகர்)

பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்தின் செயலாளராக கடமையாற்றும் சிவானந்தராசா அவர்களின் அன்புத் தந்தையார் அமரர் **கந்தையா பஞ்சாட்சரம்** அவர்கள் கடந்த 08.08.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவர் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பரத்தானின் பாதங்களை பணிந்து நிற்கின்றோம்.

**பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கமும், [illegible]**

(சி-9302)

# 13 கிராம் கஞ்சா; ரூ.5 ஆயிரம் தண்டம்

கிளிநொச்சி பகுதியில் 13 கிராம் கஞ்சாவை தம்வசம் வைத்திருந்த நபருக்கு 5ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. குறித்த நபரை நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

13 கிராம் கஞ்சாவினை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டுக்காகவே இவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மு-312)

# இலங்கைக்கு கடத்தவிருந்த கடலட்டைகள் பறிமுதல்



(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு கடத்த இருந்த சுமார் 5 லட்சம் பெறுமதியான 200 கிலோ கடல் அட்டைகள் இந்திய கடலோர காவற்படையால் நேற்றைய தினம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராமேஸ்வரம் மண்டபம் அருகே நேற்று அதிகாலை படகு ஒன்றில் 200கிலோ அரியவகை கடல் அட்டைகள் இலங்கைக்கு கடத்துவதற்கு ஆயத்தமான நிலையில் இருந்துள்ளது. கடலோர காவற்படைக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அந்த இடத்துக்கு சென்ற காவற்படை, கடல் அட்டைகளை பறிமுதல் செய்துள்ளதுடன் கடத்தலில் ஈடுபட்டதாக கூறி அலி என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (மு-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘வெளிநாட்டு முதலீடுகளின் போது இறைமைக்கு பாதிப்பேற்படாது’

## ஜனாதிபதி மைத்திரி உறுதி



(கொழும்பு)

வெளிநாட்டு முதலீடுகளின் போது நாட்டின் இறைமைக்கு பாதிப்பேற்படாதவாறு செயற்படுவது நல்லாட்சி அரசாங்கத்தின் கொள்கையாகுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

முதலீடுகள் தொடர்பில் வெளிநாடு அல்லது கம்பனியுடன் உடன்பாட்டுக்கு வரும் போது அது தொடர்பான தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதனை தவிர நில உரிமை ஒருபோதும் அவர்களுக்கு உரித்தாக்கப்படமாட்டாதெனும் கூற்று விசேடமாக அந்த உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

சீன-இலங்கை நட்புறவின் 60ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் கலந்து கொண்டு ஜனாதிபதி, மேலும் உரையாற்றுகையில்,

நாட்டின் அபிவிருத்தியின் போது உலகில் பொருளாதார ரீதியில் பலமான நாடுகளின் ஒத்துழைப்பு தேவையாகும். நட்புறவான வெளியுறவு கொள்கை மூலம் தற்போதைய அரசாங்கத்தினால் அனைவரினதும் ஒத்துழைப்பை இன்று இலங்கைக்கு உரித்தாக்க முடிந்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வதேசத்தில் இலங்கைக்கு தாக்கம் செலுத்தும் பல பாதகமான நிலைமைகளிலிருந்து விடுபடுவதற்கு கடந்த இரண்டரை ஆண்டுகளில் தற்போதைய அரசாங்கத்தினால் முடிந்திருப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, வெளிநாட்டு சொத்துக்களை அதிகரிப்பதற்கும், வெளிநாட்டு கடன்சுமையிலிருந்து விடுபடுவதற்கும் அரசாங்கம் மேற்கொண்ட செயற்பாடுகளின் சாதகமான பெறுபேறுகள் தற்போது தெரியத் தொடங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் உறவுகளை பலப்படுத்தியதனாலேயே இன்று சீன-இலங்கை தூதரக தொடர்புகளின் அறுபது ஆண்டு நிறைவை மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாட முடிந்திருப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, அந்த உறவுகளை பலப்படுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் தெரிவித்தார். (இ-7)

# தமிழ் மக்கள் அதிகம் வாழும் பிரதேசங்களில் தமிழ்மொழிக்கே முன்னுரிமையளிக்க வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா வலியுறுத்து






(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் அதிகம் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிக்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என தெரிவித்த சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், எமது உரிமைகளை துணிந்து எடுத்துக்கூறி பெற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் உப சுங்கத்தடுப்பு பிரிவு அலுவலகம் நேற்றைய தினம் தெல்லிப்பழையில் திறந்து வைக்கப்பட்டது. அந்த அலுவலகத்தின் பெயர்ப்பலகையில் சிங்கள மொழிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருந்தது. குறித்த விடயத்தை சுட்டிக்காட்டி அந்த நிகழ்வில் உரையாற்றும் போதே விஜயகலா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழர்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழி முதலாவதாகவும், இரண்டாம் மொழி சிங்களமாகவும் தான் இருக்க வேண்டும். இது இனவாதம் அல்ல. ஆனால் எமது பிரதேசத்தில் எமது மொழி முதன்மையாக இருக்க வேண்டும்.

எமது நல்லாட்சி அரசில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளோம். மக்களுக்கு உறுதி அளித்ததை நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கத்துடன் செயற்பட்டு வருகிறோம்.

முன்னர் சிங்கள மொழியில் தான் தேசிய கீதம் இசைக்கப்பட்டு வந்தது. எமது அரசில் தமிழ் மொழியிலும் தேசிய கீதம் இசைக்கும் அளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழ் பிரதேசத்தில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்படுவதற்கு தொடர்ந்தும் முன்னுரிமை வழங்க வேண்டும்.

தமிழர் பிரதேசங்களில் உள்ள திணைக்களங்களில் பெயர்ப்பலகையில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். சிங்கள மொழி க்கு முன்னுரிமை வழங் கப்பட்டிருந்தால், அந்த திணை க்களங்களில் உள்ள தமிழ் அதிகாரிகள் கூட தமது பத விக்கு ஆபத்து வந்து விடுமோ என்ற எண்ணத்தில் சுட்டிக் காட்டாமல் இருக்கலாம். ஆனால் அரசியல்வாதிகள் அதை சுட்டிக்காட்டி திருத்த வேண்டும்.

சுங்கத் திணைக்களம் மூலம் அரசுக்கு வருமானம் கிடைக்கிறது. இருப்பினும் வடபகுதியில் கடல் மார்க்கமாக தற்போது போதைப் பொருட்கள் கொண்டு வரப்படுவது அதிகரித்துள்ளது. இதை நிறுத்தி இளைஞர்களை பாதுகாக்க வேண்டும். மேலும் இவ்வாறான திணைக்களங்களில் தமிழ் மக்களுக்கு முன்னுரிமை வழங்கி வேலைவாய்ப்பு வழங்க வேண்டும்.

மேலும் முன்னைய காலங்களில் வடமாகாணத்தில் ஊடகத்துறைக்கு பல சவால்கள் இருந்தன எமது நல்லாட்சி அரசில் சுதந்திரம் உள்ளது. ஆனால் அதற்கு ஏற்ற வகையில் ஊடகங்கள் சம பங்கு வகிக்க வேண்டும். ஆனால் சில ஊடகங்கள் தமது தகுதி தராதரத்தை குறைப்பதாகவே எழுதுகின்றனர். மக்கள் பிரதிநிதிகள் செய்தவை செய்யவேண்டியவை, செய்யாதவற்றை எழுதலாம், ஆனால் அரசியல் நோக்கத்துக்காக எழுதக்கூடாது.

மக்களின் எத்தனையோ பிரச்சினைகள், தீர்க்கப்படாமல் உள்ளன. ஆனால் அதைப்பற்றி பேசுவதற்கு எமது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன் வருவதில்லை. ஒருவரை பற்றி ஒருவர் வர்ணிப்பதிலேயே குறியாக உள்ளார்கள். இவ்வாறு செயற்படுபவர்கள் விரைவில் மக்களால் நிராகரிக்கப்படுவார்கள்.

எத்தனையோ வேலைத் திட்டங்களைச் செய்ய வேண்டியுள்ளன. வடக்கில் பல தொழிற்சாலைகளை திறப்பதற்கு நாம் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் அதை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்ய முன் வர வேண்டும். அவ்வாறு செய்யாமல் எம்மை நாம் ஏமாற்றுகிறோம் என்பதை புரிந்து கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9-104)

# மீண்டும் அமுலுக்கு வந்தது 25 ஆயிரம் ரூபா அபராதம்

போக்குவரத்து விதி முறைகளை மீறுவோருக்கு எதிராக 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

மது போதையில் வாகனம் செலுத்துதல், காப்புறுதியின்றி வாகனம் செலுத்துதல், ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனம் செலுத்துதல், இடமிருந்து முந்தி செல்லுதல், வயதை பூர்த்தி செய்யாது வாகனம் ஓட்டுவோருக்கு எதிராக இவ்வாறு 25 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. (இ-7)

# செஞ்சோலைச் சிறுமிகள் முதலமைச்சருடன் சந்திப்பு

## வடமாகாணசபை அமர்வையும் பார்வையிட்டனர்

தாய், தந்தையர்களை இழந்த மாணவிகள் இங்கு படித்து முடிந்ததும் வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றனர். எனவே இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண சபை கவனத்தில் எடுத்து செயற்பட வேண்டும் என செஞ்சோலை சிறுவர் இல்லத்தினர் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கோரியுள்ளனர். வடக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சர்கள் மற் றும் உறுப்பினர்கள் ஆகியோரை செஞ்சோலை சிறுவர்கள் வடக்கு மாகாண சபையில் நேற்றைய தினம் சந்தித்து கலந்துரையாடினர்.





இதன்போதே மேற்படி கோரிக்கை முன்வைக்கப் பட்டுள்ளது. மேலும் வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வினை மாணவர்கள் பார்வையிடுவதற்கு மாகாண சபையால் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. முன்னதாக மாகாண சபையின் அமர்வினை பார்வையிட்ட மாணவர்கள் பின்னர், இடைவேளையின் போது மாகாண சபைக்கு வெளியில் உள்ள ஒன்றுகூடும் இடத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினர். இந்த சந்திப்பின் போது சிறுவர் இல்லத்துக்கு தளபாடங்கள், மற்றும் குடிநீர் வடிகட்டும் இயந்திரம், படிப்பகம், மற்றும் தளபாடங்கள் என பல தேவைகள் உள்ளதாகவும் சிறுவர் இல்ல மாணவர்கள் முதலமைச்சரிடம் கோரிக் கை முன்வைத்தனர்.

இது தொடர்பில் தமக்கு கடிதம்' ஒன்றை அனுப்பி வைக்குமாறும் அந்த கடிதத்தின் பிரகாரம் உதவிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் முதலமைச்சரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் இது தொடர்பில் புலம்பெயர் தமிழர்களும் கவனத்தில் கொள்ள வேண்டும் என சிறுவர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (இ-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலிய அணியின் களத்தடுப்பு பயிற்சியாளராக பிரட் ஹடின் நியமனம்



அவுஸ்திரேலிய சீனியர் கிரிக்கெட் அணியின் புதிய களத்தடுப்பு பயிற்சியாளராக முன்னாள் விக்கெட் காப்பாளர் பிரட் ஹடின் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய சீனியர் கிரிக்கெட் அணியின் களத்தடுப்பு பயிற்சியாளரான முன்னாள் துடுப்பாட்ட வீரரும் மிதவேக பந்துவீச்சாளருமான கிரேக் ப்ளிவெட் இருந்து வந்தார்.

இவர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். சொந்த கிரிக்கெட் சங்கமான தெற்கு அவுஸ்திரேலியா கிரிக்கெட் சங்கத்தில் பணிபுரிவதற்காக தனது பதவியில் இருந்து விலகியுள்ளார்.

இதனால் பிரட் ஹடின் புதிய களத்தடுப்பு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஹடின் 2019ஆம் ஆண்டு வரை இந்த பதவியை விகிப்பார். பிரட் ஹடின் அவுஸ்திரேலியாவுக்காக 66 டெஸ்ட் போட்டிகள் மற்றும் 126 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார்.

அவுஸ்திரேலிய அணியின் பயிற்சியாளராக ஹடின் நிமிக்கப்பட்டுள்ளதால், இஸ்லாமாபாத் யுனைடெட் மற்றும் அவுஸ்திரேலிய 'ஏ' அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலக முடிவு செய்துள்ளார்.

அவுஸ்திரேலியா, பங்களாதேஷ் அணியுடன் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரிலும் அதன்பின் இந்தியா வந்து ஒருநாள் தொடரிலும் விளையாடுகிறது. அதன் பின்னர் மிகப்பெரிய தொடரான ஆஷஸ் தொடரிலும் விளையாட உள்ளது.

# 2 நாட்களில் போட்டியை முடித்த அமீர்

## 10 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியும் அசத்தல்




பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொகமட் அமீர் கவுண்டி சம்பியன்ஷிப் கிரிக்கெட் போட்டியில் 10 விக்கெட்டுகள் எடுத்து அசத்தினார். இதனால் போட்டி 2 நாட்களில் முடிவை கண்டது.

இங்கிலாந்தில் கவுண்டி சம்பியன்ஷிப் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளரான மொகமட் அமீர், எசக்ஸ் அணி சார்பாக விளையாடி வருகிறார்.

இந்நிலையில் எசக்ஸ் அணிக்கும் யோர்க்செயர் அணிக்கும் இடையிலான போட்டியில், முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய யோர்க்செயர் அணி 113 ஓட்டங்கள் குவித்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய எசக்ஸ் அணி 231 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 118 ஓட்டங்கள் முன்னிலை வகித்தது.

இதைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய யோர்க்செயர் அணி 150 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதனால் எசக்ஸ் அணிக்கு 33 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

33 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய எசக்ஸ் அணி, இவ்விலக்கை 2 விக்கெட்டை இழந்து அடைந்தது.

இப்போட்டியில் எசக்ஸ் அணி சார்பில் மொகமட் அமீர் முதல் இன்னிங்ஸில் 18 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகள், இரண்டாவது இன்னிங்ஸில் 54 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகள் என மொத்தம் 72 ஓட்டங்களைக் கொடுத்து 10 விக்கெட்டுகள் எடுத்து எசக்ஸ் அணியின் வெற்றிக்கு பெரிதும் உதவினார்.

இதனால் இப்போட்டி இரண்டு நாட்களில் முடிவடைந்தது குறிப்பிடத்தக்கது.

# கவுன்டினோவுக்கு 100 மில்லியன் யூரோ

## பார்சிலோனாவின் விருப்பத்தை நிராகரித்தது லிவர்பூல்




பிலிப் கவுன்டினோவிற்கு 100 மில்லியன் யூரோ கொடுக்க வந்த பார்சிலோனாவின் ஓஃபரை நிராகரித்துள்ளது இங்கிலீஸ் பிரிமியர் லீக் கழகம் லிவர்பூல்.

ஸ்பெயின் நாட்டின் முன்னணி கால்பந்து கழக அணியான பார்சிலோனா அணிக்கு விளையாடிய பிரேசில் நாட்டின் முன்னணி வீரரான நெய்மர், பிரான்ஸ் நாட்டின் கால்பந்து கழகமான பாரிஸ் செயின்ட்-ஜெர்மைன அணிக்கு மாறினார். இதற்காக பி.எஸ்.ஜி. அணி பார்சிலோனாவிற்கு டிரான்ஸ்பர் பீஸாக 222 மில்லியன் யூரோ வழங்கியது.

நெய்மர் சென்றதால் அவருக்கு மாற்றாக முன்னணி வீரர் ஒருவரை பார்சிலோனா அணி தேடிவருகிறது. இங்கிலீஷ் பிரிமியர் லீக் தொடரில் விளையாடும் லிவர்பூல் அணியில் பிரேசில் நாட்டைச் சேர்ந்த பிலிப் கவுன்டினோ இடம்பிடித்துள்ளார்.

இவரை கடந்த 2013ல் இண்டர் மிலன் அணியில் இருந்து 8.5 மில்லியன் பவுண்டுக்கு லிவர்பூல் வாங்கியது. கடந்த சீசனில் லிவர்பூல் அணிக்காக 14 கோல்கள் அடித்தவர் கவுன்டினோ. இதனால் கடந்த ஜனவரி மாதம் லிவர்பூல், கவுன்டினோவுடனான ஒப்பந்தத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டித்தது.

இந்நிலையில் நெய்மருக்குப் பதிலாக கவுன்டினோவை வாங்க பார்சிலோனா விரும்பியது.

இதற்காக 100 மில்லியன் யூரோ கொடுக்க பார்சிலோனா முன்வந்தது. ஆனால், பார்சிலோனாவின் ஓஃபரை லிவர்பூல் நிராகரித்துவிட்டது.

# பல்லேகலே டெஸ்ட்

## இலங்கை அணியில் சமீர, லஹிரு காமேஜ் சேர்ப்பு



பல்லேகலேயில் நாளை சனிக்கிழமை தொடங்கும் 3ஆவது டெஸ்டுக்கான இலங்கை அணியில் துஷ்மந்த சமீர, லஹிரு காமேஜ் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது.

ஏற்கெனவே முடிவடைந்துள்ள இரண்டு போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்று தொடரில் 2:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருக்கிறது.

3ஆவது மற்றும் கடைசி போட்டி சனிக்கிழமை பல்லேகலேயில் தொடங்குகிறது.

இந்நிலையில் ஹேரத், பிரதீப் ஆகியோர் காயம் அடைந்துள்ளனர். இதனால் 3ஆவது போட்டியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இதன்காரணமாக துஷ்மந்த சமீர, லஹிரு காமேஜ் ஆகியோர் இலங்கை அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்திய அணியின் சுழற்பந்து வீச்சு சகலதுறை வீரர் ஜடேஜாவிற்கு ஒரு போட்டியில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளதால், அவருக்குப் பதிலாக அக்சர் படேல் சேர்க்கப்பட்டுள்ளார்.



# நிறம் மட்டும் அழகு கிடையாது – அபிநவ்

நிறம் மட்டுமே அழகு கிடையாது என்று இந்திய டெஸ்ட் அணி தொடக்க வீரர் அபிநவ் முகுந்த் டுவிட்டரில் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் சமூக வலைத்தளத்தில் இனவெறி கருத்து பதிவிடுவதை சாடியுள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தொடக்க வீரராக அபிநவ் முகுந்த் உள்ளார். இவர் தற்போது இலங்கை தொடருக்கான இந்திய அணியில் இடம்பிடித்துள்ளர். தமிழகத்தைச் சேர்ந்த இவரது கறுப்பு நிறத்தை கேலி செய்து இவருக்கு சமூக வலைத்தளம் மூலம் சிலர் தகவல் அனுப்பி உள்ளனர். இந்த இனவெறி கருத்தினால் கடும் அதிருப்தியும் வேதனையும் அடைந்த அபினவ் முகுந்த், இதுபற்றி டுவிட்டரில் தனது நண்பர்கள் மற்றும் பின்தொடர்பவர்களுக்கு ஒரு செய்தியை வெளியிட்டுள்ளார்.

அதில் அபிநவ் கூறுகையில், "10 வயது முதல் கிரிக்கெட் விளையாடி வருகிறேன். சிறிது சிறிதாக முன்னேறி தற்போதைய நிலையை அடைந்துள்ளேன். நாட்டுக்காக விளையாடுவதைப் பெருமையாகக் கருதுகிறேன். இதை நான் எழுதுவதற்குக் காரணம் அனுதாபம் பெறுவதற்காகவோ அல்லது மற்றையவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவோ அல்ல. ஒரு பிரச்சினை தொடர்பாக மக்களின் மனநிலையை மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான்.

15 வயது முதல் இந்தியா முழுவதும் இந்தியாவுக்கு வெளியேயும் பயணம் செய்து வருகிறேன். சிறுவயது முதல் என் நிறம் குறித்த மக்களின் எண்ணம் எனக்கு எப்போதும் புதிராக இருக்கும். கிரிக்கெட் அறிந்தவர்கள் இவ்விடயத்தை நன்கு அறிவார்கள்.

வெயிலில் நாள் முழுக்க நான் பயிற்சி மேற்கொள்வேன். ஒருமுறை என் நிறம் மாறியதற்காகவோ குறைந்ததற்காகவோ வருத்தப்பட்டதில்லை. ஏனெனில் நான் எதில் ஈடுபடுகிறேனோ அதை விரும்பிச் செய்கிறேன். வெயிலில் கடுமையாகப் பயிற்சி மேற்கொண்டதாலேயே [illegible] சில உயரங்களைத் தொட முடிந்தது. இந்தியாவின் அதிக வெப்பப் பகுதியான சென்னையைச் சேர்ந்தவன் நான். என் இளமைக் காலம் முழுவதும் மைதானங்களில் கழிந்துள்ளது.



என்னை வெவ்வேறு விதமான பெயர்களில் அழைத்துள்ளார்கள். சிரித்துக் கொண்டு கண்டுகொள்ளாமல் விட்டு விடுவேன். ஏனெனில் எனக்குப் பெரிய லட்சியங்கள் உண்டு. சிறுவயதில் இதனால் பாதிக்கப்பட்ட நான் பிறகு மனபலம் கொண்டவனாக மாறினேன். அவை என்னைக் கீழே தள்ள முடியாது. சிவப்பழகு மட்டுமே அழகல்ல நண்பர்களே.

[illegible] உண்மையாக வாழுங்கள். [illegible] கவனம் செலுத்துங்கள், சௌகரியமாக இருங்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# சைக்கிள் ஓட்டப் போட்டிக்கு விண்ணப்பிக்குக

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுக்கழகம் நடத்தும் வட மாகாண ரீதியிலான சைக்கிளோட்டப் பேர்ட்டியானது நாளை காலை 6.30 மணிக்கு நிலைய முன்றலில் ஆரம்பமாகும்.

மேலதிக விபரங்களுக்கு 077 498 5544 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை யின் 22 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு காரை நகர் வலந்தலைச் சந்தியில் உள்ள காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் இரத்ததான நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடை பெறவுள்ளது. (இ

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 221 7603


## பெயர் மாற்ற அறிவித்தல்

வெளிச்சவீட்டு ஒழுங்கை தும்பளை பருத்தித் துறையை வசிப்பிடமாகக் கொண்ட எட்வேட் சதீஸ்குமார் ஜெறோம்சன் ஆகிய எனது பெயர் பிறப்பு அத்தாட்சி பத்திரத்தில் மாத்திரம் யேசேன் என பதியப்பட்டுள்ளது. எனவே இன்று முதல் எட்வேட் சதீஸ்குமார் ஜெறோம்சன் என்றபெயரையே என் சார்ந்த சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

உண்மையுள்ள
100 எட்வேட் சதீஸ்குமார் ஜெறோம்சன்



## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

எம்முடன் பேசுங்கள்.

கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
மதசார்பற்றது 'ரகசியமானது ' இலவச சேவை
021 222 8117, 077 900 8776
வவுனியாவில்: (024) 324 4444
(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)


## போதையூட்டும் அரசு கெஹலிய விசனம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவார் என்கின்ற மக்கள் அபிப்பிராயம் தற்போது பொய்ப்பித்துள்ளது.

எனவே இளைய சமூகத்தினரை போதைக்கு அடிமையாக்கி விட்டு தமது ஆட்சியை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கூட்டு எதிர்க் கட்சி ஏற்பாடுசெய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பொரளையிலுள்ள என்.எம்.பெரேரா நிலையத்தில் நடை பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்க நாட்டைப்பொறுப்பேற்று ஆட்சி நடத்துவாராயின் பொருளாதார ரீதியில் இலங்கையைக் கட்டியெழுப்புவார் என்ற அபிப்பிராயம் கடந்த காலங்களில் மக்கள் மத்தியில் இருந்தது. எனினும் நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டரை வருட ஆட்சியின் பின்னர் தமது அபிப்பிராயம் தவறானது என்பதை மக்கள் புரிந்து கொண்டுள்ளனர். (இ-7)


## SATS-TECH ENGINEERS

மாதாந்தம் வெறும் நூற்று ஐம்பது மட்டும் செலுத்தி உங்கள் அபிமான தமிழ் சானல்களை கண்டுகளிக்க முடியும்.

28 தமிழ் சானல்கள்
Rs. 150/-
Only

150/=

No.298, K.K.S. Road, Jaffna (C-9276) :021 222 8812, 071 098 6224



## யாழ். மண்ணில் முதன் முறையாக சினிமா பாடல்களுடன்

பிரபல தென்னிந்திய பாடகர் கலைமாமணி

**உன்னிகிருஷ்ணன்**

**உத்ரா உன்னிகிருஷ்ணன்**

இணைந்து வழங்கும்

**இன்னிசை பாடிவரும்...**

மாபெரும்
திரை இசை நிகழ்ச்சி

மாலை 6.00 மணிக்கு

நாளை சனிக்கிழமை





(000)

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: K.T.பிரசாத்

டிக்கெட் கிடைக்குமிடங்கள்:
- பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 021 222 6693
- த போன் சொப், நெல்லியடி. 077 285 0285

யாழ். ஸ்ரான்லி வீதி
லிங்கம் கூல்பார் முன்பாக
உள்ள மைதானம்
(வெலிங்டன் தியேட்டர்)

Event Management C.A.C

Tel: 077 550 4910

டிக்கெட்டுக்கள்: 300/= 500/= 1000/=


## 1 ஆம் ஆண்டு நீங்காத நினைவுகள்

அமரர்.

## தில்லையம்பலம் சுதந்திரபாலன்

(ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர்)



தோற்றம்
1947 – 08 – 19

மறைவு
2016 – 07 – 23

திதி: அபரபக்க சதுர்த்தி

ஆண்டொன்று ஆனாலும் ஆறமுடியவில்லை-எம்மால்
இன்றுவரை ஏற்க முடியவில்லை-உங்கள் இழப்பை
நம்ப முடியாமல் தவிக்கின்றோம்
கலங்கி நிற்கின்றோம் நீங்களின்றி

பெற்றோர்க்குப் பெருமை சேர்த்து-உற்றோர்க்கு
உறுதுணையாய் வாழ்ந்தீர்கள்...
உடன்பிறந்தோர்க்கு மட்டுமன்றி-உடன் பிறவாதோர்க்கும்
நல்லதொரு சகோதரனாய் நின்றீர்கள்-நீங்கள்

கைபிடித்த மனையாளுக்கும் பெற்றெடுத்த மகன்களுக்கும்
நல்லதொரு வழிகாட்டியாய் இருந்தீர்கள்-எமக்கெல்லாம்
ஏணியாய் நின்று உயர்த்தி விட்டீர்கள்-அப்பா...

கொண்ட கடமையிலும் செய்த சேவையிலும் நெறிதவறாமல்
ஏற்ற கொள்கையில் வழிதவறாமல் வாழ்ந்து காட்டினீர்களே-கம்பீரமாய்
உங்கள் நினைவுகளும் நீங்கள் காட்டிய வழிமுறைகளும்
எங்கள் வாழ்வை வழிநடத்தும்

மறக்காது உங்கள் நினைவுகள்-இந்த
ஓராண்டில் நினைவுகூர்ந்து நிற்கின்றோம்
என்றும் போல் எம்மோடு இருந்து ஆசிதந்து
வழிநடத்துங்கள் எம்மை.

ஞானபண்டித வித்தியாசாலை வீதி,
கொக்குவில் மேற்கு.

(099)

நினைவுகளில்,
குடும்பத்தினர்.

## இராசி பலன்

11.08.2017
(ஆடி 26, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
சதுர்த்தசி முன்னிரவு 11.30 மணிவரை
பூரட்டாதி காலை 6.46 மணிவரை
சுபநேரம் 6.04-7.34 மணிவரை
இராகுகாலம் 10.34-12.04 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரம் | | சூரி.செவ், சுக்.ராகு. புத |
| கேது | | | |
| | சனி | | குரு |

**மேடம்:** வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பயணத்தால் பலனுண்டு.

**இடபம்:** செல்வாக்கு மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, உறவினர்களின் வருகையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், அரசு வழியில் அனுகூலமுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**கடகம்:** வேலைச்சுமை கூடினாலும் பலன் கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள்.

**சிம்மம்:** வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், நட்பொன்று பகையாகலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், களஸ்திர நன்மையுண்டு, எடுத்த காரியங்கள் கைகூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, உற்சாகமான நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**விருச்சிகம்:** பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபசெலவும் ண்டு.

**தனுசு:** பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள், சுபசெலவுகள் இடம்பெறலாம், பயணங்கள் கைகூடும்.

**மகரம்:** சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.

**கும்பம்:** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் அகலும், நண்பர்களால் வளர்ச்சி கூடும், கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள்.

**மீனம்:** குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது, திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிதியமைச்சர் மங்கள சமரவீரவால்
# உப சுங்க தடுப்புப்பிரிவு அலுவலகம் தெல்லியூரில் நேற்று திறந்து வைப்பு




படங்கள்: பொ.சோபிகா

இலங்கை சுங்கத் திணைக்களத்தின்உப சுங்கத் தடுப்புப் பிரிவு அலுவலகம் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவினால் நேற்றைய தினம் காங்கேசன்துறை வீதி தெல்லிப்பழையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மதகுரு க்கள், நிதி இராஜங்க அமைச்சர் ஏரான் விக்கிரமரட்ன, சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே, யாழ். மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், சுங்கத்திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலர்கள், பொலிஸார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(இ-9-104)

# மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் திடீரென மயக்கம்

## மதிலுக்கும் மின்கம்பத்துக்கும் இடையில் சிக்குண்டார்



மோட்டார்சைக்கிளைச்செலுத்தி சென்ற இளைஞனுக்கு திடீரென ஏற்பட்ட மயக்கம் காரணமாக மதிலுடன் மோதுண்டதில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த ப.சயந்தன் (வயது-28) என்ற இளைஞனே மேற்படி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி சென்ற குறித்த இளைஞன் சிறுப்பிட்டி பகுதியில் திடீரென ஏற்பட்ட மயக்கம் காரணமாக மதிலுக்கும் வீதியிலிருந்த மின்கம்பத்துக்கும் இடையில் மோட்டார்சைக்கிளை மோதியதில் விபத்து ஏற்பட்டது.

அப்போது குறித்த இளைஞன் மோட்டார் சைக்கிளுடன் மதிலுக்கும் மின்கம்பத்துக்கும் இடையில் சிக்குண்டுள்ளார். சம்பவத்தை அவதானித்த பொதுமக்கள் இளைஞனை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

குறித்த இளைஞனுக்கு திடீரென மயக்க நிலை ஏற்பட்டதாகவும் தன்னால் தொடர்ந்து மோட்டார் சைக்கிளை செலுத்த முடியாததனால் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது என பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் அவர் தெரிவித்துள்ளார். மேலதிகவிசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.(இ-9)

## வீதிகளில் தேங்கிக் கிடக்கும் கழிவுகளால் மக்கள் அச்சம்




குருநகரிலுள்ள வடிகால்களை அண்டிய வீதிகளில் தேங்கியுள்ள கழிவுகளை மாநகர சபையினர் உரிய முறையில் அகற்றாததால் வீதிகளில் கழிவுகள் தேங்கி துர்நாற்றம் வீசுவதால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் இருப்பதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(இ-10-109)





காரைநகர் இந்துக் கல்லூரியில் 2016ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா அண்மையில் கல்லூரி அதிபர் சிவந்தினி வாகீசன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)





யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் அண்மையில் கந்தமடம் ஸ்ரீலஸ்ரீ சுவாமி பண்டிதர் எனும் நூல் வெளியிடப்பட்டது. பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கலந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் போராட்டம் வலுத்தாலும் இலங்கை அரசின் கொள்கை மாறாது

## அமைச்சர் அமரவீர விடாப்பிடி



தமிழ் நாட்டில் எத்தகைய போராட்டம் நடத்தப்பட்டாலும் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்தும் நடைமுறைகளை அரசு கைவிடாது என கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. கடந்த 8ஆம் திகதி 49 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதற்கு எதிராக தமிழ் நாட்டில் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது. இதனால் எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை.

இந்நிலையில், மீனவர் விவகாரம் குறித்து அந்நாட்டின் மத்திய அரசுடன் இராஜதந்திர மட்டத்தில் பேச்சுக்களை நடத்தி வருகின்றோம். அவை ஆரோக்கியமானவையாகவே இருக்கின்றன.

கடந்த ஆட்சியில் இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டாலும் படகுகளுடன் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஆட்சி மாற்றத்தின் பின்னர் அந்த நிலைமை மாறியது. எந்தக் காரணம் கொண்டும் படகுகளை விடுவிக்கவில்லை.

இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் நுழைந்து தடைசெய்யப்பட்ட முறையில் மீன்பிடியில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது.

மேலும், யுத்தத்திலிருந்து மீண்ட வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் நாம் அதிக கவனம் செலுத்தியுள்ளோம் என கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

## ரயன் ஜயலத் உட்பட 5பேரை கைதுசெய்ய பிடியாணை

மருத்துவப் பீட மாணவர் செயற்பாட்டுக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ரயன் ஜயலத் உட்பட 5 பேரை கைது செய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால், இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ரயன் ஜயலத்தை கொழும்பில் அண்மையில் கைது செய்ய முயற்சித்த போது அங்கு பதற்றமான நிலைமை ஏற் பட்டது.

வெள்ளை வானில் சிவில் உடையில் வந்த பொலிஸார் கைதுசெய்ய முயற்சித்த போது இந்த பதற்றம் ஏற்பட்டது.

அத்துடன், மக்கள் விடுதலை முன்னணி உட்பட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் தலையிட்டு ரயன் ஜயலத் கைது செய்யப்படுவதை தடுத்தனர்.

இதன் பின்னர் பல ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கூட்டங்களில் ரயன் ஜயலத் கலந்து கொண்டிருந்ததுடன் அது தொடர்பான காட்சிகளை ஊடகங்கள் வெளியிட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)




காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டறியும் நோக்குடன் மருதங்கேணி பிரதேச செயலகம் முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 149 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. (இ-10-19)

## "நாத நர்த்தன வர்ணம் - 2017" நடன ஆற்றுகை சாவகச்சேரியில்

மரபுக் கலைகள், கலாசார விழுமியங்களைத் தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்கும் நோக்குடன் இக் கலைகளில் மாணவர்களின் ஆற்றுகை திறன்களை மேம்படுத்தும் வகையிலும் மூன்றாவது தடவையாக தென்மராட்சிக் கல்வி வலயத்தினால் நடத்தப்படும் ''நாத நர்த்தன வர்ணம்-2017''எனும் கருப்பொருளிலான நடன ஆற்றுகை நிகழ்வு நாளை 12ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன் விழாமண்டபத்தில் இடம்பெறும்.

இந் நடன நிகழவுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி அபிவிருத்திக்கழக பிரித்தானியக் கிளைத் தலைவர் வைத்திய கலாநிதி ஆ.புவிநாதன், கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் றஜிதா சின்னத்துரை மற்றும் யா/டிறிபேர்க் கல்லூரி முன்னாள் அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர்.

இந்நிகழ்வில் 14 நடன ஆற்றுகைகள் இடம்பெறவுள்ளதாகவும் இந்நிகழ்வினை மாணவர்களும் பொதுமக்களும் கண்டுகளிக்க முடியும் எனவும் தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.(இ)

## பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு ஐந்து புதிய உறுப்பினர்கள் நியமனம்





வடமாகாண ஆணைக் குழுவின் புதிய உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்களை வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே நேற்றுக் காலை 9.30 மணியளவில் அலுவலகத்தில் வைத்து வழங்கினார்.

ஆளுநரால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத் தேர்வில் தோற்றிய 15 பேரில் 5பேர் நிர்வாக உறுப்பினர்களாக ஆணைக்குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஓய்வுபெற்ற யாழ்.மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் செல்லையா பத்மநாதன், வடமத்திய மாகாணத்தின் ஓய்வு நிலை கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். கலகொட, அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் ஓய்வு பெற்ற பணிப்பாளர் சம்சுதின் லீலாவுதீன், ஓய்வுபெற்ற வடமாகாண பிரதம உள்ளக கணக்காய்வாளர் நாகமணி இராசநாயகம், ஓய்வு பெற்ற உதவி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கதிரவேலு இராசையா ஆகியோர் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந் நிகழ்வில் ஆளுந ரின் செயலாளர் எல்.இளங்கோவன், ஆளுநரின் இணைப்பு செயலர் ஏச்.சுமணபால பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மோகன் ராஜ், வடமாகாண நிர்வாக செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நியமனக்கடிதங்களை பெற்றுக்கொண்டவர்களுக்கு வாழ்த்து தெரிவித்த ஆளுநர் வடமாகாணத்தில் அரச அலுவலங்களில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதிலும், அரச அதிகாரிகளுக் கான பதவி உயர்வுகளை முறைப்படி வழங்குவதிலும், அரச உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் தொடர்பிலும் மிகக் கூடிய அக்கறை செலுத்தி பணியாற்றுமாறு வலியுறுத்தினார். அனைத்து விடயங்களிலும் பொதுச் சேவைகள் ஆணைக்குழு காலம் தாழ்த்தாது செயற்பட வேண்டும் அப்போதுதான் அதிகாரிகள் திறம்பட செயலாற்ற முடியும் என அவர் தெரிவித்தார். (இ-60)



பொன்னாலை வெண்கரம் படிப்பகத்தின் ஆரம்ப நிகழ்வும் பெயர்ப்பலகை திரைநீக்கமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை, தமிழர் பண்பாட்டு நிகழ்வாக இடம்பெற்றது. வெண்கரம் செயற்பாட்டாளர் மு.கோமகன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்விற்கு இணைப் பிரதம விருந்தினர்களாக டென்மார்க் நாட்டின் டெமக்கிரட்டிவ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரோல்ஸ் ரவின்ஸ் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோர் கலந்துகொண்டனர். (படங்கள்: பொ.சோபிகா)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## குடிமனைகளை ஆக்கிரமிக்கும் விஷப்பாம்புகள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் வரட்சியான காலநிலை தொடர்ந்து நிலையில் தற்பொழுது ஓரளவு மழை பெய்து வரும் நிலையில் விசத் தன்மையுடைய உயிரினங்கள் குடிமனைகளை நோக்கி படையெடுத்துள்ளதாக பொது மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் விஷக்கடியில் இருந்து தங்களை பாதுகாக்கும் நோக்கில் பொதுமக்கள் சுற்றுச் சூழலை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த காலங்களில் வரட்சியான காலநிலை தொடர்ந்து வந்ததுடன், 8 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்என்றும் காலநிலையில் ஏற்பட்ட மாற்றத்தால் தற்போது நாட்டின் பல பாகங்களிலும் மழை பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8)

# வரும் முன் காப்போம்
# வெள்ளப்பெருக்கை தடுக்க நடவடிக்கை



வவுனியா திருநாவற்குளம் பகுதியில் மழைகாலத்தின் போது ஏற்படும் வெள்ளப் பெருக்கை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.நேற்று முற்பகல் 10.30 மணிக்கு வவுனியா, திருநாவற்குளம் பிரதேசத்தை உள்ளடக்கிய தாண்டிக்குளம் மக்களுடன் வவுனியா நகர சபை மேற்கொண்ட சந்திப்பின் போதே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக திருநாவற்குளம் பகுதியில் உள்ள வாய்க்கால்களை சீர்மைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக தமிழ் தேசிய இளைஞர் கழகத்தால் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் நிதி வவுனியா நகரசபையூடாக வழங்கப்பட்டுள்ளது. வாய்க்காலை சீரமைத்து வடிந்தோடும் நீரை குளத்திற்குச் செல்ல விடுவதன் மூலம் அப்பகுதியில் ஏற்படும் வெள்ளப்பெருக்கை ஓரளவேனும் கட்டுப்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டமிடல் மற்றும் கலந்துரையாடலில் வவுனியா நகரசபை நிர்வாக உத்தியோகத்தர் நிஸங்க செனவிரத்ன, தாண்டிக்குளம் கிராமசேவகர் யோகநாதன், இளைஞர் கழக மாவட்ட சம்மேளன தலைவர் சு.காண்டீபன், தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டுக்கழக தலைவர் பே.அனோஜன் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (3-8-250)

## வாழ்வாதார உதவிகள்

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் 13ம் கட்டை குமாரசாமிபுரம் விசுவமடுவைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு சுயதொழில் முயற்சிக்கான வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்தத்தின் போது காயமுற்று வலது கையினை முற்றாக இழந்து இடதுகை பெருவிரலும் இழந்து கால்களும் காயங்களுக்கு உள்ளான நிலையில் உள்ள முன்னாள் போராளியான13ஆம்கட்டைகுமாரசாமிபுரம் விசுவமடுவை சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவருக்கு நீர் இறைக்கும் இயந் திரமும் அதற்கான தூவல் நீர்ப்பாசனத்துக்கான குழாய்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் வட்டு இந்து வாலிபர் சங்க பொருளாளரும் சங்கானை பிரதேச செயலக ஊழியருமான கலைச்செல்வன் ராகுமானினால் பயனாளியிடம் குறித்த பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளன. (3-8)

# தடம்புரண்டது பாரவூர்தி



அம்பாறையில் இருந்து கிளிநொச்சி நோக்கி செங்கற்களுடன் சென்ற ஹண்டர் ரக பாரவூர்தி ஒன்று வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று அதிகாலை 1மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

அம்பாறையில் இருந்து செங்கற்களை ஏற்றிக் கொண்டு ஏ-9 வீதி ஊடாக கிளிநொச்சி நோக்கிச் சென்ற ஹண்டர் ரக பாரவூர்தி வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் பயணித்த போது குறித்த வாகனத்தின் வில்லுத்தகடு உடைந்தமை காரணமாக கட்டுப்பாட்டையிழந்து தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.எனினும், வாகன சாரதி க்கோ அதில் பயணித்த உதவி யா ளருக்கோ எந்தவித காயமும் இன்றி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (3-8-15-250)

# சிறந்த பாடகர் தெரிவுப் போட்டி

(மல்லாவி )

சமூகசேவை அமைச்சும் மற்றும் முதியோர் செயலகமும் இணைந்து நாடு தழுவிய ரீதியில் நடத்தும் சிறந்த பாடகரைத் தெரிவு செய்யும் போட்டியினை முன்னிட்டு வவுனியா மாவட்டச் செயலக மட்டத்திலான மூத்த பிரஜைகளில் இருந்து சிறந்த பாடகரைத் தெரிவு செய்யும் போட்டி நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை காலை வவுனியா மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.எஸ். ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்றது.




இத்தெரிவுப் போட்டியின் போது, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் இருந்து வேலுப்பிள்ளை - முத்தையாவும் வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் இருந்து வேலு - மகேஸ்வரனும், வவுனியா பிரதேச செயலக பிரிவில் இருந்து கற்பகபுரத்தை சேர்ந்த சுப்ரமணியம் - தங்கராசாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்போட்டியின் நடுவர்களாக பிரபல பாடகரும் இசையமைப்பாளருமான இசை இளவரசர் கந்தப்பு ஜெயந்தன் மற்றும் கிற்றார் வாத்தியக் கலைஞர் காந்தன் ஆகியோர் கடமையாற்றியுள்ளனர்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், உளவள பயிற்சியாளர்கள், போட்டியாளர்கள், ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். (3-8-15)

# வேல்தாங்கிய பாதயாத்திரை

வவுனியாவிலிருந்து இந்த வருடம் 7ஆவது தடவையாக நல்லைக்கந்தன் திருத்தலத்திற்கான வேல் தாங்கிய பாதயாத்திரை எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

குறித்த யாத்திரை எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியளவில் வவுனியா வேப்பங்குளம் அருள்மிகு ஸ்ரீ பத்திர காளி அம்பாள் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லூர் கந்தனுடைய தேர்த்திருவிழா 20 ஆம் திகதி நடைபெறவுள்ளதை முன்னிட்டு வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்திலிருந்து வேல் தாங்கிய நடை பாதயாத்திரை 14ஆம் திகதி ஆரம்பமாகி 20 ஆம் திகதி நல்லூர் கந்தன் ஆலயத்தினை அடையவுள்ளது.

பிரதான ஏ-9 வீதி வழியாக செல்லும் வீதியிலுள்ள இந்து ஆலயங்களில் தரித்து அங்கு இடம்பெறும் பூஜை வழிபாடுகளிலும் கலந்து 6 நாட்கள் தொடர்ந்து பாத யாத்திரையாக சென்று 114 ஆவது ஆலயமாக நல்லூர் கந்தன் ஆலயத்தினை 20 ஆம் திகதி அடையவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் கலந்து கொள்ளவுள்ள பக்தர்கள்13 ஆம்திகதி வவுனியா வேப்பங்குளம் ஆலயத்திற்கு வந்து பாத யாத்திரையில் பங்குகொள்வதுடன், வேல் தாங்கிய பாதயாத்திரை அடியார்களுக்கு பிரதான ஏ-9 வீதியிலிருக்கும் சகல இந்து அறங்காவலர் சபையினர், ஆலய குருமார்கள் ஆகியோர் பாதயாத்திரை அடியார்களுக்கு பூரண ஒத்துழைப்புக்களை வழங்குமாறு வவுனியா வேப்பங்குளம் அருள்மிகு ஸ்ரீபத்திர காளி அம்பாள் ஆலய நிர்வாகி கு. ஜெயராணி கேட்டுக் கொண்டுள்ளார். (8)

# உலக செஞ்சிலுவை சங்கத்தின் பிரதிநிதிகள் கிளிநொச்சி விஜயம்



உலக செஞ்சிலுவை சங்கத்தின் இலங்கைக்கான வடக்கு இணைப்பாளர் உள்ளிட்ட சர்வதேச பிரதிநிதிகள் அண்மையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில் தற்போது கிளிநொச்சி கிளையினூடாக மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும்வேலைத்திட்டங்கள் தொடர்பில், இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளையின் தலைவர் வேழமாலிகிதனுடன் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது, எதிர்காலத்தில் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கேட்டறிந்துள்ளனர்.

குறித்த சந்திப்பில் கிளிநொச்சி இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் வேழமாலிகிதன் மற்றும் செயலாளர் சேதுபதி, கிளையின் நிறைவேற்று அலுவலர் கலந்து கொண்டு விளக்கமளித்திருந்தனர். (3-8)








முறிகண்டி தென்னிந்திய திருச்சபை புனித பவுல் சிறுவர் கழகத்திற்கு ஒலியமைப்பு வசதிக்கான சாதனங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. வடமாகாண சபை உறுப்பினர் பொ.ஐங்கரநேசனுக்கு மாகாண சபை ஊடாக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து குறித்த ஒலியமைப்பு சாதனங்கள் கொள்வனவு செய்யப்பட்டு கையளிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாவலித் திட்டக் குடியிருப்பாளர்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு இன்று

மகாவலி திட்டத்தில் குடியிருப்பவர்களுக்கு ஒரு இலட்சம் காணி உறுதிகளை வழங்கும் தேசிய திட்டத்தின் கீழ் வளவை மற்றும் மகாவலி "எச்" வலய விவசாயிகளுக்கான காணி உறுதிகள் வழங்கும் நிகழ்வு இன்றும் நாளையும் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் நடைபெறும்.

மகாவலி குடியேற்றவாசிகள் நீண்டகாலமாக முகம் கொடுத்துவரும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கி ஒரே தடவையில் கூடுதலானோருக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு இதுவாகும். வளவை விவசாயிகளுக்கான உறுதிகள் இன்று 11 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு எம்பிலிப்பிட்டிய கம்உதாவ விளையாட்ட ரங்கிலும், "எச்" வலய விவசாயிகளுக்கான உறுதிகள் நாளை 12 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு தலாவ பிரதேச சபை விளையாட்டரங்கிலும் ஜனாதிபதி தலைமையில் வழங்கப்படவுள்ளன.

அனைத்து இலங்கையர்களுக்கும் தமக்கென காணி மற்றும் வீட்டு உரிமை இருக்க வேண்டும் எனும் கொள்கைக்கமைய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன ஆலோசனைக்கேற்ப இந்த காணி உறுதிகள் வழங்கப்படவுள்ளன.

இதன் மூலம் அந்த மக்களின் வாழ்க்கை ஒளிபெறுவதுடன், பொருளாதார சுபீட்சத்தை அடைவதற்கும் வாய்ப்பு ஏற்படும் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (8)



புத்தூர் மேற்கு கிந்துசிட்டி மயானம் தொடர்பாக முதலமைச்சருடன் சமூக நிதிக்கான வெகுஜன அமைப்பின் பிரதிநிதிகளும் கலைமதி சனசமூக நிலைய நிர்வாகத்தினருக்கும் இடையில் நேற்று முன்தினம் 9ஆம் திகதி புதன்கிழமை வடக்குமாகாண முதலமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கமும் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் பொதுச்செயலாளரும் கலந்து கொண்டனர்.

# கட்டட திறப்பு விழாவும் சான்றிதழ் வழங்கலும்

இளவாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவும் இரண்டாம் மொழிக் கற்கை நெறிக்கான சான்றிதழ் வழங்கலும் பொதுக் கூட்டமும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இளவாலை கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் தலைவர் சி.குமாரலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக வலி. வடக்கு பிரதேச செயலாளர் ச.சிவசிறி, கௌரவ விருந்தினராக கலாபூஷணம் சைவப் புலவர் சு.செல்லத்துரை, சிறப்பு விருந்தினர்களாக வலி வடக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். பரணிகரன், தெல்லிப்பழை கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி ம.பத்மாதேவமலர், இளவாலை வடக்கு கிராம சேவையாளர் பேனாட் சாள்ஸ் மரின் ஜெனிற்ரா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (8-9)

# முன்பள்ளி கட்டடம் திறந்து வைப்பு



(மல்லாவி)

புலம்பெயர் நாடுகளில் வாழும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கடந்த 1990 - 1991, ஆண்டுக்கான பழைய மாணவர்களின் நிதியுதவியுடன் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கேப்பாப்பிலவு கிராம அலுவலர் பிரிவில் உள்ள பிலவுக்குடியிருப்பு கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்கான வகுப்பறைக் கட்டடம் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

புலம்பெயர் நாடுகளில் வாழும் யாழ்.பல்கலைக்கழகத்தின் 1990 - 1991 ஆம் ஆண்டுக்கான கலை மற்றும் வர்த்தக பிரிவு மாணவர்கள் சிலரின் நிதியுதவியுடன் புதிதாக அமைக்கப்பட்ட முன்பள்ளி வகுப்பறைக் கட்டடத்தை கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் எஸ். குணபாலன் வைபவரீதியாக திறந்து வைத்து முன்பள்ளி நிர்வாகத்திடம் கையளித்துள்ளார்.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட செயலக தொழில்நுட்ப உத்தியோகத்தர், அதிகாரிகள் மற்றும் இலங்கை தமிழரசு கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் அணி செயலாளர் பீற்றர் இளஞ்செழியன் உட்பட கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர். (3-8-15)

# தென்கொரியாவில் பலியான இலங்கை இளைஞன்

(சியோல்)

நூல் சுற்றும் இயந்திரத்தில் சிக்கி இலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவமொன்று தென் கொரியாவில் இடம் பெற்றுள்ளது.

நூல் சுற்றும் இயந்திரமொன்றில் நூல் சிக்கிக் கொண்டிருந்ததைக் கண்டு அதை சரி செய்வதற்காக சென்ற வேளையிலேயே குறித்த இளைஞரின் உடலானது நூல் சுற்றும் இயந்திரத்தில் சிக்குண்டுள்ளது.

இந்நிலையில் குறித்த இளைஞர் இயந்திரத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர் கேகாலையைச் சேர்ந்த சாமி சோமிய பாலித எனும் 35 வயதுடைய இளைஞர் என தெரிவிக்கப்படுகின்றது. (8)

# செஞ்சோலை படுகொலையின் நினைவேந்தல் நிகழ்வுகள்

முல்லைத்தீவு மாவட்டம் வள்ளிபுனம் பகுதியில் அமைந்திருந்த செஞ்சோலை சிறுமிகள் காப்பகம் மீது கடந்த 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதியன்று இலங்கை வான் படையினர் நடத்திய திட்டமிட்ட குண்டுத் தாக்குதலில் பாடசாலை மாணவிகள் 61 பேர் உடல் சிதறிப் பலியானதுடன் 129 பேர் காயமடைந்திருந்தனர்.

மேற்படி சம்பவத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் 11 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3. 30 மணிளவில் வள்ளிபுனத்திலுள்ள செஞ்சோலை வளாக வீதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது. (3-8)

# விபத்து

(யாழ்ப்பாணம்)

அதிகாலை வேளை நடைப்பயிற்சியில்ஈடுபட்டுக் கொண்டிருந்த நபரை பின்னே வந்த மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை பருத்தித்துறை ஆவரங்கால் சந்தியில் அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த கந்தன் சிவபாதம் (வயது-69) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (7-8-30)



வடக்கு மாகாண கல்வி திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண கல்வி திணைக்களத்திற்குட்பட்ட 12 கல்வி வலயங்களுக்கிடையில் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தன்று நடைபெற்று வரும் முழுநிலாக் கலை விழாவின் நடப்பாண்டுக்குரிய 8 ஆவது ஓகஸ்ட் மாத கலை விழா கடந்த வாரம் மன்னார் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.எஸ்.சுகந்தி தலைமையில் மன்னார் அல் அஸ்ஹர் தேசிய பாடசாலையில் நடைபெற்ற போது, விருந்தினர்கள் பாடசாலை மாணவிகளின் பாரம்பரிய இனிய வாத்தியக் கருவிகளின் இசை முழக்கத்துடன் நிகழ்வு மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவதையும் நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளை வழங்கிய மாணவர்கள், ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மல்லாவி செய்தியாளர்)



கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்கு முன்பாக சமுர்த்தி பயனாளிகளின் போராட்டம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராண எழுச்சி விழாவின் 15 ஆம் நாள் நிகழ்வு இன்று

நல்லூர்கந்தசுவாமிஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு கந்தபுராண் வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும்நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சி விழாவின் 15 ஆம் நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை6.30மணிக்குநல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,வண்ணார்பண்ணைசிவன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சொ.விக்னேஸ்வரக் குருக்கள் முன்னிலையில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு மதி.ஹேமலோஜினி குமரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ் . இந்துக்கல்லூரி அதிபர் ஐயம்பிள்ளை தயானந்தராஜா கலந்து கொள்வார்.

இந் நிகழ்வில் கந்தபுராணம் தொடர்பான ஆன்மீக சொற்பொழிவினை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி லலீசன் நிகழ்த்துவதுடன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும். (3)

# தெய்வீக சிறப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் யாழ்.மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள் நெறி விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் திரு மதிஹேமலோஜினிகுமரன்தலைமையில்இடம்பெறும். இந்நிகழ்வில் விருந்தினராக காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி கலந்து கொள்வார். இந்நிகழ்வில் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட நல்லூர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை, நாடகம், துரவடிப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம், பேச்சு, காமாட்சி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம், வேதபாராயணம், அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நாடகம் என்பன இடம்பெறும். (3)

# தெய்வீகச்சிறப்பு நிகழ்வுகளில் இன்று 'தர்மம் தலைகாக்கும்' சொற்பொழிவு

நல்லூர்கந்தசுவாமிஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபை நடத்தும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகளின் 15 ஆம் நாள் நிகழ்வு இன்றுவெள்ளிக்கிழமைமாலை 6.45 மணிமுதல் இரவு 7.45 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் சைவப்புலவர் சிவஸ்ரீ கதிர்குமார சுவாமி சுமுக லிங்க சிவாச்சாரியார் தலைமையில் இடம்பெறும்.

இதில் "தர்மம் தலைகாக்கும்" எனும் தலைப்பில் சைவ நெறிச் சன்மார்க்கர் திருமதி தர்ப்பனா சுதர்சன் சொற்பொழிவாற்றுவார். (3)

# "பற்றின்மை" ஆன்மீக அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ். சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரையில் (ஞான யக்ஞம்) இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.15 மணிமுதல் 8 மணிவரை இல.700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் "பற்றின்மை" எனும் தலைப்பில் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆன்மீக அருளுரை வழங்குவார். (3)

# தெய்வீக இசைப் பேருரை

நல்லூர்க் கந்தப் பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவமகா சபை நடத்திவரும் தெய்வீக இசைப் பேருரையில் (கதாப்பிரசங்கம்) இன்றைய நிகழ்வுகள் மாலை 6.30 மணிமுதல் இரவு 8 மணி வரை நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் இடம்பெறும். கம்பராமாயணம் பற்றிய இசைப் பேருரையில் இன்று " கைகேயி வரம்" எனும் தலைப்பில் நல்லைக் குருமணியின் பிரமத வாரிசு கானகதா வாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். (3)

# தெய்வீக இசையரங்கின் 15-ம் நாள் நிகழ்வு இன்று

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 15 ஆம் நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மண்மண்டபத்தில் இடம்பெறும். இதில் பாட்டு- தேனுகா கருணாகரன், வயலின்- சுவர்ணாங்கி சுதர்சன், மிருதங்கம்- சி.செந்தூரன், கெஞ்சிரா- நா.சிவசுந்தரசர்மா ஆகியோர் கலந்து கொள்வர். (3)

# ஆதிவாசிகளின் மொழியை பாதுகாத்து பராமரிக்கவும்

(கொழும்பு)

எம்மை பாதுகாக்கும் பொறுப்பை அமைச்சுக்கு கையளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆதிவாசி தலைவர் ஊருவரிகே வன்னில எத்தோ தெரிவித்தார்.

மேலும் ஆதிவாசிகளின் மொழியை பாதுகாத்து பராமரிக்கும் பொறுப்பும் கடமையும் தேசிய மொழி அமைச்சுக்கு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மஹியங்கனை போரபெத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஆதிவாசிகள் தினம் கொண்டாடப்பட்டது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# ஊழலை ஒழிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

## பிரதியமைச்சர் பரணவிதாரண கூறுகிறார்

நாட்டின் தற்போதைய அரசாங்கம் ஊழலை ஒழிக்க் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவிதாரண தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்திற்குள் எவரும் ஊழலில் ஈடுபட முடியாது. அவ்வாறு ஊழல். மோசடிகளில் ஈடுபட்டால் அது தெரிய வரும் என்பதுடன் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதியமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# வங்கியில் கொள்ளை முயற்சியின் போது பாதுகாப்பு ஊழியர் சுட்டுப் படுகொலை!

அத்திட்டிய பகுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்திட்டிய பகுதியிலுள்ள தனியார் வங்கி ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட கொள்ளைச் சம்பவத்தையடுத்து அதை தடுக்க முயன்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மீது கொள்ளையர்கள் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் கொள்ளையர்களின் துப்பாக்கிப்பிரயோகத்தில் சிக்கி ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் உயிரிழந்த நிலையில் மற்றுமொரு பாதுகாப்பு உத்தியோகத்தர் பலத்த காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த கொள்ளைச் சம்பவம் தொடர்பாக அத்திட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# இலங்கை மக்களின் அடையாள அட்டையில் ஏற்படப்போகும் வியத்தகு மாற்றம் இதுதான்

இலங்கை மக்களுக்கு புதிய வகையான தேசிய அடையாள அட்டை முறைமையினை அறிமுகம் செய்யவுள்ளதாக ஆட்பதிவுத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த அறிமுகமானது எதிர்வரும் மாதங்களிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளதென்று மேற்படிதிணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி இலங்கையில் தற்போது பயன்பாட்டிலுள்ள தேசிய அடையாள அட்டை இரண்டு கட்டங்களாக மாற்றப்படவுள்ளது. 'ஸ்மார்ட் தேசிய அடையாள அட்டை' எனப்படும் இந்த முறைமை தற்போது நடைமுறையில் உள்ள அடையாள அட்டைக்குப் பதிலாக அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இரண்டு கட்டங்களில் முதற் கட்டமாக. நாட்டில் புதிதாக அடையாள அட்டை பெற்றுக் கொள்பவர்களுக்கு ஸ்மார்ட் அடையாள அட்டையை வெளியிடுவதாகவும். இந்த அடையாள அட்டையில் பல பாதுகாப்பு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இரண்டாம் கட்டத்தில் 16 வயதிற்கு மேற்பட்ட அனைவரதும், நடைமுறையில் உள்ள அடையாள அட்டை மீளப் பெறப்பட்டு புதிய ஸ்மார்ட் அடையாள அட்டை வெளியிடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## நல்லூர் கந்தனுக்கு இன்று பதினைந்தாம் திருவிழா



## வேலவனை வணங்கிடும் என் மனம்

வேலவனை மறவாதே தினம் - நல்லூர்
வேலவனை வணங்கிடுவாய் தினம்
வேலணைக்குச் சென்ற போதும்-நல்லூர்
வேலவனை வணங்கிடும் என் மனம்

நல்லைக்குகன்

## தீர்வொன்று தரவேண்டுமே!

அந்தாதி அலங்காரம் அநுபூதியே
அடியார்கள் முறையோதி உனைப்பாடியே
வந்தாருன் திருவாசல் வடிவேலனே
வள்ளிதெய் வானைதன் மணவாளனே
மந்தாரம் மகிழ்கொன்றை அணிமார்பனே
மன்றாடி மகனான குமரேசனே
நந்தாத வரமீயும் நல்லூரானே
நாம்வாழத் தீர்வொன்று தரவேண்டுமே!

நயினை இராகுலன்

## மரண பயம் போக்கி வைப்பாய்

சரணம் என்று வந்து நின்றால்
சங்கடங்கள் தீர்த்து வைப்பாய்
கரணமிட்டுத் தொழுது கொண்டால்
காரியங்கள் கைகூட்டுவாய்
மரண பயம் போக்கி வைப்பாய்
மண்ணாசையை பிடுங்கிடுவாய்
சரணடைந்தேன் ஐயனே முருகையனே
சேர்த்திடு உன்காலடிக்கு விரைந்து

மாளந்தன்
அல்வாய்.

## தேவ லோகமும் நல்லூரோ

பல்லவி

முருகனைக் கண்டேனய்யா-அவன்
மலையேறி ஓடினான் நல்லூரில்

அனுபல்லவி

மலையும் நகர்ந்ததோ நல்லூருக்கு-அவன்
தன்னையே காட்டினான் எந்தனுக்கு


சரணம்

தேவலோகமும் நல்லூரோ-அவன்
இலங்கையில் விரும்பும் பழனியுமோ
பச்சிளம் பாலகனாய் காட்சி தந்தான்- அவனை
கட்டி அணைக்கவில்லை தலைதொட்டேன்

மனம் என்னை விரட்டியது சென்றுவிட்டேன்-நான்
கண்டு கொண்டேன் அவன் முருகனென்று
கண்கண்ட தெய்வமே என் முருகா-உன்னை
கட்டியணைக்க ஆவல் கொண்டேன்

மலர் சின்னையா

## நல்லைக்கந்த சந்தப் "பா"



பழுத்துக் காகவே முழக்கஞ் செய்துநீ
பழநி சென்றதன் விளக்க மென்னவோ
விழைக்கு முன்செய லிழைக்கும் லீலைகள்
விந்தை யானதோர் சிந்தை வேலைகள்
மழையி னிற்குடை வெய்யி லின்நிழல்
வந்து காத்திடு முந்த னின்கழல்
அழைக்கும் போதெலா மருகி லுன்னெழில்
அண்ட மேநிறை நல்லைக் கந்தப்பா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நந்திக்கடல் நீரேரி புனரமைக்கப்பட்டால் சுமார் 15,000 பேர் நன்மையடைவார்கள்

## நாடாளுமன்றில் டக்ளஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வறுமை நிலைப்பட்டியலில் இருந்துவரும் 14 மாவட்டங்களில் இரண்டாம் நிலையில் முல்லைத்தீவு மாவட்டம் இருப்பதாகத் தெரிய வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படுகின்ற வளங்களை ஒழுங்குற அபிவிருத்தி செய்தால் அம் மாவட்டத்தை வறுமை நிலையிலிருந்து மீட்க முடியும் என்பதை அவதானத்துக்குக் கொண்டு வருகின்ற நிலையில், அதில் ஓர் அபிவிருத்தி நடவடிக்கையாக நந்திக்கடல் நீரேரி புனரமைப்புத் திட்டம் அடங்கியுள்ளது.

சுமார் 3120 ஹெக்டேயர் பரப்பளவைக் கொண்ட பாரிய நீரேரியாக விளங்கும் நந்திக்கடல், ஒடுங்கிய 2 கிலோ மீற்றர் நீளமான கால்வாய் வழியாக வட்டுவாகல் பகுதியில் கடலுடன் கலக்கிறது.

இதனை அண்டியுள்ள சூழலானது புவிசார் உயிரினவியல் முக்கியத்துவம் கொண்டதாக அமையப் பெற்றுள்ளதுடன், அயல் பகுதிகளில் வாழும் மக்களுக்கு புவிசார் உயிரினவியல் சேவைகளை வழங்குவதாகவும் உள்ளதுடன், இக் கடலானது நண்டு, இறால் மற்றும் சில மீன் வகைகளைக் கொண்டுள்ளதாகவும் அமைந்துள்ளது என்று நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டிய டக்ளஸ் தேவானந்தா எம்.பி.,

தொடர்ந்து கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் கேள்விகளை முன்வைத்து உரையாற்றுகையில், மேற்படி நந்திக் கடல் நீரேரியில் தற்போது பாரியளவில் கழிவுப் பொருட்கள் புதைந்து, படிந்து கிடப்பதாலும் மழை காலத்தில் மேலும் வண்டல் மண் சேர்ந்தும் இதனது ஆழம் குறைந்துள்ளதுடன் கடலினுள் ஏரியின் நீர் கலக்குமிடத்திலுள்ள பாலத்தடியில் படிவுகள் அதிகம் படிந்து நீரோட்டத்தினைத் தடுத்தும் வருகின்றன.



இதனால் மேற்படி ஏரியில் மீனினங்களின் உற்பத்திப் பெருக்கமானது வெகுவாகக் குறைந்துள்ளது. அத்துடன், மேற்படி பாதிப்புகள் காரணமாக கால நிலை மாற்றங்களின்போது மீனினங்கள் பாரிய அளவில் உயிரிழக்கின்ற நிலைமைகளையும் அண்மைக் காலத்தில் காணக்கூடியதாக இருந்தது.

இதன் காரணமாக நந்திக் கடல் நீரேரியின் மூலமாக நேரடி பயன்களைப் பெறுகின்ற சுமார் 10 ஆயிரம் மக்களும், மறைமுகமான பயன்களைப் பெறுகின்ற சுமார் 5 ஆயிரம் மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டு, தங்களது வாழ்வாதாரங்களுக்காக நிவாரணங்களைக் கோருகின்ற நிலை சுமார் இரண்டு வருட காலமாக ஏற்பட்டுள்ளது.

எனவே, மேற்படி நந்திக் கடல் நீரேரியை புனரமைப்புச் செய்தால் அதன் மூலமாக தற்போது தங்களது வாழ்வாதாரங்களை ஈட்டிக் கொள்கின்ற மக்கள் மட்டுமின்றி, மேலும் பலர் வாழ்வாதாரங்களை ஈட்டிக் கொள்ள முடியும்.

அந்த வகையில், நந்திக்கடல் நீரேரி தொடர்பில் துறைசார் நிபுணத்துவம் கொண்ட தரப்பினரைக் கொண்டு அளவை மதிப்பீடு செய்து, அதனது இயல்பான நீரோட்டத்தினை உறுதி செய்யும் வகையிலும், கடற்றொழில் வள்ளங்களின் பாதுகாப்பான நகர்வுகளுக்கு வசதி செய்தும், சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும், கடல் வாழ் உயிரினங்களின் பெருக்கத்தை அதிகரிக்கும் வகையில் அதனை புனரமைப்பு செய்து உதவ முடியுமா? என்று கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர அவர்களிடம் கேள்வியை முன்வைப்பதாகவும் தெரிவித்தார். (இ-3)

# மருத்துவ அதிகாரிகள் பொய் கூறுகின்றனர்

## சுகாதார அமைச்சர் ராஜித கொதிப்பு

மருத்துவக் கல்வியின் குறைந்தபட்ச தரத்தை வர்த்தமானியில் அறிவிப்பது தாமதிக்கப்பட மாட்டாது என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.



குறைந்தபட்ச தரத்தை வர்த்தமானியில் அறிவிக்கும் நடவடிக்கையை ஒத்திவைக்க முயற்சிக்கப்படுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறுவது பொய் எனவும், சங்கமே இதனை பல ஆண்டுகளாக தாமதித்து வந்ததாகவும் அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மருத்துவக் கல்வியின் குறைந்தபட்ச தரத்தை உருவாக்குவது தொடர்பில் பிரதமர் தலைமையில் நடந்த பேச்சுவார்த்தையை புறக்கணித்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், ஊடக கண்காட்சியை நடத்தி மக்களை தவறாக வழிநடத்தி வருகிறது.

குறைந்தபட்ச தரத்தை வர்த்தமானியில் வெளியிடும் நடவடிக்கையை 2015 ஆம் ஆண்டு தான் ஆரம்பித்ததாகவும் அது தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் மொழி பெயர்ப்பு பிரிவில் இருப்பதாகவும் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

மேலும், வர்த்தமானியை வெளியிடும் நடவடிக்கையை துரிதமாக மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்தார். (இ-7)

# கலைஞர்களுக்கு உதவித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அறுபது வயதுக்கு மேற்பட்ட குறைபாடுகளுடன் கூடிய கலைஞர்களுக்கான உதவித்தொகை வழங்கப்படவுள்ளது. எனவே தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவைச் சார்ந்த மேற்படி கலைஞர்கள் அரச ஓய்வூதியச் சம்பளம் மற்றும் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற எந்தவிதமான உதவியும் பெறாத கலைஞர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவத்தினை தெல்லிப்பழை பிரதேச செயலகக் கலாசாரப் பிரிவில் பெற்று பூர்த்தி செய்து 2017.08.25 ஆம் திகதிக்கு முன்னர் கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு பிரதேச செயலர் எஸ்.சிவசிறி அறிவித்துள்ளார். (இ


## சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து) சுன்னாகம்

கீழ்க் குறிப்பிடும் நிரந்தரப் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கணக்காளர்:- குறி.இல 104/09
சம்பள அளவுத்திட்டம்- 15660 - 19560 (13/2015 சு.நி.இன்படி)
190 X 10 -200 X 10
சுற்.இல 04/2017 அமைய விசேட படி 15 % அடிப்படையுடன் சேர்த்து வழங்கப்படும்.

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்

அ) கூட்டுறவுப் பணியாளர் 10வது சம்பளத்திட்ட கணக்காளர் அல்லது உள்ளக கணக்காய்வாளர் பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் 11 வது சம்பளத்திட்ட உள்ளக கணக்காய்வாளர் அல்லது கணக்குப் பதவியலாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவியொன்றில் ஆறு (06) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன இறுதியாண்டு பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான மேற்பார்வை மட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர சித்தி அல்லது கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அத்துடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 03 ஆண்டு கால அனுபவம் அல்லது க.பொ.த (உ/த) பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுத்துறையில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம்.

வயது: விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)

சங்கப் பணியாளர்கள் தமது விண்ணப்பங்களை தமது சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பப்படிவங்களையும், மேலதிக விபரங்களையும் சங்கத் தலைமை அலுவலகத்தில் வேலை நாட்களில் (காலை 9.00- மாலை 4.30) ரூபா 10/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

T.P.No -021 321 2380

விண்ணப்ப முடிவுத் திகதி 26.08.2017ம் திகதி மாலை 4.00 மணி

சி.குமரவேல்
தலைவர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம் (இ-9298)



## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை


| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/6853 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 54 செவ் 8 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/3992 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: செவ் 7 இல்<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6855 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 60 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:பட்டதாரி கனடா<br>தொ.இ: G/3988 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/பாதுகாப்பு உத்தியோகத்தர்<br>தொ.இ: B/6856 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 30<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA, MA/அரச தொழில்<br>தொ.இ: G/3990 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 38 செவ் 12 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: கால்நடை வைத்தியர்<br>தொ.இ: B/6859 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 22 செவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:O/L<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/3993 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 80 நாடுகளுக்கு இலவச விசா திட்டம்

# கட்டார் அதிரடி அறிவிப்பு



அண்டை நாடுகளின் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளால் நெருக்கடிக்கு ஆளான கட்டார், இந்தியா உள்ளிட்ட 80 நாடுகளுக்கு இலவச விசா வழங்கும் திட்டம் தொடர்பான அறிவிப்பை வெளியிட்டுள்ளது. சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன், எகிப்து ஆகிய 4 நாடுகள் கட்டார் நாட்டுடன் ஆன தூதரக உறவை கடந்த ஜூன் மாதம் 5ஆம் திகதி முதல் முறித்துக்கொண்டன.

தீவிரவாதிகளுக்கு மறைமுகமாக பணஉதவி செய்வதாகவும், எதிரி நாடான ஈரானுடன் உறவு வைத்திருப்பதாகவும் கூறி கட்டாருக்கு இத்தடை விதிக்கப்பட்டது. மேலும் கட்டாரில் இருந்து மேற்கண்ட நாடுகளின் தூதர்களும் அந்தந்த நாடுகளுக்கு திரும்பினர். மேலும் கட்டார் விமானங்கள் அந்தந்த நாட்டின் வான் எல்லையில் பறக்க தடை விதிக்கப்பட்டது. கப்பல் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. இதனால் கட்டார் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அண்டை நாடுகளின் தனிமைப்படுத்தும் நடவடிக்கைகளால் நெருக்கடிக்கு ஆளான கட்டார், இந்தியா உள்ளிட்ட 80 நாடுகளுக்கு இலவச விசா வழங்கும் திட்டம் தொடர்பான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

சுற்றுலா மற்றும் விமான போக்குவரத்தை ஊக்குவிக்கும் வகையில் கட்டார் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதாக கட்டார் சுற்றுலாத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் இந்த அறிவிப்பால் வளைகுடா நாடுகளில் கட்டார் மிகவும் திறந்த வெளி நாடாக திகழும் என்றார்.

இவ் அறிவிப்பு உடனடியாக அமுலுக்கு வந்துள்ளது. அரபு நாடுகளில் லெபனான் மட்டும்தான் இந்த 80 நாடுகள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. (3-8)




## குயாம் தீவை தாக்க 4 ஏவுகணைகள் தயார்

# வடகொரியா அறிவிப்பு

(பான்யாங்)

அமெரிக்காவுக்கு சொந்தமான குயாம் தீவை தாக்க நான்கு ஏவுகணைகள் தயார் நிலையில் இருப்பதாக வடகொரிய நாட்டு இராணுவ தளபதி தெரிவித்துள்ளார்.

வடகொரியாவும், அதன் அருகே உள்ள தென்கொரியாவும் நிரந்தர பகை நாடுகளாக உள்ளன. இதில் தென்கொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா செயற்பட்டு வருகிறது.

அமெரிக்காவை மிரட்டும் வகையில் வடகொரியா அணு ஆயுத சோதனை, ஏவுகணை சோதனை போன்றவற்றை தொடர்ந்து நடத்தி வருகிறது.

இதனால் சமீபத்தில் வடகொரியா மீது அமெரிக்கா புதிய பொருளாதார தடை விதித்தது. இது வடகொரியாவுக்கு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

ஜப்பானையொட்டி அமெரிக்காவுக்கு சொந்தமான குயாம் என்ற தீவு உள்ளது. இத்தீவை தாக்கப்போவதாக வடகொரியா அறிவித்தது. குயாம் தீவு வடகொரியாவில் இருந்து 3356 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. இது 541 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்டதாகும். இதில் ஒரு இலட்சத்து 63 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள்.

அமெரிக்காவை அச்சுறுத்தும் வகையில் இனிமேலும் வடகொரியா நடந்து கொள்ளாமல் இருப்பது நல்லது. இல்லை என்றால் உலகம் இதுவரை சந்திக்காத தீக்கனலையும், சீற்றத்தையும் சந்திக்க வேண்டியது வரும் என்று தெரிவித்தார்.

அதாவது வடகொரியா மீது அணு ஆயுத தாக்குதல் நடத்துவதற்கு அமெரிக்கா தயாராகிவிட்டது போல ட்ரம்புடைய பேச்சு இருந்தது.

ஆனாலும் இந்த அச்சுறுத்தலை வடகொரியா கண்டு கொள்ளவில்லை. குயாம் தீவில் தாக்குதல் நடத்துவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருவதாக வடகொரியா தெரிவித்துள்ளது.

எனவே வடகொரியா தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தில் குயாம் மக்கள் உள்ளனர். அமெரிக்க இராணுவ அமைச்சர் ஜிம்மேட்டில் தற்போது குயாம் தீவில் இருக்கிறார்.

அவர் இதுபற்றி கூறும் போது, வடகொரியாவின் அச்சுறுத்தல் சாதாரணமானதுதான். உடனடி தாக்குதல் நடத்துவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. அமெரிக்க மக்கள் நிம்மதியாக தூங்கலாம் என்று தெரிவித்தார்.

இதற்கிடையே வடகொரியாவின் நட்பு நாடான சீனா இரு நாட்டு தலைவர்களையும் அமைதி காக்கும்படியும், ஆத்திரமூட்டும் தகவல்களை பரப்ப வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டுள்ளது. (3-8)

# கென்ய ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சியினர் வன்முறை

## பொலிஸார் துப்பாக்கிச்சூடு

(நைரோபி)

கென்யாவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி கென்யாட்டா வெற்றி பெறுவது உறுதியாகிவிட்ட நிலையில், எதிர்க்கட்சியினர் வன்முறை போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடான கென்யாவில் நேற்று முன்தினம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. ஜனாதிபதி பதவிக்கு 8 பேர் போட்டியிட்டனர். எனினும் தற்போதைய ஜனாதிபதியான உஹுரு கென்யாட்டா (55), முன்னாள் பிரதமர் ரைலா ஒடிங்கா (72) ஆகியோருக்கிடையே நேரடி போட்டி நிலவியது. வன்முறை ஏற்படலாம் என்ற அச்சத்திற்கு மத்தியில் பலத்த பாதுகாப்புடன் வாக்குப்பதிவு அமைதியாக நடந்து முடிந்தது.

ஆனால் தேர்தல் ஆணைய கணனிகள் மற்றும் அதில் உள்ள தரவுகளை ஹேக்கர்கள் முடக்கிவிட்டதாகவும், இது மிகப்பெரிய வாக்கு மோசடிக்கு வழிவகுத்திருப்பதாகவும் எதிர்க்கட்சி தலைவர் ரைலா ஒடிங்கா குற்றம் சாட்டினார். இதனால் அவரது ஆதரவாளர்களிடையே கடும் கொந்தளிப்பு ஏற்பட்டது. தொண்டர்களை அமைதி காக்கும்படி ஒடிங்கா கேட்டுக் கொண்டார். அதேசமயம், மக்களை தன்னால் கட்டுப்படுத்த முடியாது என்றும் கூறி ஆதரவாளர்களை உசுப்பேற்றி விட்டார். இதையடுத்து ஒடிங்காவின் ஆதரவாளர்கள் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தொடங்கினர்.

நேற்று வாக்கு எண்ணிக்கை தொடங்கியது. ஆரம்பத்தில் இருந்தே ஜனாதிபதி கென்யாட்டா அதிக வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை பெற்றதால், அவர் வெற்றி பெறுவது உறுதியாகிவிட்டது. இதனால் ஒடிங்காவின் ஆதரவாளர்கள் போராட்டத்தை தீவிரப்படுத்தி உள்ளனர். ஒடிங்காவின் கோட்டையாக கருதப்படும் கிசுமு நகரில் ஏராளமானோர் திரண்டு கோஷமிட்டபடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். 'ஒடிங்கா இல்லையென்றால் அமைதி இல்லை' என்று முழக்கம் எழுப்பினர். அவர்களை பொலிஸார் கலைந்து செல்லும்படி வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து செல்லாமல் கற்களை வீசி தாக்கத் தொடங்கினர். எனவே, அவர்கள் மீது பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தினர். இதனால் அங்கு கலவரம் வெடித்தது. இதே போல் நைரோபி குடிசைப் பகுதியில் ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸார் துப்பாக்கி சூடு நடத்தியதில் ஒருவர் இறந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. (3-8)

# உலகை மிரட்ட வரும் A-68 பனிப்பாறை!

உலகின் மிகப்பெரிய பனிப்பாறையின் செயற்கைக் கோள் புகைப்படங்கள் சர்வதேச ஊடகங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த ஜூலை மாதம் ஆரம்பத்தில், அண்டார்டிக்காவின் லார்சன் சி பனிப்பகுதியில் உள்ள உலகின் மிகப்பெரிய பனிப்பாறையில் பாரிய பிளவு ஒன்று ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் அந்த பனிப்பாறையின் பிளவுகள் தொடர்பான செயற்கைக்கோள் புகைப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளன. A-68 என பெயரிடப்பட்ட பனிப்பாறை, திறந்த கடல் பகுதியை பல ஆண்டுகளாக சுற்றி வளைத்திருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. அது அண்டார்டிக்காவின் மிகவும் குளிரான நடுப்பகுதியில் இருப்பதால், பனிப்பாறைகளின் தெளிவான புகைப்படங்களை பெற்றுக் கொள்வதற்கு விஞ்ஞானிகள் போராடியுள்ளனர்.

இந்நிலையில் தடிமனான மேகத்தின் ஊடாக இருந்து பார்ப்பதற்காக குறித்த விஞ்ஞானிகள் ரேடார் கருவிகளை பயன்படுத்தியுள்ளனர்.

அதற்கமைய கிழக்கு அண்டார்க்டிக் தீபகற்பத்தில் ஒரு தெளிவான, ஒளிக்காட்சி புலப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள விஞ்ஞானிகள் வெளியாகியுள்ள புதிய புகைப்படங்களுக்கமைய பிளவுகள் அதிகரித்து வருவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அன்டார்க்டிக் தீபகற்பம் இந்த மாதத்தின் ஆரம்பத்தில் அதன் பகுதியின் 10 சதவிகிதத்தை இழந்துள்ளதாக விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ள செயற்கைக்கோள் புகைப்படங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.


நிலப்பகுதி மற்றும் உறைந்த நீரின் இடையே பிளவுகள் மேலும் அதிகரிக்கின்றதா என நிபுணர்கள் அன்று முதல் தொடர்ந்து ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிளவுகள் இன்னும் அதிகரித்து வருகின்றன என்பதை அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந் நிலைமை தொடர்ந்தால் பனிப்பாறை உடைந்து போகும் சாத்தியம் உள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

லார்சென் சி பனிப்பாறை சரிந்தால் உலக கடல் மட்டம் மேலும் 4 அங்குலங்கள் (10 செ.மீ) உயரக் கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது. (3-8)

## சீனா போர் மிரட்டலின் எதிரொலி

# எந்த சவாலையும் சந்திக்க இந்தியாவுக்கு வலிமை உண்டு



## அருண் ஜெட்லி

(டில்லி)

சிக்கிம் எல்லை விவகாரத்தில் சீனா தொடர்ந்து போர் மிரட்டல் விடுத்து வரும் நிலையில், இந்திய படைகளுக்கு எவ்வித சவாலையும் சந்திக்க போதுமான வலிமை உள்ளதாக இராணுவ அமைச்சர் அருணண் ஜெட்லி உறுதிபட தெரிவித்துள்ளார்.

சிக்கிம் எல்லையில் இந்தியா, சீனா, பூட்டான் நாடுகள் சந்திக்கும் டோக்லாம் பகுதியில் சீனப்படைகள் மேற்கொண்ட அத்துமீறிய [illegible] இந்திய வீரர்கள் தடுத்து நிறுத்தினர். இதனால் இரு நாடுகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. அங்கு இரு நாடுகளும் இராணுவத்தை குவித்துள்ளன.

இந்திய படைகளை வாபஸ் பெறுமாறு அறிவுறுத்தி வரும் சீனா, அங்கு போர் தொடுக்கப் போவதாக தொடர்ந்து மிரட்டி வருகிறது. இதனால் சிக்கிம் எல்லையில் தொடர்ந்து போர்ப் பதற்றம் நீடித்து வருகிறது.

ஆனால் அண்டை நாடுகள் அளிக்கும் எவ்வித சவாலையும் சந்திக்க போதுமான வலிமை இந்திய படைகளுக்கு இருப்பதாக இராணுவ அமைச்சர் அருண் ஜெட்லி மீண்டும் உறுதிபட தெரிவித்தார். 'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் தொடங்கப்பட்டதன் 75 ஆவது நினைவு தினத்தையொட்டி டில்லி மேல் சபையில் நேற்று முன்தினம் நடந்த சிறப்பு விவாதத்தை தொடங்கி வைத்து பேசிய அவர் தெரிவித்ததாவது.

சமீபத்திய ஆண்டுகளில் நாடு ஏராளமான சவால்களை சந்தித்துள்ளது. ஆனால் ஒவ்வொரு சவால் மூலமும் நாடு மிகவும் வலிமையானதாக மாறி வருவதை நம்மால் பெருமையாக கூற முடியும்.

கடந்த 1962 ஆம் ஆண்டில் சீனாவுடன் ஏற்பட்ட போர் மூலம் இந்தியா ஏராளமான பாடம் படித்துள்ளது. ஆயுதப் படைகள் முழு பலத்துடன் இருக்க வேண்டும் என்பதே அது. ஏனெனில் தற்போது கூட நமது அண்டை நாடுகளால் பல்வேறு சவால்களை நாடு எதிர்கொண்டு வருகிறது.

1962 ஆம் ஆண்டை ஒப்பிடுகையில் 1965 மற்றும் 1971 ஆம் ஆண்டு போர்களில் நமது படைகள் அதிக பலம் பெற்றிருந்தன. 1962 ஆம் ஆண்டு போரில் நாம் பல்வேறு துன்பங்களை பெற்றிருந்தாலும், பாகிஸ்தானுடனான 1965 மற்றும் 1971 ஆம் ஆண்டு போர்களில் நாம் வெற்றி பெற்றோம்.

ஆனால் தற்போதும் சில சவால்கள் இருப்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். நமது நாட்டின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டை சிலர் குறிவைத்துள்ளனர். ஆனால் மேற்கு எல்லையோ அல்லது கிழக்கு எல்லையோ, எந்த பகுதியில் இருந்தும் வரும் சவால்களை எதிர்கொண்டு நாட்டை பாதுகாக்க நமது தீரமிக்க வீரர்களுக்கு போதுமான வலிமை உண்டு என்பதை நான் முழுமையாக நம்புகிறேன். நாட்டின் பாதுகாப்புக்காக எவ்வித தியாகத்தையும் மேற்கொள்ள நமது ஆயுதப்படைகளால் முடியும் என்றார். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீட் தேர்வை எதிர்த்து போராட்டம்

## வைகோ உட்பட 300 பேர் கைது




(டில்லி)

நீட் தேர்வில் இருந்து தமிழகத்துக்கு நிரந்தர விலக்கு அளிக்க கோரி ம.தி.மு.க. மாணவரணி சார்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் வைகோ உட்பட 300 பேர் கைது செய்யப்பட்டனர்.

நீட் தேர்வில் இருந்து தமிழகத்துக்கு நிரந்தர விலக்கு அளிக்க கோரி ம.தி.மு.க. மாணவரணி சார்பில் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. ஆர்ப்பாட்டத்துக்கு பொலிஸார் அனுமதி தராததால் தடையை மீறி நேற்று வைகோ தலைமையில் போராட்டம் நடந்தது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் திரண்ட ம.தி.மு.க. தொண்டர்கள் மத்தியில் மத்திய அரசை கண்டித்து வைகோ கோஷங்களை எழுப்பினார்.

பொலிஸார் அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்த முயன்றபோது அருகில் உள்ள சுங்கத்துறை அலுவலகத்தை முற்றுகையிட வைகோ சென்றார். பொலிஸார் அவர்களை அலுவலகத்திற்குள் நுழைய விடாமல் தடுத்து நிறுத்தினர்.

அங்கு அமைக்கப்பட்டிருந்த இரும்பு தடுப்பு வேலி மூலம் முற்றுகையிடுவது தடுக்கப்பட்டது. இதற்கிடையே 'நீட்' அரக்கன் என்ற பெயரில் உருவப் பொம்மை தயார் செய்து கொண்டு வந்து ம.தி.மு.க. தொண்டர்கள் எரித்தனர்.

பொலிஸாரின் தடையை மீறி நடந்த போராட்டத்தில் வைகோ, மல்லை சத்யா, மணவை தமிழ்செல்வன், செங்குட்டுவன், ஜீவன், ராமதாஸ், முசாத்புகாரி, கழக குமார், தென்றல் நிசார் உட்பட 300 பேர் கைது செய்யப்பட்டனர்.

போராட்ம்குறித்துவைகோ நிருபர்களிடம் தெரிவித்ததாவது.

தமிழகத்தில் நீட் தேர்வை கொண்டு வருவதற்கு மத்திய அரசுக்கு தகுதி இல்லை. உரிமையும் கிடையாது. தமிழக உரிமைகளை மத்திய அரசு நசுக்க பார்க்கிறது. தமிழக பாடத்திட்டத்தில் படித்த மாணவர்கள் உலகப் புகழ் வாய்ந்த வைத்தியர்களாக உள்ளனர்.

சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் 2 சதவீதம் பேர் படிக்கின்றனர். மீதமுள்ளவர்கள் மாநில பாடத்திட்டத்தில் படிக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ள வேண்டும்.

நீட் தேர்வு முறையால் வசதி படைத்தவர்கள் மட்டுமே வைத்தியராக முடியும். ஏழை- எளிய மாணவர்களுக்கு அது எட்டாக்கனியாக மாறிவிடும். சுகாதாரத்துறை அமைச்சர் இந்த பிரச்சினையில் 2 நாட்களில் முடிவு தெரிந்து விடும் என்று தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலின் போது மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்திருக்க வேண்டும். காவிரி, முல்லை பெரியாறு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை தீர்த்தால்தான் ஆதரவு தருவோம் என்று கூறியிருக்கலாம். ஆனால் அப்படி அழுத்தம் கொடுக்கவில்லை.

மத்திய அரசின் மிரட்டலுக்குமாநிலஅரசுபணிந்துவிடக்கூடாது. மாணவர்கள் ஒன்று சேர்ந்து வீதிக்குவந்து போராட வேண்டும் என்றார். (3-8)

## ஓ.என்.ஜீ.சியை வெளியேறக் கோரி கதிராமங்கலம் மக்கள் தொடர் போராட்டம்



ஓ.என்.ஜி.சி. கதிராமங்கலத்தில் இருந்து முற்றிலுமாக வெளியேற வேண்டும். எங்கள் கோரிக்கை முழுமையாக நிறைவேறும் வரை அறப்போராட்டம் தொடரும் என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

தஞ்சை மாவட்டம் கதிராமங்கலத்தில் இருந்து ஓ.என்.ஜி.சி. நிறுவனம் வெளியேற வலியுறுத்தி அக்கிராம மக்கள் அங்குள்ள ஐயனார் கோவில் வளாகத்தில் தொடர் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். நேற்று 31 ஆவது நாளாக போராட்டம் நடைபெற்றது.

நேற்று போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களை தஞ்சை வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் டி.ஆர். லோகநாதன் சந்தித்து பேசினார். அப்போது கதிராமங்கலம் மக்களுக்கு காங்கிரஸ் கட்சி துணையாக இருக்கும். உங்களுக்கு ஆதரவு தெரிவிக்க எதிர்வரும் 16ஆம் திகதி தமிழக காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசர் வருகை தர உள்ளார் என்றார்.

அதேபோல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட தலைவர் கண்ணையன் கலந்து கொண்டு பேசும் போது. கதிராமங்கலத்தில் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் தொடங்கும் போது நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்து இங்கு பிரசாரம் செய்தோம்.

அப்போது எங்களை விரட்டி அடித்தீர்கள். இன்று நாங்கள் கூறியது போல் பாதிப்பு ஏற்பட தொடங்கியுள்ளது. உங்களுக்கு எப்போதும் பக்கபலமாக இருந்து விவசாயத்தையும் தொழிலாளர்களையும் பாதுகாப்போம் என்றார்.

போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் முருகானந்தம் தெரிவிக்கும் போது,

மதுரை உயர்நீதிமன்றில் தர்மராஜன், ரமேஷ் ஆகியோருக்கு பிணை கிடைக்காமல் காலதாமதம் ஆவதற்கு தர்மராஜன் பெயரை தர்மதுரை என்றும் ரமேஷ் பெயரை ராஜேஷ் என்றும் பொலிஸார் முதல் தகவல் அறிக்கையில் எழுதியுள்ளனர்.

கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர்களிடம் கேட்டு பெயரை சரியாக எழுதி இருக்கலாம். அவசர, அவசரமாக பொய் வழக்கு போட்டதால் தான் பெயரை தவறாக எழுதி உள்ளனர் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

இத்தகைய தவறு செய்த அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஓ.என்.ஜி.சி. கதிராமங்கலத்தில் இருந்து முற்றிலுமாக வெளியேற வேண்டும் என்கிறோம். எங்கள் கோரிக்கை முழுமையாக நிறைவேறும் வரை அறப் போராட்டம் தொடரும் என்றார்.

போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் அகதிகள் போல் விறகு அடுப்பில் சமையல் செய்து சாப்பிட்டனர். (3-8)

## தமிழக விவசாயிகள் 5 பேர் சாகும் வரை உண்ணாவிரதம்



(டில்லி)

டில்லியில் தமிழக விவசாயிகள் 5 பேர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும், கடன் தள்ளுபடி செய்ய வேண்டும், நதிகளை இணைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கம் சார்பில் டில்லியில் போராட்டம் நடந்து வருகிறது. இப் போராட்டம் நேற்று 25ஆவது நாளாக நீடித்தது.

தீப்பந்தம் ஏந்தி போராட்டம் நடத்தப்போவதாக போராட்டக்குழு தலைவர் அய்யாக்கண்ணு தெரிவித்தார்.

ஆனால் நேற்று முன்தினம் காலை டில்லியில் மழை பெய்ததால் அப் போராட்டம் கைவிடப்பட்டது. விவசாயிகள் அனைவரும் போராட்டக் களத்திலேயே முடங்கினர்.

இதற்கிடையே, அய்யாக்கண்ணு தலைமையில் சிலர், எம்.பி.க்களை சந்தித்து தங்களது கோரிக்கை மனுவில் கையெழுத்து பெறச் சென்றனர். இதுபற்றி அய்யாக்கண்ணு தெரிவிக்கையில், 'நாங்கள் குறைந்தது 200 எம்.பிக்களிடம் கையெழுத்துப் பெற முடிவு செய்துள்ளோம்.

இதுவரை 70 பேரிடம் கையெழுத்துப் பெற்றுள்ளோம். கையெழுத்து பெற்ற மனுவை பிரதமர் அலுவலகத்தில் அளிப்போம்' என்றார். (3-8)

பாரதச் செய்தி

## தரித்து நின்ற விமானத்தை மோதியது
### —புறப்படத் தயாரான விமானம்—
### பயணிகள் பத்திரமாக மீட்பு



டில்லி விமான நிலையத்தில் இரண்டு விமானங்கள் மோதியதால் திடீர் பரபரப்பு ஏற்பட்டது. எனினும், பயணிகளுக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை.

டில்லி விமான நிலையத்தில் உள்ள 86ஆவது தடத்தில் நேற்று அதிகாலையில் ஏர் இந்தியா விமானம் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதேசமயம், அருகில் உள்ள 87ஆவது தடத்தில் அடிஸ் அபாபா செல்லக் கூடிய எதியோப்பியன் ஏர்லைன்ஸ் விமானம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதில் பயணிகள் ஏறி அமர்ந்து, புறப்படத் தயாராக இருந்தது. விமானத்தை நகர்த்திய போது எதிர்பாராத விதமாக அந்த விமானத்தின் இறக்கை, ஏர் இந்தியா விமானத்தின் இறக்கையில் மோதியது. இரண்டு விமானங்களின் இயந்திரங்களும் நெருங்கிய நிலையில், விமானம் நிறுத்தப்பட்டது. இதனால் மிகப் பெரிய விபத்து தவிர்க்கப்பட்டது. விமானத்தின் இறக்கை சேதம் அடைந்தது.

பின்னர் டிராக்டர் மூலம் இரண்டு விமானங்களும் பிரிக்கப்பட்டன. எதியோப்பியன் ஏர்லைன்ஸ் விமான புறப்பாடு இரத்துச் செய்யபட்டு, அதில் இருந்த 196 பயணிகளும் பத்திரமாக இறக்கப்பட்டனர். பயணிகளுக்கும் எந்தவித காயமும் ஏற்படவில்லை. விமான நிலையத்தில் நடந்த இச் சிறிய விபத்து காரணமாக அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையில்லாப் பிரேரணை ஊடாக வேறு நோக்கங்களுக்கு இடமளியோம்

## முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய உறுதி

(கொழும்பு)

அமைச்சர் ரவிக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வரவேண்டிய தேவையில்லையெனவும் அமைச்சர் ரவிக்கு ஜனாதிபதி தீர்மானம் ஒன்றை எடுக்குமாறு கூறியுள்ள்தாகவும் மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரவி நிதி அமைச்சராக இருந்தபோது எனக்கு மட்டுமல்ல, சகல ம்தலமைச்சர்களுக்கும் பிரச்சினை இருந்தது. எது எப்படிப் போனாலும், அவர் இந்தக் குற்றச்சாட்டில் தவறு இழைத்துள்ளார் என்பதை இந்த நாட்டு மக்கள் அறிகின்றனர்.

ரவி கருணாநாயக்கவின் நிதி அமைச்சுக் காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் மத்திய வங்கி முறி மோசடிக்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்தே அமைச்சர் ரவிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கூட்டு எதிர்க்கட்சி கையளித்திருக்கிறது.

தற்பொழுது அமைச்சர் ரவி இராஜினாமா செய்தால், நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப் பார்த்ததன் நோக்கம் நிறைவேறும்.



இதனால், ரவிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று மீண்டும் பாராளுமன்றத்தில் கொண்டு வருமாறு கோரத் தேவையில்லை.

கூட்டு எதிர்க்கட்சியானது அமைச்சர் ரவிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை எனும் போர்வையில், வேறு நோக்கங்களை நிறைவேற்ற முனையுமாயின் அதற்கு ஒரு போதும் ஸ்ரீல.சு.க. இடமளிக்கமாட்டாது எனவும் முதலமைச்சர் நேற்று முன்தினம் தெரிவித்தார். (இ-7)

# அமைச்சர்கள் மங்கள, மலிக் ஆகியோருக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாத் தீர்மானம்

(கொழும்பு)

நிதி அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் அபிவிருத்தி உபாய முறைகள் , சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம ஆகியோருக்கு எதிராகவும் நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படும் என கூட்டு எதிர்க்கட்சி கூளுரைத்துள்ளது.





கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினரும் முன்னாள் ஊடக அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

பொரளை என்.எம். பெரேரா கேந்திர நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒவ்வொரு சம்பவங்கள் பற்றிய விபரங்களும் எதிர்வரும் நாட்களில் அம்பலப் படுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில் கிடைக்கும் போதைப் பொருட்களைக் கொண்டு கட்டட நிர்மாணத்திற்கு சீமெந்திற்கு பதிலாக போதைப்பொருளை பயன்படுத்த முடியும் எனவும் அவ்வளவு அதிகளவில் போதைப்பொருள் கிடைப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# மைத்திரி - ரணில் கூட்டரசைவிட களவாடும் மகிந்த அரசு நல்லது

(கொழும்பு)

மைத்திரி - ரணில் அரசாங்கத்தை விடவும், களவாடும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் நல்லது என அனைத்துப் பல்கலைக் கழக பேராசிரியர் ஒன்றியத் தின் முன்னாள் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

தனது முகநூலில் இட்ட பதிவொன்றில் இந்த விடயம் பற்றி அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் அந்தப் பதிவில்,

கடந்த அரசாங்கத்தை விடவும் இந்த அரசாங்கம் ஆபத்தான வழிகளில் பயணிக்கின்றது. இந்த அரசாங்கம் களவாடுவதனை விடவும் பாரிய அனர்த்தங்களை மேற்கொண்டுள்ளது.

களவாடுவதனால் ஏற்படக்கூடிய பாதகத்தை விடவும் பாரிய அரசியல் அழிவினை இந்த அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

2015ஆம் ஆண்டில் நாகரிகமான ஜனநாயக அரசியல் தொடர்பில் பொதுமக்கள் கொண்டிருந்த முனைப்பை இந்த அரசாங்கம் சீர்குலைத்துள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனவரி 8 மக்கள் எதிர்ப்பார்ப்புகளை அழித்து ஆட்சி நடத்தும் இந்த அரசாங்கத்தை விடவும் மகிந்த அரசாங்கம் மேலானது என அவர் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# சாகும் வரையான உண்ணாவிரதத்திற்கு தயாராகும் முன்னாள் இராணுவத்தினர்

(கொழும்பு)

அங்கவீனமுற்ற இராணுவத்தினர் சம்பந்தமாக அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லையானால் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிப்போவதாக இராணுவத்தினரின் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் யூ.டீ. வசந்த தெரிவித்தார்.



நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை பகுதியில் அங்கவீனமுற்ற இராணுவத்தினர் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அங்கவீனமுற்ற இராணுவத்தினர் நேற்றும் கொழும்பு கோட்டைப்பகுதியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருநதனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### யார் நம் பக்கம் இருக்க வேண்டும்?

வீட்டில் அனைவரும் ஒன்று சேர்ந்து அந்த வேலைக்காரியை மிரட்டுகிறார்கள். அவள்தான் கைக்கடிகாரத்தைத் திருடினாள் என்று குற்றம் சாட்டுகிறார்கள். எங்களுக்கு பொலிஸில் பெரிய பெரிய அதிகாரிகளைத் தெரியும் என்கிறார்கள்.

அவளோ மிரளவில்லை. அசைந்து கூடக் கொடுக்கவில்லை. எங்க வேணும்னாலும் கூப்பிடும்மா! வர்றேன். யாரை வேணும்னாலும் இட்டாம்மா (அழைத்து வருதல்) அவங்க கைல பேசிக்கிறேன். என்றாள் காரணம் என்ன?

ஊரே திரண்டு ஒருத்தி மீது அபாண்டத்தை அள்ளி வீசுகிறது. அவள் கலங்கினாளில்லை. காரணம் என்ன?

உன்னைக் கூண்டுல ஏத்துறேன்யா; சந்தி சிரிக்க வைக்கிறேன்யா, என்கிறார் ஒருவர். மற்றவரோ அவர் சொல்வதைப் புன்னகையுடன் பார்க்கிறார். இது எப்படிச் சாத்தியம்?

ஏன் என்னையே எடுத்துக் கொள்ளுங்களேன். என் விமானப் பயணங்களின் போது எனக்குத் தரப்பட்ட சிறிய அளவிலான அழகான விஸ்கி–பிராந்தி போத்தல்கள் என்னிடம் சேகரிப்பாக இருக்கின்றன. அவற்றைப் பார்க்க நேரிடும் நண்பர்கள் சிலரும் உறவினர்கள் சிலரும் என்னைப் பற்றி தவறாக எடைபோட வாய்ப்புண்டு. ஆனாலும் அதைப் பற்றி நான் சிறிதும் கவலைப்பட்டது கிடையாது. இதற்கு என்ன காரணம்?

மேற்கூறப்பட்ட கேள்விகள் எல்லாவற்றுக்கும் ஒரே ஒரு பதில் தான் இருக்க முடியும்.

அது, நியாயம் நம் பக்கம் இருக்கிறது என்பது தான்.

அமைச்சர்களையே தெரியட்டும்; பெரிய வ்பரிய ஐ.பி.எஸ்., ஐ.ஏ.எஸ். அதிகாரிகளே தெரியட்டும். இதனால் எல்லாம் நம் மனதிற்கு பெரிய பலமும், த்தைரியமும் வந்து விட வாய்ப்பு இல்லை. நாம் செய்த தவறிலிருந்து நம்மை தப்புவிக்க முன்வரும் இந்தப் பெரிய மனிதர்கள் ஒரு கட்டத்திற்கு மேல் "இனிமேல் முடியாது! நீ மாட்டிக் கொள்ள வேண்டியதுதான்," என்று கழன்று கொள்வார்கள்.

பொலிஸை தெரியும் என்கிற ஒரே காரணத்தினால் தவறு செய்பவர்கள் அத்தனை பேரும் மாட்டிக் கொண்டு முழிப்பதைப் பார்க்கத் தான் செய்கிறேன். அவர்கள் காப்பாற்றி விடுவார்கள்; இவர்கள் இருக்கிறார்கள் என்கிற தைரியத்தில் பாதை விலகியவர்கள் பலரும் கடைசியில் திணறிப் போகிறார்கள்.

நிறையச் சந்தர்ப்பங்களில் பார்த்தாயிற்று.

நியாயம் தரக்கூடிய பலத்திற்கு இணையாக எவ்வளவு பெரிய பதவியில் இருப்பவர்களும் சரி, அவர்கள் எத்தனை பேர்களாக இருந்தாலும் சரி இணையாகமாட்டார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2015 வினாத்தாள் பகுதி-2

12. கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.
    i) please think about others. ..........................................
    ii) I love my country. ..........................................

13. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி, ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.
    நீங்கள் ஆயத்தமா? ..........................................


14. கீழே தரப்பட்டுள்ள சிங்களச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக.
    மதுருவா ..........................................

15. பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக.
    சூரியன் உதிக்கிறது : ..........................................

16. எல்லைகள் தெரியாத வானம், பூமி, சமுத்திரம் என்பன இயற்கையின் அபூர்வ படைப்புகளாகும் நேரத்துக்கு நேரம் மாற்றமடையும் வானம் நம் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான அனுபவங்களைப் பெற்றுத் தரும். 'விந்தைமிகு வானம்' என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்களை எழுதுக. ( ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெறவேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)
    ..........................................
    ..........................................
    ..........................................

♦ தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.


17. எழுத்தில் தரப்பட்டுள்ள எண்ணை இலக்கத்தல் எழுதுக.
    அறுபத்தொன்பதாயிரத்துத் தொண்ணூற்றொன்பது ..........................................

18. 

பெட்டியினும் தரப்பட்டுள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகச் சிறிய எண்ணை எழுதுக.
..........................................

19. சமனான அடிகளைக் கொண்ட 4 முக்கோணப் பக்கங்களால் மாத்திரம் ஆக்கப்படும் திண்மத்தின் பெயர் என்ன? ..........................................

20. 
இந்த உருவில் நிறம் தீட்டப்பட்ட பகுதியைத் தசம எண்ணாக எழுதுக.
..........................................

21. 
தொட்டியிலுள்ள மீன்களின் எண்ணிக்கையை உரோம எண்குறியில் எழுதுக. ..........................................

22. பாடசாலை ஒன்றில் கலை நிகழ்ச்சிகள் 11.30 மணிக்கு ஆரம்பமாகி 14.15 மணிக்கு முடிவடைந்தன ஆயின் கலை நிகழ்ச்சிகள் எவ்வளவு நேரம் நடைபெற்றன?
    ..........................................


23. i) இவ் எண்கோலத்தில் அடுத்து வரும் எண்களை எழுதுக. 3, 12, 21, 30, .......
    ii) கீழே தரப்பட்டுள்ள எண்களின் ஒழுங்கு முறைக்கேற்ப எண்கோலம் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு நீக்கப்படவேண்டிய எண் யாது?
    64, 46, 32, 8 : ..........................................


24. பரிசளிப்பு விழாவுக்காக 810 புத்தகங்கள் கிடைத்தன. ஒரு பொதியில் 4 புத்தகங்கள் வீதம் இருக்குமாறு எத்தனை பரிசுப் பொதிகளைச் செய்யலாம்? ..........................................

25. 

வட்டத்திலுள்ள எண்களில் 8 இன் மடங்குகளைத் தெரிவு செய்க.
..........................................


26. எதிரே தரப்பட்டுள்ள உருவில் 1/2 ஐ (பென்சில் அல்லது பேனையால) நிறந்திட்டுக.



27. 

1) இவ்வுருவின் உள்ளே எத்தனை செங்கோணங்கள் உள்ளன? ..........................................
2) இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.
..........................................

28. கீழே தரப்பட்டுள்ள உருவைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடை அளிக்குக.



i) நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு எத்தனை கட்டங்களுக்குச் சமனாகும்?. ..................
ii) ஒவ்வொரு சிறிய கட்டத்தினதும் நீளம் 1 cm உம் அகலம் 1 cm உம் ஆகும். நிழற்றப்படாத பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர் ஆகும்? ..........................................

29. ஒரு கடையில் வைக்கப்பட்டுள்ள விலைப்பட்டியலில் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பால்மாப் பைக்கற்று | 1 | ரூ. 350.00 |
| தேயிலை | 1 kg | ரூ. 824.00 |
| சீனி | 1 kg | ரூ. 95.00 |


ஒரு பாடசாலையில் சிரமாதான நிகழ்வில் பங்குபற்றியவர்களுக்கு பால்த்தேநீர் வழங்குவதற்காகக் கீழே குறிப்பிடப்ட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு பொருட்கள் வாங்கப்பட்டன.

i) விலைப்பட்டியலுக்கு ஏற்ப அட்டவணையில் வெற்றிடங்களை நிரப்புக.

| வாங்கிய பொருள் | அளவு | விலை | |
|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் |
| பால்மா | 4 பைக்கற்று | 1400 | 00 |
| தேயிலை | 250 g | ......... | ..... |
| சீனி | 2 kg | ......... | ..... |
| | மொத்தம் | ......... | ......... |

ii) பால்த் தேநீரைத் தயாரிக்கும்போது முதலில் 4 லீற்றர் 750 மில்லிலீற்றரும் இரண்டாவதாக 3 லீற்றர் 450 மில்லீற்றரும் தயாரிக்கப்பட்டன. தயாரிக்கப்பட்ட பால் தேநீரின் மொத்தக் கனவளவு எவ்வளவு? ..........................................

30. 2015 ஆம் ஆண்டின் சுற்றாடல் தினத்தை முன்னிட்டு தரம் 5 மாணவர்களால் தமது பாடசாலைத் தோட்டத்தில் நடப்பட்ட பூச்செடி வகைகள் தொடர்பான தகவல்கள் இவ்வரைபில் காட்டப்பட்டுள்ளன.





i) தரப்பட்டுள்ள ரோஜாச் செடிகளின் எண்ணிக்கை செவ்வந்திச் செடிகளின் எண்ணிக்கையின் இரு மடங்காகும். செவ்வந்திச் செடிகளின் எண்ணிக்கையை வரைபில் காட்டுக.
ii) மிகக் குறைந்த அளவில் நடப்பட்டுள்ள செடி வகையின் பெயர் என்ன? ................
iii) நடப்பட்டுள்ள செடிகளின்மொத்தஎண்ணிக்கை எவ்வளவு? ..........................................

♦ 31 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.

31. வாசனை மிக்க பூ
    1) பவளமல்லிகை 2) அந்தூரியம் 3) செவ்வரத்தை 4) போகன்விலா
32. கொடிகளில் காய்க்கும் பழம்
    1) நெல்லி 2) திராட்சை 3) மாதுளை 4) விளாம்பழம்
33. கிளைகளிலும் தண்டிலும் காய்கள் உண்டாக்கும் தாவரம்
    1) பலா 2) வெரலு 3) மங்குஸ்தான் 4) இறப்பர்
34. அழகுக்காக வைக்கப்படும் பூச்சாடிகளில் பூக்களை அதிக நாட்கள் வாடாமல் வைத்திருப்பதற்காகச் சாடியிலுள்ள நீருடன் சேர்ப்பதற்குப் பொருத்தமான பொருள் யாது?
    1) ஓமத்திராவகம் 2) ஓடிக்கொலோன் 3) உப்பு 4) அஸ்பிரின்
35. இலங்கைக்கே உரித்தான முலையூட்டி விலங்கு
    1) நீலப்புள் 2) புள்ளிக்கோட்டி 3) கருங்குரங்கு 4) மலைப்பாம்பு
36. சக்தியைத் தரும் உணவு
    1) பசளி 2) போஞ்சி 3) வெண்டி 4) ஈரப்பலா
37. எலியின் உடலில் வாழும் தெள்ளு மூலம் பரவும் நோய் எது?
    1) கழிச்சல் 2) யானைக்கால் 3) நீர்வெறுப்பு 4) கொள்ளை
38. பயிர்களுக்கு நாசம் விளைவிக்கும் நத்தைகளை உணவாகக் கொள்ளும் விலங்கு
    1) கீரி 2) செண்பகம் 3) முள்ளம்பன்றி 4) பாம்பு
39. பின்வரும் எப்பாத்திரத்தில் உணவைத் தயாரிக்கும்போது புளியை இடுதல் உகந்ததன்று?
    1) மட்பாத்திரத்தில் 2) அலுமினியப்பாத்திரத்தில்
    3)பிளாஸ்ரிக் பாத்திரத்தில் 4) கண்ணாடிப் பாத்திரத்தில்
40. நுளம்புகள் எமது அருகில் வருவதைத் தவிர்ப்பதற்காக உடம்பில் பூசுவதற்குப் பொருத்தமான எண்ணெய்
    1) மரக்கறி எண்ணெய் 2) நல்லெண்ணெய்
    2) காவட்டம் புல் எண்ணெய் 4) தேங்காய் எண்ணெய்
41. ஆழமான கிணற்றிலிருந்து நீரை மேலே எடுப்பதற்குப் பயன்படுகின்ற, வேலையை இலகுவாக்கும் பொறி எது?
    1) நீர்ச்சில்லு 2) பற்சில்லு 3) திருகுபிடி 4) கப்பி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2015 வினாத்தாள் பகுதி-2

42. 

தலையணை உறைக்கு உருவில் காட்டப்பட்டவாறான பூவைத் தைக்கும்போது பூ இதழ்களைச் சுற்றித் தைக்க வேண்டிய தையல் எது?
1) சங்கிலித் தையல் 2) நரம்புத் தையல்
3) கம்பளித் தையல் 4) வெட்டுக்குத்துத் தையல்

43. மகாவலி ஆறு கடலுடன் சேரும் இடத்தை அண்டிய நகரம் எது?
1) திருகோணமலை 2) மட்டக்களப்பு 3) முல்லைத் தீவு 4) புத்தளம்

44. மரவேலைப்பாடுகளுக்குப் பிரசித்தி பெற்ற இடம்
1) யாப்பகுவ காவலரண் 2) லோவாமஹாபாய
3) எம்பக்க தேவாலயம் 4) இசுறுமுனி விகார

45. எல்லாச் சமயத்தினரும் வணங்கித் துதிக்கும் சிவனொளி பாதம் அமைந்துள்ள மாகாணம் எது?
1) ஊவா மாகாணம் 2) மத்தியமாகாணம்
3) கிழக்கு மாகாணம் 4) சப்பிரகமுவ மாகாணம்

46. இலங்கை மக்களால் சுதந்திரதினம் கொண்டாடப்படுவது
1) ஜனவரி முதலாம் திகதி 2) பெப்ரவரி 04 ஆந்திகதி
3) ஏப்பிரல் 13 ஆந்திகதி 4) மே 01 ஆந்திகதி


47. இலங்கையின் தேசியக்கொடி, அரச இலச்சினை ஆகிய இரண்டிலும் காணப்படும் குறியீடு எது?
1) பூவிதழ்கள் 2) நிறைகுடம் 3) அரச இலைகள் 4) வாளேந்திய சிங்கம்

48. எல்லா இலங்கை நாணயத்தாள்களிலும் காணப்படும் ஒரு பொது இயல்பு
1) நிறைகுடத்தின் உருவம் காணப்படல்
2) நீர்வீழ்ச்சியின் உருவம் காணப்படல்
3) இலங்கை மத்திய வங்கி எனக் குறிப்பிடப்பட்டிருத்தல்
4) நாணயத்தின் பெறுமதி சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருத்தல்

49. ஒலிம்பிக்கொடியில் காணப்படும் வளையங்களின் நிறங்களுள் மூன்றைக் குறிக்கும் விடையைத் தெரிவு செய்க.
1) சிவப்பு, நீலம், மஞ்சள் 2) சிவப்பு, கறுப்பு, ஊதா
3) கறுப்பு, பச்சை, கபிலம் 3) நீலம், வெள்ளை, சிவப்பு


50. உணவு உட்கொள்ளல் தொடர்பாக எம்மிடம் இருக்கவேண்டிய சிறந்த பழக்கம்
1) உடனடி உணவுகளை அடிக்கடி பயன்படுத்துதல்
2) இனிப்புச் சுவையுடைய உணவுகளை அதிகமாக உண்ணல்
3) பிரதான உணவு வேளைகளில் கீரைவகை ஒன்றைச் சேர்த்துக்கொள்ளல்
4) ஓய்வு எடுக்கும் எல்லா வேளைகளிலும் உணவு உட்கொள்ளல்

51. சிற்றுண்டிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கும் உரு 1 இலும் உரு 2 இலும் காட்டப்பட்டுள்ள பாத்திரங்களினுள் இடுவதற்குப் பொருத்தமான பொருட்கள் 2 ஐ ஒழுங்கு முறையில் காட்டும் விடையைத் தெரிவு செய்க.




1) வாழைப்பழத்தோல், கடதாசி
2) எஞ்சியள்ள உணவு, கடதாசி
3) கடதாசி, யோகட் கோப்பை
4) யோகட் கோப்பை, பிளாஸ்ரிக் மூடி

52. அகலமான பாதையைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உருவக் குறியீடு யாது?




1) 2) 3) 4)

53. அகற்றப்படுகின்ற மழைப்பீலித் துண்டொன்றை பயிர்செய்கைக்குப் பயன்படுத்தப்படும் விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது. இம்மாற்றுமுறை தொடர்பாகக் கீழே குறிப்பிட்டவற்றுள் சரியானது எது?




1) பராமரிப்பது கடினம்
2) ஒரே இடத்தில் வைத்து வளர்க்கவேண்டும்
3) விலங்குகளிடமிருந்து பாதுகாப்பது கடினம்
4) இடவசதி குறைவாக உள்ள இடங்களில் வளர்ப்பது உகந்தது.

54. எமக்குத் தகவல்களை "நேரடி" ஆக வழங்கத்தக்க ஓர் ஊடகம்
1) பத்திரிகை 2) கையேடுகள் 3) வானொலி 4) அறிவித்தல்

55. தபால் பெட்டியில் குறிப்பிடப்பட்டிருப்பது.
1) திறந்து வைத்தவரின் பெயர் 2) கடிதம் கொண்டிருக்க வேண்டிய கூடிய நிறை
3) கடிதங்களை எடுக்கும் நேரம் 4) கடிதங்களை எடுக்கும் திகதி

56. A,B அகிய சிறிய கண்ணாடிக் குவளைகள் இரண்டிலும் ஆரோக்கியமான பாசிப்பயறு வித்துக்கள் சம அளவில் இடப்பட்டுள்ளன. குவளை A யில் வித்துக்கள் நன்கு மூடப்படும் வரை நீர் இடப்பட்டுள்ளது. குவளை B யில் ஈரமான பஞ்சின் மீது வித்துக்கள் இடப்பட்டுள்ளன. இவ்விரு குவளைகளையும் சூரிய ஒளி உள்ள இடத்தில் வைத்து. சில நாட்களின் பின் சோதித்துப் பார்க்கும்போது கிடைக்கும்அவதானிப்பு எதுவாக இருக்கும்.




1) குவளை A யில் வித்துக்கள் நன்றாக முளைத்திருக்கும்
2) குவளை B யில் வித்துக்கள் நன்றாக முளைத்திருக்கும்
3) A,B ஆகிய குவளைகள் இரண்டிலும் வித்துக்கள் நன்றாக முளைத்திருக்கும்
4) A,B ஆகிய குவளைகள் இரண்டிலும் வித்துக்கள் முளைத்திருக்காது.

57. மின்குமிழைக் கண்டுபிடித்த பெருமைக்குரியவர்
1) ஜோன் பெகி பெயாட் 2) தோமஸ் அல்வா எடிசன்
3) ஆதர் சீ கிளாக் 4) அலெக்சாண்டர் கிரகம் பெல்

58. ஆபத்து ஏற்படுத்துவதற்கு அதிக சாத்தியமுள்ள சந்தர்ப்பம் ஒன்று
1) வீதிச் சமிஞ்ஞையில் சிவப்பு மனிதன் காட்சியளிக்கும்போது மஞ்சட் கடவையினூடாக வாகனங்கள் செல்லுதல்
2) மின்னல் ஏற்படும்போது வீட்டிலுள்ள பலகைக் கட்டிலின் மீது நித்திரை கொள்ளல்
3) விளையாட்டு விழா முடிவடைந்தவுடன் பட்டாசு கொளுத்துதல்
4) உலர்ந்த இறப்பர் கால்மிதியின் மீது நின்றுகொண்டு மின் அழுத்தியினால் துணிகளை அழுத்துதல்

59. ஒருவருடைய காலில் பாம்பு கடித்துள்ள சந்தர்ப்பத்தில் அவருக்கு முதலுதவி வழங்கும்போது முதலில் செய்யவேண்டியது
1) பாம்பைக் கண்டுபிடித்து இனங்காணல்
2) கடித்த இடத்தில் தூய தண்ணீரால் கழுவுதல்
3) பந்தனத்தின் (பண்டேஜின்) மூலம் கால்கள் இரண்டையும் கட்டி அசையாது வைத்திருத்தல்
4) சூடான பானத்தைப் பருகக் கொடுத்தல்

60. "நான் எனது வீட்டுக்கும் பாடசாலைக்கும் நாட்டுக்கும் செய்யவண்டிய பொறுப்புக்களைச் செய்யும் பிள்ளையாவேன்." இவ்வெண்ணம் மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டின் எத்தனையாவது படிமுறைக்கு உரியதாகும்?
1) முதலாம் படிமுறை 2) இரண்டாம் படிமுறை
3) நான்காம் படிமுறை 5) ஐந்தாம் படிமுறை

### 04.08.2017, 09.08.2017 ஆகிய திகதிகளில் பிரசுரிக்கப்பட்ட பகுதி-1 வினாக்களின் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1) 2 | 11) 3 | 21) 1 | 31) 1 |
| 2) 1 | 12) 2 | 22) 1 | 32) 1 |
| 3) 3 | 13) 3 | 23) 3 | 33) 1 |
| 4) 1 | 14) 2 | 24) 2 | 34) 1 |
| 5) 3 | 15) 1 | 25) 3 | 35) 3 |
| 6) 1 | 16) 3 | 26) 2 | 36) 2 |
| 7) 2 | 17) 3 | 27) 3 | 37) 1 |
| 8) 3 | 18) 1 | 28) 3 | 38) 1 |
| 9) 2 | 19) 2 | 29) 2 | 39) 2 |
| 10) 1 | 20) 2 | 30) 1 | 40) 3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் குடியிருப்புக்கு மத்தியில் மயானங்கள் வேண்டாம்

## போராட்டம் 30 ஆவது நாளாகத் தொடர்ந்தது










(யாழ்ப்பாணம்)

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு முன்னெடுத்துவரும் மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியிலுள்ள மயானங்களை அகற்றுமாறு கோரும் போராட்டம் நேற்று 30 ஆவது நாளாக புத்தூர் கலைமதி மக்கள் மண்டப முன்றலில் நடைபெற்றது.

இதேவேளை நேற்று முன்தினம் பிற்பகல் வடக்கு மாகாண ஆளுநரின் அழைப்பின் பேரில் புத்தூர் மேற்கு கிந்துசிட்டி மயானம் பற்றிய கலந்துரையாடல் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர், ஜே/273 புத்தூர் மேற்கு கிராம உத்தியோகத்தர் மற்றும் அதிகாரிகள் உட்பட கலைமதி சனசமூக நிலைய நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இச்சந்திப்பில் புத்தூர் மேற்கு கிந்துசிட்டி மயானம் பற்றிய நியாயபூர்வமான கோரிக்கைகளை கலைமதி சனசமூக நிலைய நிர்வாகிகள் முன்வைத்தனர்.

(இ

# அதிசய ஆண் குழந்தை

இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக அதிக நிறையுடைய ஆண் குழந்தையொன்று பிறந்துள்ளது.

இக்குழந்தை பலப்பிட்டிய வைத்தியசாலையில் பிறந்திருந்தது. குழந்தை 5.94 கிலோ கிராம் (11 இறாத்தல்) நிறையை கொண்டுள்ளது. கின்னஸ் உலக சாதனை புத்தகத்திற்கமைய, இதுவரையில் உலகில் பிறந்த அதிக நிறையுடனான குழந்தைகள் தரவரிசையில் இந்த குழந்தை 11ஆவது இடத்தை பிடித்துள்ளது.

இதற்கு முன்னர் 22 இறாத்தல் எடையை கொண்ட இரு குழந்தைகள் அமெரிக்கா மற்றும் இத்தாலியில் பிறந்துள்ளது. 19 இறாத்தல் குழந்தை ஒன்றும் 17 இறாத்தல் குழந்தைகள் இரண் டும், 16 இறாத்தல் குழந்தைகள் மூன்றும், 15 இறாத்தல் குழந்தைகள் இரண்டும் பிறந்துள்ளன.

இலங்கையில் ஹொரவல, ஹபுருகல பிரதேசத்தை சேர்ந்த நதீஷா நில்மினி என்ற பெண்ணுக்கு இந்த ஆண் குழந்தை பிறந்துள்ளது. 28 வயதான அவருக்கு இது முதல் குழந்தையாகும்.

குழந்தையின் நிறை அதிகம் என்பதை 6 - 7 மாதத்திலேயே அறிந்து கொண்டதாகவும், அதற்கமைய ஆலோசனை வழங்கப்பட்டதாகவும் இந்த சத்திரசிகிச்சையை தங்கள் மருத்துவ வாழ்க்கையில் மறக்க முடியாது என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (இ-7)



## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1159

Search for people, places and things Nagendram Home

### பரதன்




### நித்தியா




### வரதன்




### சிந்து




### குமார்




### நிமா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## எதிர்பார்ப்பு



ஒரே நாள் பிரபலம் என்பது போல் ஒரே நிகழ்ச்சி மூலம் ஒட்டுமொத்த இளைஞர்களின் மனதை கவர்ந்தவர் ஓவியா.

இவர் Bigg Boss நிகழ்ச்சியை தொடர்ந்து பிரபல மாலுக்கு சென்று ரசிகர்களின் அன்பையும் பெற்றிருந்தார். இந்த நிலையில், ஓவியா தற்போது விஷ்ணு, ரெஜினா நடிக்கும் சிலுக்குவார்பட்டி சிங்கம் படத்தில் சிறப்பு வேடத்தில் நடிக்க இருக்கிறாராம்.

Bigg Boss நிகழ்ச்சிக்கு பிறகு அவருக்கு வந்த வாய்ப்பு இது என்று கூறப்படுகிறது. ஆனால், அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள போவதற்கு முன்னரே ஓவியா படத்தில் கமிட்டாகி இருக்கிறார்.

Bigg Bossற்கு பிறகு ஓவியா நடிப்பில் வெளியாகும் படம் என்பதால் பெரிய வரவேற்பு கிடைக்கும்

## ஆபத்து



பிக்போஸ் நிகழ்ச்சி முன்பு போல் பரபரப்பாக ஏதும் இல்லை. மீண்டும் ஓவியாவை அழைக்கலாமா? என்று தொலைக்காட்சி தரப்பே பேசி வருகின்றது. இந்நிலையில் இன்று வெளிவந்த நிகழ்வில், காயத்ரி என்னை, என்னால் பார்த்துக்கொள்ள முடியும் என கூறினார்.

அதற்கு ரைஸா கொஞ்சம் கிண்டலாக சிரிக்க, காயத்ரி உச்சக்கட்ட கோபத்திற்கு சென்றுள்ளார். ஓவியா-காயத்ரி போல் தற்போது ரைஸா-காயத்ரி போட்டி ஆரம்பித்துள்ளது.

## சக்தி இன்றி காயு இல்லை




பிக்போஸ் நிகழ்வில் ஓவியா வெளியேறுவதற்கு காரணமாக இருந்த போட்டியாளர்கள் மீது மக்கள் கடும் அதிருப்தியில் இருக்கிறார்கள். குறிப்பாக காயத்ரி ரகுராம், ஜூலி மீது கடும் கோபத்தில் உள்ளனர். ஜூலி வெளியேறிய போது அவரை ரசிகர்கள் யாரும் எதுவும் செய்யாதீர்கள் என கமல்ஹாசன் வேண்டுகோள் வைக்கும் அளவுக்கு உள்ளது நிலைமை.

இந்நிலையில் பிக்போஸ் வீட்டில் உள்ள காயத்ரி ரகுராமை பழிவாங்க நடிகை ஸ்ரீபிரியா யோசனை ஒன்றை டுவிட்டரில் கூறியுள்ளார். பிக்போஸ் வீட்டில் பரணி மற்றும் ஓவியா புறக்கணிக்கப்பட்டு தனிப்படுத்தப்பட்டதே அவர்கள் மன ரீதியாக பாதிக்கப்பட்டு தாங்களாகவே வெளியேற காரணமாக கூறப்படுகிறது. இந்நிலையில் அந்த தனிமையை காயத்ரி உணர வேண்டும் என ஸ்ரீபிரியா கூறுகிறார்.

ஸ்ரீபிரியா தனது டுவிட்டரில் பிக்போஸ் வீட்டில் இருந்து சக்தி கிளம்பவேண்டும் காயத்ரி அங்கேயே இருந்து தனியாக கிடந்து தவிக்க வேண்டும். எப்படி என்னுடைய திட்டம் என கேட்டுள்ளார்.

காயத்ரி எப்பொழுதும் ஷக்தியுடனே பேசிக்கொண்டு இருப்பார். இருவரும் சேர்ந்து புறம் பேசுவதே வழக்கம். சக்தி இல்லை என்றால் காயத்ரி இல்லை என பிக்போஸ் வீட்டில் உள்ளவர்களே சொல்கிறார்கள். இந்த ஆயுதத்தை தான் தற்போது கையிலெடுக்க சொல்கிறார் ஸ்ரீபிரியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தளபதிக்கு ஜோடி



விஜய், முருகதாஸ் கூட்டணியில் துப்பாக்கி, கத்தி என இரண்டு வெற்றி படங்களை வந்துவிட்டது. இப்படங்களை தொடர்ந்து மூன்றாவது முறையாக இருவரும் இணைய இருப்பதாக அதிகாரப்பூர்வ தகவல் வந்துவிட்டது.

இந்த நிலையில் விஜய் நடிக்கப்போகும் இந்த படத்தில் BiggBoss புகழ் ஓவியா நடிக்க இருப்பதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் பரவி வருகிறது. ஆனால் இந்த தகவல் எந்தளவுக்கு உண்மை என்பது தெரியவில்லை. ஆனால் ஒரு சில ரசிகர்கள் நடந்தால் நன்றாக இருக்குமே என்று கூறி வருகின்றனர்.

## இதுதான் காரணம்



பிக்போஸ் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள டான்ஸ் மாஸ்டர் காயத்ரி அடிக்கடி கெட்ட வார்த்தை பேசியதால் அவருக்கு எதிராக பலரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். கமல் கூட அவருக்கு பலமுறை அறிவுரை கூறியுள்ளார். இந்நிலையில் காயத்ரி தனக்கு ஏன் கெட்ட வார்த்தை பேசும் பழக்கம் வந்தது என்று விளக்கியுள்ளார்.

நான் ஆணாதிக்கம் அதிகமுள்ள துறையில் பணி யாற்றுகிறேன். அதற்காகவே ஒரு வேஷம் போட வேண்டியதாகி விட்டது. கெட்ட வார்த்தை பேச பழகிக்கொண்டேன். மனசில் பட்டத்தை கேட்டுவிடுவேன் ஆனால் எந்த கெட்ட வார்த்தையும் மனசில் இருந்து வராது" என தெரிவித்துள்ளார்.

## சதி



BiggBoss நிகழ்ச்சி இது வரை ஒளிபரப்பானதில் ரசிகர்கள் எதிர்பாராதது பரணி மற்றும் ஓவியா வெளியேற்றம். பரணி அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவராலும் ஒதுக்கப்பட்டு அங்கு இருக்க முடியாமல் வெளியேறினார். அதேபோல் மற்றவர்கள் ஒதுக்கினாலும் தைரியமாக இருந்த ஓவியா சில விடயங்களால் உடல் நிலை சரியில்லாமல் வெளியேறினார். இந்த நிலையில் ஷக்தி, வையாபுரி, சிநேகன், ஆரவ் அனைவரும் கணேஷ் அவர்களை தாக்குகின்றனர். நீங்கள் உங்கள் வேலையை மட்டும் பார்க்கிறீர்கள், மற்றவர்களின் பிரச்சினையை கண்டு கொள்ளவில்லை போன்ற விடயங்களை கூறி தாக்குகிறார்கள்.

# பிணைமுறி மோசடியாளர்களை விசாரித்து தண்டனை வழங்க சிறப்பு நீதிமன்றம் தேவை

## ஜே.வி.பி. அரசிற்கு அழுத்தம்

(கொழும்பு)

பொதுமக்களின் பணத்தை கோடிக்கணக்கில் சூறையாடியிருக்கும் பிணைமுறி மோசடியாளர்களை விசாரித்து உரிய தண்டனைகள் வழங்க சிறப்பு நீதிமன்றமொன்றை அரசு உடனடியாக அமைக்க வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) அரசிற்கு அழுத்தம் கொடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த கட்சியின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் சிங்கள ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிகையில்,

இதற்கு முன் "அவன் கார்ட்" விவகாரத்தில் சிக்கிய அமைச்சர் திலக் மாரப்பன தனது பதவியிலிருந்து விலகிக்கொண்டார்.

அவரைப்போலவே பிணைமுறி மோசடியில் தனது தில்லுமுல்லுகள் தெட்டத் தெளிவாக வெளியாகியுள்ள நிலையில், ரவி கருணாநாயக்க பதவியிலிருந்து விலகி தனது கைகளைக் கழுவிக் கொண்டு தப்பித்துக் கொள்ள இடமளிக்காமல் அவருக்கு சட்டத்தின் உச்சபட்ச தண்டனை வழங்கப்பட வேண்டும்.

ரவி கருணா நாய க்கவுக்கு எதிரான குற்றச் சாட்டுகள் பற்றிய விசாரணை நடத்துவதற்கு இரண்டு வருட காலம் சென்றுள்ளது. இதற் கிடையில் பல்வேறு அமைச்சரவை மாற்றங்களும் நட ந்துள்ளன.

குற்றம்சுமத்தப்பட்டுள்ள ஒருவரை அது பற்றிய விசா ரணைகள் முடியும்வரை பத வியிலிருந்து விலக்கியிருக்க வேண்டும் அல்லது இடை நிறுத்தம் செய்திருக்க வேண்டும்.

அவ்வாறு செய்யாமல் நிதியமைச்சராக இருந்தவரை வெளிவிவகார அமைச்சராக்கி அரசு கண்துடைப்பு நாடகங்களை அரங்கேற்றி வந்துள்ளது.

ஜனாதிபதி ஆணைக் குழுவின் முன்னிலையில் ரவியினதும் அவரது தோழர் அலோசியஸினதும் மோசடிகள் சந்தேகத்துக்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டுள்ள போதிலும் அரசு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் சப்பைகட்டு சமாதானங்களை கூறிவருகின்றது.

இத்தகைய பாரிய மோசடிகளை செய்து அப்பாவி மக்களின் கோடிக்கணக்கான பணத்தை விழுங்கி ஏப்பமிட்டுள்ள குற்றவாளிகள் எதுவுமே நடக்காதது போல இன்னும் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சம்பூர் வைத்தியசாலைமுன் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

திருகோணமலை, சம்பூர் வைத்தியசாலைக்கு முன்பாக பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 9 மணியளவில் பிரதேச மக்கள் இணைந்து ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

சம்பூர் வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை நிலவுவதாகவும், அதனை நிவர்த்தி செய்து தருமாறும் கோரியே பிரதேச மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த வைத்தியசாலைக்கு வாரத்தில் ஓரிரு தினங்களில் மாத்திரமே வைத்தியர்கள் சமுகமளிப்பதாகவும், இதனால் நோயாளிகள் சிரமப்படுவதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

குறித்த வைத்தியசாலை அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## நடத்துநரை தாக்கிவிட்டு கொள்ளை

### இருவர் கைது

பதுளை பிரதான பஸ் தரிப்பிடத்திற்கு அருகில் பஸ் நடத்துநர் ஒருவரைத் தாக்கிவிட்டு அவர் வசம் இருந்த பணத்தை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமாக பஸ் நடத்துநரே இவ்வாறு தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

மேலும், இவரிடம் இருந்த 14,917 ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. (இ-7)

## மாத்தறையில் கைக்குண்டுடன் இருவர் கைது

மாத்தறை - கந்தர பிரதேசத்தில் கைக்குண்டுடன் இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை கந்தர பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பாதோகம பாடசாலைக்கு அருகாமையில் பயணித்த ஆட்டோ ஒன்றை சோதனையிட்ட போது, கைக்குண்டுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். 24 மற்றும் 27 வயதான திக்வெல்ல பிரதேச த்தைச் சேர்ந்தவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7)

## பொய்ச்சாட்சி வழங்கியவருக்கு 18 மாத கடூழிய சிறைத்தண்டனை

### மேல் நீதிமன்றம் அதிரடி உத்தரவு

எம்பிலிபிட்டிய பகுதியின் கிராமசேவகர் ஒருவர் இலஞ்சம் பெற்றார் எனக் கூறி அவருக்கு எதிராக தொடரப்பட்டிருந்த வழக்கில், அவரை விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம், பிரதான சாட்சியாளரான இலஞ்சம் கொடுத்ததாக கூறியவரை சிறையில் அடைக்க உத்தரவிட்டது.

கடந்த 2012 ஆம் ஆண்டு தன்னிடம் 15000 ரூபாவை இலஞ்சமாக பெற்றுக் கொண்டார் எனக் கூறி கிராம சேவகர் ஒருவருக்கு எதிராக எம்பிலிபிட்டியவைச் சேர்ந்த ஆர். எஸ். புண்ணியதர்ஷன என்பவர் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்து அது தொடர்பிலான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது இலஞ்சம் வழங்கியதாக கூறிய நபர் பிரதான சாட்சியாளர் என்ற ரீதியில் நேற்று முன்தினம் சாட்சியமளித்தார். இதன் போது அவரது சாட்சியம் பொய்யானது என்பது நீதிபதிக்கு தெளிவான நிலையில், குற்றம்சாட்டப்பட்ட கிராம சேவகரை வழக்கில் இருந்து முழுமையாக விடுவித்து நீதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன் பொய்யான சாட்சியம் வழங்கி நீதிமன்றை அவமதித்தமை தொடர்பில் சாட்சியாளரான புண்ணியதர்ஷனவுக்கு 18 மாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். (இ-7)

## அனைத்து தேர்தல்களும் தொகுதிவாரி அடிப்படையில் நடத்தப்படும் - துமிந்த



அனைத்து தேர்தல்களும் தொகுதிவாரி அடிப்படையில் நடத்தப்படும் என அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார். 20ம் திருத்தச் சட்டம் தொடர்பில் அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகள் குறித்து உச்ச நீதிமன்றின் பரிந்துரைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டு வரையில் தேர்தல்களை ஒத்தி வைக்கும் நோக்கில் இவ்வாறு திருத்தச் சட்டம் கொண்டு வரப்படுகின்றதா என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

பாராளுமன்றம், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் தொகுதிவாரி அடிப்படையில் நடத்தப்படும் என அவர் தெரிவித்தார். (இ-7)

## மட்டக்களப்பில் லொறி தடம்புரண்டு விபத்து



மட்டக்களப்பு - தன்னாமுனை பகுதியில் நேற்று அதிகாலையளவில் லொறியொன்று தடம்புரண்டு விபத்திற்கு உள்ளாகியுள்ளது.

திருகோணமலையில் இருந்து, காத்தான்குடி நோக்கிப் பயணித்த லொறியொன்றே தடம்புரண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்தில் லொறியின் சாரதியும், உதவியாளரும் சிறு காயங்களுடன் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ள போதிலும், லொறி பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)



யாழ். புனித பொஸ்கோ வித்தியாலயத்தில் கல்வி கற்கும் தரம் -5 மாணவர்களுக்கான மகிழ்வூட்டும் அரங்க நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை பாடசாலை அதிபர் அருட்சகோதரி ஜொசாந்தி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:-தெல்லிப்பழை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுமியின் பெற்றோரை சந்தித்த ஜனாதிபதி



பிலியந்தலையில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த சிறுமியின் பெற்றோரை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

கடந்த மே மாதம் 09ஆம் திகதி போதைப்பொருள் சுற்றிவளைப்புக்கு சென்ற பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பணியக அலுவலர்கள் மீது பிலியந்தலையில் வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இச் சம்பவத்தில் தனது தந்தையாரின் கடைக்கு அருகில் நின்று கொண்டிருந்த சமாதி ரன்சிகா எனும் 11 வயதுச் சிறுமி உயிரிழந்தார். அத்துடன் இச் சம்பவத்தில் அவரது மூத்த சகோதரர் மற்றும் தங்கை இருவரும் படுகாயமடைந்திருந்தனர்.

இந்நிலையில் சிறுமியின் பெற்றோர் மற்றும் சகோதரர்களை சந்தித்த ஜனாதிபதி நலன் விசாரித்ததுடன், சம்பவம் தொடர்பில் தனது அனுதாபங்களையும் தெரிவித்ததுடன் அக் குடும்பத்தின் எதிர்காலத்துக்காக நிதி உதவியும் வழங்கியுள்ளார். (இ-7)

# வைத்தியசாலையிலிருந்த கைதி திடீரென தப்பியோட்டம்

சிறை அதிகாரிகளின் பாதுகாப்பில், விலங்கிடப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவந்த கைதி ஒருவர் சினிமா பாணியில் அங்கிருந்து தப்பிச் சென்றமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

வாரியப்பொல பகுதியைச் சேர்ந்த முதியன்சலாகே பிரியந்த ஜய்மகா எனும் கைதியே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்து சிகிச்சைகளுக்காக தேசிய வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டுள்ள குறித்த கைதி, வைத்தியசாலையில் 20 ஆவது வோர்ட்டில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இதன்போது அந்த வோர்ட்டில் உள்ள கட்டிலில் குறித்த கைதிக்கு விலங்கிடப்பட்டே சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது.

இதன்போது தனக்கு இயற்கை தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டியுள்ளதாக கூறி அந்த கைதி வைத்தியசாலை மலசல கூடத்துக்கு தன்னை அழைத்துச் செல்லுமாறு கோரியுள்ளார்.

அதன்படி கைதியை மலசல கூடத்துக்கு அழைத்துச் சென்றுள்ள சிறைக் காவலர், மலசல கூடத்தின் வெளியே, உள்ளே சென்ற கைதி வரும் வரை காவலுக்கு நின்றுள்ளார்.

வெகுநேரமாகியும்உள்ளே சென்ற கைதி வெளியில் வராததன் விளைவாக கதவை திறந்து பார்த்த போது கைதி தப்பிச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

மலசலகூடத்தில் காற்றோட்டத்திற்காக வைக்கப்பட்டுள்ள சிறிய ஜன்னலுக்கு அருகே, சுவரின் கல்லொன்றை அகற்றி, அருகில் செல்லும் குழாயின் உதவியுடன் அங்கிருந்து குறித்த கைதி தப்பிச் சென்றுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மேல் நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு வரும் வழக்கொன்றில், பிரதிவாதியான குறித்த கைதி, தான் மரணித்துவிட்டதாக போலியாக மரணச் சான்றிதழ் ஒன்றினை மன்றில் முன்வைத்து அது தொடர்பில் கைது செய்யப்பட்டு மீள விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார். சம்பவம் தொடர்பில் சிறை அதிகாரிகள் விசேட விசாரணை ஒன்றினை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# நடுக்கடலில் ஆபத்தில் சிக்கிய அறுவருக்கு உதவிக்கரம் நீட்டிய இலங்கைக் கடற்படை

தென் கடற்பரப்பில் விபத்துக்குள்ளாகி சுமார் 3 வார காலமாக மிதந்து கொண்டிருந்த படகொன்றில் இருந்த 6 மீனவர்கள் நேற்று முன்தினம் அதிகாலை பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 21ஆம் திகதி அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட "தினு புதா 1 " என்ற படகு இயந்திரக் கோளாறு காரணமாக பழுதடைந்தது.

இதனையடுத்து கடற்படையினர் மேற்கொண்ட தேடுதலின் அடிப்படையிலேயே அவர்கள் மீட்கப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த படகு அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து புறப்பட்டதாகவும் சுமார் 240 கடல் மைல்கள் தூரத்தில் இயந்திரத்தில் ஏற்பட்ட செயல்நீக்கத்தினால் கடலில் மிதக்க தொடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, "சாகர" கப்பலினூடாக மீட்புப் பணிகளை முன்னெடுத்த கடற்படையினர், குறித்த ஆறு மீனவர்களையும் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

அவர்களுக்கு தேவையான முதலுதவி உட்பட உணவு மற்றும் பிற தேவைகளை குறித்த கப்பலின் கடற்படையினரால் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# பழந்தமிழர் ஆய்வு மாநாட்டுக்கு ஆய்வுக்கட்டுரைகளை அனுப்பவும்

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் இறுதிப் பகுதியில் பழந்தமிழரும் பௌத்தமும் எனும் கருப்பொருளில் பழந்தமிழர் ஆய்வு மாநாடு -2017 நடத்தப்பட இருப்பதனால் இம் மாநாட்டுக்கு ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 19.09.2017 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் ஆய்வுக் கட்டுரைகளை ம. வித்தியானந்தநேசன், நிறுவுநர், பழந்தமிழர் இயக்கம், இல-07, கலைமகள் வீதி, அரியாலை மேற்கு யாழ்ப்பா ணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது mvithiyanan thanesan@ gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(இ)

# நாமல் ராஜபக்ஷவின் கடந்தகால ஊழல்கள் விசாரிக்கப்படுமா?

## சுஜீவ கேள்வி

மத்திய வங்கி பிணை முறி மோசடி விவகாரத்தை ஜனாதிபதி ஆணைக்குழு விசாரிப்பது போன்று மகிந்த ஆட்சியில் நாமல் ராஜபக்ஷ தனி அறையில் இருந்து திருட்டுத்தனமாக சட்டக் கல்லூரி பரீட்சை எழுதிய விடயமும் விசாரிக்கப்படுமா? என்று பிரதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த ஆட்சியின் ஊழல்வாதிகளைப் பிடிப்பதும் தற்போதைய ஆட்சியின் ஊழல்வாதிகளைத் தப்பிக்க விடுவதும் அரசின் நோக்கமல்ல. எல்லா ஊழல்வாதிகளும் தண்டிக்கப்பட வேண்டும். அதனை மக்கள் உணர்ந்துள்ளனர்.

மகிந்த ஆட்சியில் எந்தவோர் ஊழல்வாதிக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதுபற்றி பேசுவதற்கே அனுமதி வழங்கப்படவில்லை. இந்த ஆட்சியில் அப்படி இல்லை என்பதை நாங்கள் சொல்லத் தேவை இல்லை. மக்கள் அவதானித்துக்கொண்டு இருக்கின்றனர்.

மத்திய வங்கி மோசடி தொடர்பில் அரசு எவ்வாறான நடவடிக்கையை எடுத்துள்ளது என்பதை தற்போது அறிய முடிகின்றது. பார்க்கலாம். ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டு அந்தக் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. பலர் விசாரிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு இந்த மோசடியுடன் தொடர்பு இருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எல்லாக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது எமது கோரிக்கையாகும். நாமல் ராஜபக்ஷ மகிந்தவின் ஆட்சியில் தனி அறையில் இருந்து கொண்டு திருட்டுத்தனமாக சட்டக் கல்லூரி பரீட்சை எழுதிய விடயமும் விசாரிக்கப்பட வேண்டும்.

அது மாத்திரமன்றி, மிக் ஊழல், கிரீஸ் பிணை முறி ஊழல், அம்பாந்தோட்டை துறைமுக ஊழல் மற்றும் ரூபவாஹினி ஊழல் என்று மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற அனைத்து ஊழல்களும் விசாரிக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# நல்லிணக்கத்திற்கான உறவுப்பயணம்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நல்லிணக் கத்திற்கான உறவுப் பயண வேலைத்திட்டத்தின் கீழ் நாளை மறுதினம் 13 ஆம் திகதி யாழ். மாவட்டத்திற்கு பொலநறுவை மாவட்டத்திலிருந்து 30 இளைஞர், யுவதிகள் வருகை தரவுள்ளனர். இவர்கள் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் ஜே/ 198 கிராம அலுவலர் பிரிவில் உள்ள 16 வீடுகளில் இரண்டு பேர் வீதம் நான்கு நாட்கள் தங்கி இருந்து எமது கலை, கலாசார மற்றும் அபிவிருத்தி திட்டங்களில் பங்கு கொள்ளவுள்ளனர். இவ் வேலைத்திட்டத்திற்கான ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உடுவில் ஐயனார் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-9)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 70 | 100 | 120 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 110 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 380 | 400 | 300 |
| தக்காளி | 200 | 110 | 160 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 200 | 70 | 140 | 120 | 120 |
| கரட் | 400 | 150 | 200 | 200 | 160 |
| பூசணி | 100 | 50 | 60 | 80 | 90 |
| புடோல் | 100 | 50 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 150 | 150 | 160 | 160 | 140 |
| பெரிய வெங்காயம் | 140 | 90 | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 200 | 150 | 240 | 160 | 180 |
| வெண்டிக்காய் | 200 | 70 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 200 | 50 | 120 | 160 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 120 | 80 | 100 |
| லீக்ஸ் | 100 | 70 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 100 | 40 | 60 | 60 | 100 |
| கறிமிளகாய் | 100 | 150 | 200 | 160 | 150 |
| முருங்கைக்காய் | 100 | 30 | 60 | 40 | 70 |
| போஞ்சி | 100 | 120 | 180 | 200 | 100 |
| கத்தரித்தம்புள்ள | 100 | 50 | 80 | 80 | 70 |
| கீரை - 1பிடி | 20 | 40 | 40 | 30 | 20 |
| தேசிக்காய் | 20 | 70 | 80 | 120 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 70 | 70 | 50-70 | 60 |
| இராசவள்ளி | 200 | — | 300 | 200 | — |
| வெங்காயப்பூ | 200 | 150 | 100 | 200 | 150 |
| முள்ளங்கி | 100 | 30 | 80 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 10 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | 100 | 80 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் தைரியமான மனிதர். தடைகளையும் துயரங்களையும் கடந்து அஞ்சாமல் செல்லுங்கள்.

- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேர்தல் வரும்போது மக்களே நீதிபதிகள்

தமிழ் மக்கள் நம்பிக் கெட்ட கதையாகவே பாராளுமன்றத்திலும் மாகாண சபைகளிலும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நடந்து கொள்கின்றனர்.

மக்கள் வாக்களித்து பதவியைத் தந்துவிட்டால் அதன்பின்னர் அவர்கள் எதுவும் கதைக்கக்கூடாது என்பது போல பிரதிநிதிகள் சிலர் செயற்படுகின்றனர்.

தேர்தலில் வென்று பதவிக்காலம் முடியும் வரையும் மக்களுக்குக் கூட தகவல்களைத் தெரிவிக்க இவர்கள் மறுக்கின்றனர்.

சில உறுப்பினர்களின் நடவடிக்கைகளைப் பார்க்கும் போது இனியொரு தேர்தலுக்கு இடமேயில்லை என்பது போல நடந்து கொள்வதை அவதானிக்கலாம்.

எதுவாயினும் மக்கள்தான் நீதிபதிகள். அவர்களின் தீர்ப்பு ஒருபோதும் நீதி தவறாது என்பதை அவர்கள் நிச்சயம் காட்டுவார்கள்.

சிலவேளைகளில் மக்கள் கிளர்ந்தெழுந்து ஜனநாயகத்தைக் காப்பாற்றிய சம்பவங்களும் உண்டு.

எதுவாயினும் தேர்தலில் வேட்பாளர்களாக நின்றவர்கள் எவரையும் மக்கள் வலிந்து இழுத்து வரவில்லை.

ஆக, வடக்கு மாகாண முதலமைச்சரை மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட்டி வந்தது.

மாறாக மற்றெல்லோரும் பதவி தேவை என்ற அடிப்படையில் வேட்பாளர்களாக நின்றவர்கள்.

அதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரிப்பது என்றொரு நிலைப்பாட்டில் தமிழ் மக்கள் இருந்தனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பால் உருவாக்கப்பட்ட அல்லது விடுதலைப் புலிகளின் ஆசியுடன் ஒன்றிணைக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஈடாக நின்ற ஜனநாயக வழியில் தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பர். உரிமையைப் பெற்றுத் தருவதற்காக சர்வதேச சமூகத்துடனும் ஐ.நா சபையுடனும் பேச்சு நடத்துவர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்பர். காணாமல்போனவர்களை கண்டறியுங்கள், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள் என்றெல்லாம் பாராளுமன்றத்தில் குரல் கொடுப்பர், உண்ணாவிரதம் இருப்பர், தமிழ் மக்களின் தாயகத்தைப் பாதுகாப்பர் என்றெல்லாம் தமிழ் மக்கள் நம்பினர்.

அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்ட வீட்டுச் சின்னத்துக்கு மக்கள் வாக்களித்தனர்.

யார் வேட்பாளர்கள் என்பதைக் கூட சரியாக தெரிந்து கொள்ளாமல் 30 ஆண்டு கால யுத்தம்; வன்னி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்துபோன பரிதாபம்; இதைவிட அங்கவீனம்; சொத்தழிவு; காணாமல்போன பிள்ளைகள் இப்படியெல்லாம் எத்தனையோ துன்பங்களோடு தமிழ் மக்கள் இருக்கும் போது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிச்சயம் யுத்த அழிவுகளைக் காட்டி தமிழின அழிப்பு நடந்ததை நிரூபித்து எங்களுக்கு எல்லாம் பெற்று தருவர் என்று நம்பி இருக்க,

அவர்கள் மக்களை அதட்டுகின்றனர், சூழ்ச்சி செய்கின்றனர், அநியாயமாக எதனையும் கேட்கக்கூடாது என்று நொந்துபோன தமிழ் மக்களுக்கு தர்ம உபதேசம் செய்கின்றனர்.

பரவாயில்லை அடுத்த தேர்தலில் தமிழ் மக்கள் தாங்கள் யார் என்பதை நிச்சயம் நிரூபிப்பர். இது சத்தியம்.

## அமைச்சர்களுக்கான மொழி வகுப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு

தேசிய மொழிக் கல்வி , பயிற்சி நிறுவனம் மற்றும் அரசகரும மொழிகள் திணைக் களத்தின் அனுசரணையோடு அமைச்சர்களுக்கான மொழி வகுப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு இன்று 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசனின் அழைப்பின் பேரில் சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில் நடைபெறும். (8)

## புலமைப்பரிசில் பரீட்சைக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மதுரம் கல்வி நிறுவனத்தின் ஏற்பாட்டில் தரம் - 5 மாணவர்களுக்கு முற்றிலும் இலவசமாக புலமைப் பரிசில் பரீட்சைக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் மாலை 6 மணி வரை கல்வி நிறுவன பிரதான மண்டபத்தில் இடம் பெறும்.

இக் கருத்தரங்கில் வளவாளர்களாக யாழ். திருநெல்வேலி பரமேஸ்வரா வித்தியாலய அதிபர், புலமை அருவி ஆசிரியர் யோக தயாளன் , யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் கு. லயன்ராஜ் ஆகியோர் பங்கேற்பர். (இ)

## தரம்-5 மாணவர்களுக்கான வெற்றிக்குவழி கருத்தரங்கு

ஏ.எஸ்.என். கல்வி நிறுவனம் நடத்தும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வெற்றிக்கு வழி இலவசக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு உரும்பிராய் கருணை இல்லம் முன்பாகவுள்ள காமாட்சி அம்பாள் திருமண மண்டபத்தில் இடம் பெறும். (இ-3)

## யோகாசனப் பயிற்சிநெறி

தென்மராட்சி பிரதேச கலாசார அதிகாரசபையின் ஏற்பாட்டில் யோகாசனப் பயிற்சி நெறி நாளை 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஒவ்வொரு சனி , ஞாயிற்றுக்கிழமை களிலும் பி.ப 3.30 - 5.30 மணி வரை தென்மராட்சிக் கலைமன்றத்தில் (சிவன் கோவில் வீதி, சாவகச்சேரி) நடைபெறும் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ-89)

## ஆரோக்கியமான வாய்ச்சுத்தம் பேணிட!

ஆரோக்கிய உணவு வகைகளை உண்போம்
ஒட்டும் தன்மையான அதிக இனிப்பான சொக்லேட், பிஸ்கட், பணிஸ் போன்றவற்றை தவிர்ப்போம்
சீனி அதிகம் சேர்க்கப்பட்ட இனிப்பூட்டிய பானங்களை தவிர்ப்போம்
போதியளவு நீர் அருந்துவோம்
காலையும் மாலையும் சரியான முறையில் பற்களை துலக்கிக் கொள்வோம்.
கிழமைக்கு ஒரு தடவை பல், முரசு போன்றவற்றில் ஏதேனும் மாறுதல்கள் உள்ளனவா எனப் பரிசோதித்துக் கொள்வோம்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### உன்னழகை எது மிகுதியாக்குகிறது?

நீ குற்றம் குறை சொல்லாமல் பொறுப்புடனும் துணிவுடனும் பெரு நம்பிக்கையுடனும் வெறுமையாகவும் இருக்கிறாய் என்றால் அப்போது நீ விபரிக்க முடியாத அழகுடன் இருக்கிறாய்.

உலக பந்தங்களுடன் இருக்கும் மனம் குற்றம் குறைகளைச் சொல்லிக் கொண்டிருக்கும். தெய்வீக மனம் நடனத்திலிருக்கும். ஒரு தீர்வைத் தராமல் குற்றம் கண்டுபிடிப்பது பொறுப்பற்ற தன்மையாகும். திருத்துவதற்காகச் செயற்படாமல் இருப்பவனுக்குக் குற்றம் சொல்ல உரிமையில்லை. எவனொருவனால் திருத்தம் செய்ய முடியுமோ அவன் குற்றம் சொல்லமாட்டான். தீர்வுகள் சரியாக நடைமுறைக்கு ஒத்துவரவில்லையென்றால் வேறு தீர்வு காண்பது துணிவு ஆகும்.

குற்றம் கண்டுபிடிப்பது பலவீனத்தின் அடையாளமாகும். தன்னை அறியாத, அறியாமையாகும். குற்றம் கூறுதல் இயல்பாக உன்னில் உள்ள அழகை எடுத்து விடுகிறது. இந்த அழகு ஆன்மீகப் பாதையில் செல்பவனிடம் அதிகமாகக் காணப்படுகிறது.

புற அழகிற்காக நீ ஆடை, அணிகலன் அணிந்து கொள்கிறாய். உன்னழகிற்கு நீ எல்லாவற்றையும் துறக்க வேண்டும். (குற்றம் பார்க்கும் குணத்தைக்கூட)

வெளி[illegible] உள்ளன. உண்மையான உள்ளழகை நீ ஏற்கனவே பெற்றுள்ளாய் என்று உணர்!

## பூர்விக குடிகளுக்கு ஓர் அமைச்சு வேண்டும்

### ஆதிவாசிகளின் தலைவர் கோரிக்கை

இந்த நாட்டின் பூர்விக குடி மக்களான ஆதிவாசிகளின் நலனுக்காக ஓர் அமைச்சை உருவாக்க வேண்டும் என ஆதிவாசிகளின் தலைவர் ஊறவளிகே வன்னிலா எத்தோ தெரிவித்துள்ளார்.

கடந்த 9ஆம் திகதி ஆதிவாசிகளின் தினத்தை முன்னிட்டு தம்பான கொட்டபக்கினிலே மொரவத்தேயில் நடைபெற்ற வைபவத்திலே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

ஒரு நாளும் எனது வீட்டுக்கு போகும் பாதையோ வீட்டையோ கேட்டதில்லை. அவ்வாறு கேட்டிருந்தால் என்னுடைய காலத்தில் எனக்கு மாளிகை கட்டியிருக்கலாம்.

நான் அவ்வாறு செய்யவில்லை. ஆனால் எங்கள் சமூகத்தின் கலாசாரப் பண்பாடுகளை பாதுகாக்கவே முயற்சிக்கிறேன்.

அண்மையில்தேசியமொழிகள் அமைச்சு இலங்கையில் 19 இனம் அடையாளம் காணப்பட்டுள்ளதாககூறியது. ஆனால் 23 இனம் உள்ளது.

இந்த நிலையில் ஆதிவாசி இந்த நாட்டின் ஆபரணம். எம்மை பாதுகாக்க இந்த நாட்டில் ஓர் அமைச்சை உருவாக்க வேண்டும் என்றார். (மு)

## நல்லாசிரியர்களுக்கான விருது; விண்ணப்பிக்க கோரிக்கை

சிறந்த ஆசிரியராக தனது பாடத்தில் வித்துவமும் ஆசிரியத் திறமையும் கொண்ட சிரேஷ்ட ஆசிரியர்களுக்கு வித்யா பூஷணம் பட்டமளிக்க தமிழாலயம் முன்வந்துள்ளது.

தகுதியுடையவர்கள்பெயரை முன்மொழிய முடியும். மேலும் தாமும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை C/O மேல் மாகாண தமிழ் கல்வி அபிவிருத்தி சபை, 11, Haig Road, Colombo - 04 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (மு)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### எலுமிச்சைப் பழத்தில் விளக்கேற்றுவது ஏன்?

**விளக்குத்திரி குறிப்பதன் அர்த்தம் என்ன?**

பருத்தியில் செய்யப்பட்ட திரி நல்ல அதிர்ஷ்டத்தை யும தாமரை தண்டில் செய்யப்படும் திரி முற்பிறவி வினைகளை நீக்கி வளமான வாழ்க்கையை உண்டாக்கும்.

வெள்ளை பூண்டு வகை செடியில் செய்யப்படும் திரி, அதிர்ஷ்டம் மற்றும் சொத்துக்களைப் அதிகரிக்க செய்யும்.

புதிய மஞ்சள் பருத்தி துணி திரியானது, பராசக்தியின் அருளைப் பெற்று சிக்கல்களில் இருந்து விடுபட செய்யும்.

**எலுமிச்சை விளக்கேற்ற சிறந்த நாள் எது?**

நோய்கள் மூலம் அதிகம் பாதிக்கப்படவர்கள், ஞாயிற்று கிழமைகளின் மாலை மற்றும் ராகு காலத்தில் வழிபட்டால், நோய் விரைவில் குணமாகும்.

குடும்பத்தில் அதிக பிரச்சினை உள்ளவர்கள், செவ்வாய்க்கிழமைகளில் ராகு காலத்தில் விளக்கேற்றி வழிபட வேண்டும்.

தனிப்பட்ட வேறு சில வேண்டுதல்களுக்கு வெள்ளிக்கிழமை அன்று ராகு காலத்தில் 2 எலுமிச்சை விளக்கேற்றி வழிபட வேண்டும். (முற்றும்)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### உனக்கும் கீழே உள்ளவர் கோடி

✦ உழைப்பவர்களின் கூலியை அவர்களது வியர்வை உலரும் முன்பே கொடுத்து விடுங்கள்.

✦ உங்களை விட செல்வத்திலும், அழகிலும் சிறந்தவர்களைக் காணும்போது, அவற்றில் உங்களை விடத் தாழ்ந்தவர்களையும் எண்ணிப் பாருங்கள்.

✦ உங்களை நீங்களே பெருமைப்படுத்திக் கொள்ள வேண்டாம்.

✦ உங்கள் செயல்கள் உங்களிடமே திருப்பி அனுப்பப்படும். அப்போது நீங்கள் பெறுகின்ற தண்டனை, நீங்களே வரவழைத்துக் கொண்டதாகும்.

✦ உழைத்து உண்ணும் உணவே நீங்கள் உண்ணும் உணவில் சிறந்ததாகும்.

✦ எண்ணத்தைக் கொண்டே செயல்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

✦ அறிவைத் தேடுகின்ற முயற்சியைத் தடுத்து நிறுத்துவது தீயொழுக்கமாகும்.

✦ கற்றவண்ணம் நடப்பவரே உண்மையில் கற்றவர்.

✦ நல்லமுறையில் பழகத் தெரிந்தவனும், நற்குணம் உள்ளவனுமே நண்பர்களுள் சிறந்தவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுத்துறை பாரதி வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட போட்டி

## சென்.மேரிஸ் வெற்றி






உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் முதலாம் நாளில் நடைபெற்ற மூன்றாவது போட்டியாக கிளிநொச்சி ஜெயந்திநகர் அணியை எதிர்த்து கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் பலப்பரீட்சை நடத்தியது.மிக் பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்ற இப்போட்டியின் 45 ஆவது நிமிடத்தில் கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் முதலாவது கோலினை போட்டது. அவ் அணி சார்பில் றாஜ் குறித்த கோலினை போட்டிருந்தார்.அந்த வகையில் சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (க)

# மீண்டுமொரு இறுதிப்போட்டியில் வீனஸ் விளையாட்டுக்கழகம்



நெற்கொழு கழுகு விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 9பேர் 8ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டித்தொடரில் முதலாவது போட்டியில் யங்கம்பன்ஸ் அணியையும்,2வது போட்டியில் கொம்மாந்தறை விளையாட்டுக்கழகத்தையும் playoff இல் space விளையாட்டுக் கழகத்தையும் 2 nd playoff இல் மைக்கல் விளையாட்டுக் கழகத்தையும் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகியுள்ளது வீனஸ் விளையாட்டுக்கழகம். (க)

# வைரவிழா காற்பந்தாட்ட போட்டி; ஜோசப்வாஸ் நகர் ஐக்கியம் வெற்றி



திக்கம் சனசமூக நிலையம் தனது வைர விழாவை முன்னிட்டு நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் மன்னார் ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய அணி முன்னேற்றம் கண்டது.

திக்கம் சனசமூக நிலையத்தின் மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் மன்னார் ஜோசப்வாஸ் ஐக்கிய அணியை எதிர்த்து அண்ணா அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தின் 11ஆவது நிமிடத்தில் ஜோசப்வாஸ் ஐக்கிய அணி வீரர் ஜோன்சன் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 20 ஆவது நிமிடத்தில் அண்ணா முன்னேற்றக் கழகத்தின் வீரர் ஜெனிஸ்ரன் மற்றொரு கோலைப் பதிவுசெய்தார். முதல் பாதியின் முடிவில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்திருந்தன.

இரண்டாம் பாதியின் 10ஆவது நிமிடத்தில் ஐக்கிய அணி வீரர் டினுசன் கோலொன்றைப் பதிவு செய்ய முடிவில் ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

# இறுதிப் போட்டிக்கு முன்னேறியது ஆவரங்கால் மத்திய வி.கழகம்

கைதடி தெற்கு மின்ஒளி விளையாட்டு கழகம் நடத்தி வரும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டு கழகத்தை மத்தியின் வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் வீழ்த்தி இறுதிக்குள் சென்றது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



# சென்.அன்ரனீஸ் அணி வெற்றி



உடுத்துறை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் அண்மையில் நடைபெற்ற முதலாம் நாளின் நான்காவது போட்டியாக கிளிநொச்சி கனகபுரம் அணிக்கும் தாளையடி சென்.அன்ரனீஸ் அணிக்குமிடையே நடைபெறவிருந்த போட்டியானது கனகபுரம் அணி வருகை தராத காரணத்தால் சென்.அன்ரனீஸ் அணிக்கு வெற்றி வழங்கப்பட்டது. (க)

# பூநகரி நண்பர்கள் அணியை வீழ்த்தியது சக்திவேல் வி.க.





உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இரண்டாம் நாளின் முதலாவது போட்டியாக பூநகரி நண்பர்கள் அணியை எதிர்த்து கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகம் பலப்பரீட்சை நடத்தியது.மிக பரபரப்பாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்ற இப்போட்டியில் சக்திவேல் விளையாட்டுக்கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. அவ் அணி சார்பில் லவ்லி 2கோல்களையும் அஜித் ஒரு கோலினையும் போட்டிருந்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கை...

வர வேண்டிய அவசியமில்லை என சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் 33 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு கடந்த 3ஆம் திகதி இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பான யோசனையை சபாநாயகரின் அலுவலகத்தில் கையளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-11)

## வட.மா.சபையில்...

றைய தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலக கட்டடத்தில் நடைபெற்றது. இதன் போதே பெரிதான எந்த குழப்பங்களும் நடைபெறாமல் நடைபெற்றுள்ளது.

வடக்கு மாகாண சபையில் தற்போது மீண்டும் ஏற்பட்டுள்ள குழப்பங்களை அடுத்து நேற்றைய அமர்வு குழப்பம் நிறைந்ததாக அமையும் என ஏதிர்பார்க்கப்பட்டது. எனினும் சபை ஒழுங்கு குறிப்பேட்டில் மாத்திரம் இருந்த விடயங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டு சபை முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. நேற்றைய அமர்வில் அவைத்தலைவராக சிவஞானம் தொடர்ந்திருந்ததோடு, முதலமைச்சரோடு கடிதம் மூலம் மோதிக்கொண்டு உள்ள அமைச்சர் டெனிஸ்வரனும் சமுகமளித்திருந்தார்.

இந்த நிலையில் சாதாரண பிரேரணைகள் மற்றும் கேள்விகள் ஆகியன எடுத்துக் கொள்ளப்பட்டு அவற்றோடு மாத்திரம் நின்று கொண்டு சபை அமைதியாக நடைபெற்றது. நேற்றைய தினம் முதலமைச்சரை தாக்குவதில் தமிழரசு கட்சி உறுப்பினர்கள் முனைப்பேதும் காட்டவில்லை. வழமை போன்று தாக்குபவர்கள் அமைதியாக இருந்தார்கள். [illegible]தான சச்சரவுகள் இன்றி சபை அமர்வு நடைபெற்ற போதும் வலய கல்வி பணிப்பாளர் ஒருவருடைய நியமனம் தொடர்பில் உறுப்பினர் பரஞ்சோதியும் அவைத்தலைவர் சிவஞானமும் முட்டி மோதியிருந்தனர்.

மேலும் இடைவேளையின் போது உறுப்பினர்கள் ஏனைய மாகாணங்களில் வழங்கப்படும் சலுகைகள் தமக்கும் வழங்கப்பட வேண்டும் என அடம்பிடித்து சபைக்கு உரிய நேரத்திற்கு வராது கூட்டத்தில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். இதனால் சபை அமர்வு மீள ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இந்த நிலைமையினை சமாளிப்பதற்கு உறுப்பினர்கள் கோரும் சலுகைகள் வழங்கப்படும் என அவைத்தலைவர் ஒப்புதல் வழங்கியமையால் மீண்டும் அவைக்கு வந்தார்கள். வடக்கு மாகாண சபைக்கு புதிய உறுப்பினராக தேர்வாகியுள்ள இ.ஜெயசேகரம் நேற்று தனது கன்னி உரையை நிகழ்த்தியிருந்தார்.

இதேவேளை வடக்கு மாகாண சபை யின் [illegible]ம் அடுத்தவருட நடுப்பகுதியில் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (மு-4)

## புதிய அரசியலமை...

இச் சந்திப்பில் காங்கிரஸ் உறுப்பினர்கள் இலங்க்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அதுல் கேசாப் மற்றும் உயர் ஸ்தானிகராலய அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

புதிய அரசியல் யாப்பு உருவாக்கம் தொடர்பில் பிரதிநிதிகளைத் தெளிவுபடுத்திய இரா. சம்பந்தன், ஐ.தே.க. மற்றும் ஸ்ரீ.ல.சு.க. என்பனவற்றின் உறுப்பினர்கள் நாட்டின் நலனைக் கருத்திற் கொள்ளாது தமது அரசியல் எதிர்காலத்தை முன்வைத்துச் செயற்படுவதன் நிமித்தம் இந்த விடயம் தொடர்பில் தேவையற்ற ஓர் இழுத்தடிப்பு நிலவுவதாகத் தெரிவித்தார். மேலும், புதிய அரசியல் யாப்பானது பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதோடு மாத்திரமல்லாமல், அது சர்வசன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்களால் அங்கீகரிக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தார். இந்தப் பொன்னான தருணத்தை நாம் தவற விடக் கூடாது எனத் தெரிவித்த இரா.சம்பந்தன், நான் தமிழ் மக்களின் நன்மைக்காக மாத்திரம் இதைக் கூறவில்லை, மாறாக இலங்கை வாழ் அனைத்துமக்களின் நன்மைக்காகவும் இதனைத் தெரிவிக்கிறேன் எனக் கூறினார்.

மேலும், பிரிவுபடாத ஒன்றிணைந்த ஐக்கிய இலங்கையைஅடிப்படையாகக் கொண்டு உருவாகும் புதியஅரசியல் யாப்புத் தொடர்பில் பெரும்பான்மையின அரசியல் தலைவர்கள் பொதுமக்களிடையே பிரசாரம் மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். அவர்கள் அவ்வாறு செய்கின்றபோது இந்தக் கருமத்தில் நாங்கள் வெற்றி காண்பது மாத்திரமல்ல, ஒருபகுதி மக்களிடையே காணப்படும் தேவையற்ற சந்தேகங்களையும் அது நீக்கும் எனவும் கூறினார்.

மேலும், தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமையினால் ஏற்கெனவே 50 சதவீதத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் நாட்டை விட்டுவெளியேறியுள்ள அதேவேளை, நியாயமான தீர்வு ஒன்றினை எட்ட முடியாத சந்தர்ப்பத்தில் இன்னும் மக்கள் நாட்டை விட்டு வெளியேறுவார்கள். அந்த நிலைமை நடைபெறக் கூடாது எனவும் தெரிவித்தார்.

இந்தவிடயம் தொடர்பில் காணப்படும் ஸ்திரமற்ற தன்மை மேலும் தொடரமுடியாது என்பதனை, பிரதிநிதிகள் அரசாங்கத்தின் உயர்மட்டத்துக்கு எடுத்துச் சொல்லவேண்டும் எனத் தெரிவித்த இரா.சம்பந்தன், ஒன்றிணைந்து இயன்றளவு அரசியல் கட்சிகளினதும் மக்களினதும் சம்மதத்துடன் ஒருபுதிய அரசியல் யாப்பினை உருவாக்கி தேசியப் பிரச்சினைக்கு முடிவுகாண இவர்கள் முன்வர வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த இரா. சம்பந்தன், காணாமல்போனோர் விடயம் தொடர்பில் இனிமேலும் காலதாமதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார். காணாமல்போனோர் அலுவலகசட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளபோதிலும் அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லைஎன்பதைச் சுட்டிக் காட்டிய இரா.சம்பந்தன், இந்தஅலுவலகத்தை நிறுவுவதன் மூலம் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய விசாரணைப் பொறிமுறைகளுக்கூடாக காணாமல்போனோர் தொடர்பிலான உண்மை கண்டறியப்பட்டு அவர்களது உறவினர்களுக்குதக்க ஆதாரங்களுடன் அவை வெளிக்காட்டப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

காணிவிடுவிப்பு தொடர்பாகத் தெளிவுபடுத்திய இரா.சம்பந்தன், இக்காணிகளில் குடிகொண்டுள்ள இராணுவத்தினர் அங்குபயிர்ச் செய்கைகளை மேற்கொண்டு அந்த உற்பத்திப் பொருட்களை அக்காணிகளின் உரிமையாளர்களுக்கே விற்று வருகின்றார்கள் எனத் தெரிவித்தார். தங்கள் சொந்தக் காணிகளில் வாழும் அடிப்படைஉரிமை மறுக்கப்பட்டுள்ள இந்நிலைமையானது வேதனைக்குரியது எனத் தெரிவித்த இரா. சம்பந்தன், யுத்தம் நிறைவடைந்து எட்டு வருடங்களாகியுள்ளபோதிலும் இவ்விடயங்கள் இன்னும் தீர்க்கப்படாமல் இருப்பது கவலையளிப்பதாகவும் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் அரசாங்கமானது சில நடவடிக்கைகளைமேற்கொள்கின்ற போதிலும், அவை மந்தகதியிலேயே இடம்பெறுவதாகவும் தெரிவித்தார். என்னுடைய மக்கள் காலவரையின்றி கஷ்டப்படுவதை அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்த இரா.சம்பந்தன், அரசாங்கமானது எதிர்காலத்தில் தேவையற்ற, பாதகமான சூழ்நிலைகளைத் தவிர்க்குமுகமாக இந்த அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் விரைந்து செயற்படவேண்டும் எனவும் கூறினார்.

வேலையற்ற இளைஞர்கள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த சுமந்திரன், பாரிய அளவிலான வேலை வாய்ப்புக்களை உருவாக்குவது தொடர்பில் அரசாங்கத்திடம் ஒருதெளிவான திட்டமில்லைஎனத் தெரிவித்த அதேவேளை, இளைஞர்கள் மத்தியில் வேலையின்மையானது பல்வேறு சமூகப் பிரச்சினைகளைத் தோற்று வித்துள்ளதாகவும் எடுத்துக் கூறினார். இந்தவிடயம் தொடர்பில் தமது ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என இரா.சம்பந்தன் காங்கிரஸ் பிரதிநிதிகளைக் கேட்டுக் கொண்டார்.

சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றுவதனை அமெரிக்க அரசாங்கமானதுஉறுதி செய்யவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். விசேடமாக, மனித உரிமைகள் பேரவையின் தீர்மானமான்து முழுவதுமாக நடைமுறைப்படுத்தப்படுவதனைக் கண்காணித்து உறுதி செய்யவேண்டும் எனத் தெரிவித்த இரா.சம்பந்தன், இலங்கை அரசாங்கமானது சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலிருந்துதப்பிக்க முடியாது எனவும் கூறினார்.

இரா.சம்பந்தனுக்கு நன்றி தெரிவித்த அமெரிக்க பிரதிநிதிகள், கடந்த இரண்டு தசாப்தங்களாக இந்த விடயங்கள் தொடர்பில் நீங்கள் காட்டும் உறுதிப்பாட்டுக்கும் விடா முயற்சிக்கும் நாங்கள் தலை வணங்குகின்றோம் எனத் தெரிவித்ததோடு, நிச்சயமாக உங்களுடைய கரிசனைகளை அரச உயா மட்டத்துக்கு எடுத்துச் செல்வோம் எனவும் தெரிவித்தனர். (மு-11)

## எனது ஆட்சியை...

அவர் மேலும் கூறியதாவது, எனது ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு மகேந்திரன் போன்றோர்கள் பணம் கொடுத்தார்கள். இன்று அதன் பிரதி பலனை பொதுமக்கள் அனுபவிக்கிறார்கள் எனக் கூறியுள்ளார். (மு-11)

## பதவியை...

மத்திய வங்கியின் திறைசேரி பிணைமுறிகள் விநியோகம் தொடர்பில் இடம் பெற்றதாக கூறப்படும் முறைகேடுகள் தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடி நிலை காரணமாகவே இவர் பதவி விலகிக் கொண்டதாக கூறப்படுகின்றது.

அமைச்சர் ரவி கருணாநாயக்கா, நிதி அமைச்சராக பதவி வகித்த காலத்தில் இடம் பெற்ற இந்த முறை கேடுகள் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடைபெற்று வருகின்றது. இம்மாதம் 3ஆம் திகதி ரவி கருணாநாயக்க, ஆணைக்குழு முன் ஆஜராகி சாட்சியமளித்திருந்தார்.

இதனை மையப்படுத்தி இவருக்கு எதிராக கூட்டு எதிரணியை சேர்ந்த 32 நாடாளுமன்ற உறுப்பினர்களினால் நம்பிக்கையில்லா பிரேரணையொன்றும் நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டது.

இது தொடர்பான விவாதம் பற்றி தனது நிலைப்பாட்டை நேற்று வியாழக்கிழமை கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அறிவிக்கப்படும் என சபாநாயகர் கருஜயசூரிய ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

இவருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை காரணமாக ஆளும் கட்சிக்கு உள்ளேயும் நெருக்கடி நிலை உருவான நிலையில் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை அமைச்சர்கள் உள்ளிட்ட பலராலும் ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் வலியுறுத்தப்பட்டு வந்தன.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இவர் கலந்து கொள்ள வில்லை. இவருக்கு எதிராக முன் வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை பற்றி அங்கு வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்றதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசிய கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான ரவி கருணாநாயக்கா தற்போதைய அரசாங்கத்தில் ஏற்கனவே நிதி அமைச்சராக பதவி வகித்திருந்தார்.

மே மாதத்தில் ஏற்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் போது நிதி-அமைச்சர் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு வெளிவிவகார அமைச்சரானார். ஏற்கெனவே வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீர நிதி அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (மு-11)

## ரவியின் தன்னிலை...

இந்த உரையை நிகழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள தனது வீடு புனரமைக்கப்பட்ட போது வாடகைக்கு பெற்றுக் கொண்ட வீடு தொடர்பாகவும், அந்த வீட்டை சொந்தமாக்கிக் கொண்டது குறித்தும் பிணைமுறிப்பத்திர ஆணைக்குழுவில் விடயங்களை முன்வைத்ததாகவும்,

தனது குடும்பத்தினர் பணிப்பாளர் பதவி வகிக்கும் நிறுவனம் ஒன்று தனியார் வங்கியில் பெற்றுக்கொண்ட கடனில் அந்த வீட்டை பெற்றுக்கொண்டதாகவும் அதற்காக ஆவணங்கள் மற்றும் அறிக்கையை சபையில் சமர்ப்பிப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும், கருத்து வெளியிட்டுள்ள கருணாநாயக்க, தான் லலித் அத்துலத்முதலியுடன் அரசியல் பயணத்தை ஆரம்பித்ததாகவும் கப்பலை விழுங்கினார் என்று அவர் மீது சிலர் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (மு-11)

## ஊடகவியலாளர்...

கம் நேற்றைய தினம் தெல்லிப்பழையில் திறந்து வைக்கப்பட்டது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்

நான் ஒரு இலங்கையனாக இருந்தும் தமிழ் மொழியினை பேச முடியாமல் சிங்களத்தில் உரையாற்றுவதையிட்டு வருத்தமடைகிறேன். வடமாகாண ஆளுநர் தமிழில் உரையாற்றும் போது என்னால் பேச முடியாமல் இருப்பது வேதனை அளிக்கின்றது.

நல்லிணக்கத்துக்காக பல காலம் போராடிவரும் ஒருவர் வடக்கு மாகாணத்திற்கு ஆளுநராக கிடைத்திருப்பது மிகவும் சநதோசமாக இருக்கின்றது.

மேலும் ஊடகவியலாளர்களின் சுதந்திரம் தொடர்பாக அனைவருக்கும் தெரியும். தற்போது வெள்ளை வான் கடத்தல் இல்லை, ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் இல்லை, அவர்கள் மீதான அச்சுறுத்தல்கள் இல்லை. அவ்வாறான அனைத்து செயற்பாடுகளும் எமது நல்லாட்சியில் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளன.

எந்த ஒரு உயர் அதிகாரியையும் விமர்சனம் செய்யும் அளவுக்கு ஊடக சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கின்றது. எமது நல்லாட்சி அரசில் யார் பிழை செய்தாலும் அவர் எந்த அரசியல் தலைவராக இருந்தாலும், பிழைகள் காணப்படும் இடத்து சிறப்பு குழு அமைக்கப்பட்டு அவர்கள் மேல் விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

அதில் பிழைகள் செய்தவர்கள் என இனாங் காணப்படும் நபர்கள் வீட்டுக்கு அனுப்பப்படுகின்றார்கள் அல்லது தண்டனை அனுபவிக்கன் றார்கள் இந்த நிலை தொடரும். கிணத்து தவளைகளின் சத்தங்களுக்கு நாம் செவி சாய்க்காது எல்லோரும் ஒன்றாக அபிவிருத்தியை நோக்கி பயணிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (மு-9)

## வருமானம்...

ஹோமாகம, தியகமவில் அமைந்துள்ள மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவனத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் வருமானத்தை அதிகரித்து கடனை செலுத்தக் கூடிய நிலைமை உருவாகியுள்ளது.

எனினும் கல்வி, உயர்கல்வி, சுகாதார துறையை முன்னேற்ற தொடர்ந்தும் கடனை பெறவேண்டியுள்ளது.

கடனை பெற்று அதனை கல்வி உள்ளிட்ட துறைகளில் அதிகளவில் பயன்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

நாட்டின் மொத்த தேசிய வருமானத்தில் 6 வீதத்தை கல்விக்காக ஒதுக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்றார். (மு-11)

## வடக்கில்...

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்

இலங்கை ஒரு அழகான நாடு. இன மத மொழி பேதம் இல்லாமல் இருந்தால் இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதில் வேறு எந்த பிரச்சினையும் இல்லை. அதற்கான நடவடிக்கைகள் எடுத்துவருகிறோம்.

நல்லாட்சி அரசு அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தும்போது ஏனைய மாகாணங்களை போல் அல்லாது வடக்கு மாகாணத்திற்கு என விசேட செயற்திட்டங்களை மேற்கொள்வது சிறந்ததாக அமையும்.

பாராளுமன்றத்தில் அமைச்சரவை பத்திரங்களை சமர்ப்பிக்கும்போதும் ஒவ்வொருவரும் வடக்கு மாகாண மக்களின் நிலங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவது இன்றி அமையாதது.

கடந்த 30 வருட காலமாக யுத்தத்தின் பிடியில் சிக்குண்டிருந்த மக்கள் யுத்தம் முடிவடைந்த பின்னர் தமது அன்றாட வாழ்வினை மேம்படுத்த அபிவிருத்தி முக்கியமானது. வட மாகாணத்தில் ஆரம்பிக்கப்படும் திட்டங்கள் தொழிற்சாலைகளில் வடக்கு இளைஞர் யுவதிகள் சேர்ததுக்கொள்ளப்பட வேண்டும என அவர் மேலும் தெரிவித்தார்.(மு-9,60)

## அரசு நற்பெயரை...

அவர் இதனை கூறியுள்ளார்.

ரவி கருணாநாயக்கவை பலியாக மாற்றக் கொள்ள அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

முழு சம்பவத்தையும் ரவி கருணாநாயக்கவின் கணக்கில் போட்டு விட்டு பிணை முறிப்பத்திர மோசடியின் உண்மையை மறைத்து சதாகால இரகசியமாக மாற்ற அரசாங்கம் முயற்சித்து வருகிறது.

பிணை முறிப்பத்திர ஏல விற்பனையில் ஏற்பட்ட நஷ்டம் மூன்று ட்ரில்லியன் என அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

இதில் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக 160 மில்லியன் ரூபா தொடர்பில் மாத்திரம் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அமைச்சர் ராஜித சேனாரத்னவை பொறுத்தவரை இது ஒரு துளி உப்பு.அப்படியானால் உப்பு வயல் உரிமையாளரை அரசாங்கம் ஏன் பாதுகாக்க முயற்சித்து வருகிறது.

முழு நாடும் இந்த சம்பவம் தொடர்பான விசாரணையின் இறுதி முடிவுகளை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும் என்பதே நேர்மையான அரசியல்வாதிகளின் எதிர்பார்ப்பு எனவும் டளஸ் அழகப்பெரும குறிப்பிட்டுள்ளார். (மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து குற்றங்களு...

கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்றது. இதன் போதே, அமைச்சரவையின் மேற்படி தீர்மானத்தை அமைச்சர் கயந்த கருணாதிலக வெளியிட்டார்.

அதன் சில விபரங்கள் வருமாறு,

- அங்கீகரிக்கப்பட்ட போக்குவரத்து அனுமதிப்பத்திரங்கள் இன்றி வாகனம் செலுத்துதல்.
- போக்குவரத்து அனுமதிப் பத்திரம் அற்ற சாரதி ஒருவரை சேவைக்கு அமர்த்துதல்.
- மதுபானம் அல்லது போதைப் பொருள் பாவித்ததன் பின்னர் வாகனம் செலுத்துதல்.
- புகையிரத வீதியினுள் முறையற்ற விதத்தில் மோட்டார் வண்டிகளை செலுத்துதல்.
- அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி இன்றி வாகனம் செலுத்துதல்

போன்ற போக்குவரத்து தவறுகளுக்காக அறவிடப்படுகின்ற தண்டப்பணத்தை 25,000 ரூபாயாக அதிகரித்தல்.

மற்றும் கீழ்க்காணும் போக்குவரத்து தவறுகளுக்காக தற்போது அறவிடப்படுகின்ற குறைந்த பட்ச தண்டப்பணத்தில் திருத்தம் செய்தல். அதாவது,

- அதிக வேகத்தில் வாகனம் செலுத்துதல்.

- குறிக்கப்பட்ட வேகத்தை விட 20% வரையான அதிக வேகத்தில் வாகனம் செலுத்துபவர்களுக்கு 3,000 ரூபாயும்,

- குறிக்கப்பட்ட வேகத்தை விட 20% க்கும் அதிகமான மற்றும் 30% குறைவான வேகத்தில் வாகனம் செலுத்துபவர்களுக்கு 5,000 ரூபாயும்,

- குறிக்கப்பட்ட வேகத்தை விட 30% க்கும் அதிகமான மற்றும் 50% குறைவான வேகத்தில் வாகனம் செலுத்துபவர்களுக்கு 10,000 ரூபாயும்,

- குறிக்கப்பட்ட வேகத்தை விட 50% க்கும் அதிக வேகத்தில் வாகனம் செலுத்துபவர்களுக்கு 10,000 ரூபாயும்,

எனும் அடிப்படையில் உரிய இடத்தில் தண்டப்பணம் அறவிடல் எனவும்,

- இடது பக்கத்தால் முன்னோக்கி செல்லுதல். (இக்குற்றத்துக்காக வேண்டி குறைந்த பட்ச உரிய இடத்துக்கான தண்டப்பணத்தினை 2,000 ரூபாய் வரை அதிகரித்தல்)
- பிறிதொரு நபரை நோக்கி கவனவீனமாக அல்லது எவ்வித காரணமுமின்றி வாகனம் செலுத்துதல். (இக்குற்றத்துக்காக 10,000 ரூபாய் குறைந்தபட்ச தண்டப்பணத்தை விதித்தல்)
- பாதுகாப்பற்ற முறையில் அல்லது விபத்தொன்றை ஏற்படுத்தும் வகையில் மோட்டார் வாகனங்களை செலுத்துதல். (இக்குற்றத்துக்காக 10,000 ரூபாய் குறைந்தபட்ச தண்டப்பணத்தை விதித்தல்)
- குறித்த வயதுக்கு குறைந்த வயது பொருந்திய ஒருவரினால் வாகனம் செலுத்துதல். (இக்குற்றத்துக்காக தற்போது காணப்படுகின்ற குறைந்த பட்ச தண்டப்பணத்தினை 5,000 ரூபாயிலிருந்து 30,000 வரை அதிகரித்தல்)
- மோட்டார் வாகன சட்டத்தில் குறிப்பிடப்படாத குற்றங்களுக்காக அறவிடப்படுகின்ற தண்டப்பணத்தை 2,500 ரூபாய் வரை அதிகரித்தல்.

கையடக்கத் தொலைபேசியினை பயன்படுத்திக் கொண்டு வாகனங்களை செலுத்துவது தொடர்பில் 2,000 ரூபாய் உரிய இட தண்டப்பணத்தை அறவிடல் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (மேலும் ஒரு செய்தி உள்ளே)

# இந்திய மீன...

மாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் ஆர்.சபேசன் உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை கடற்பரப்பில் நேற்று இரவு அத்துமீறி நுழைந்து நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டஇராமேஸ்வரத்தை சேர்ந்த 12 இந்திய மீனவர்களை கடற் படையினர் கைது செய்துள்ளதுடன் அவர்கள் பயணம்செய்த 3 படகுகளையும் இலங்கை கடற்படை நேற்றைய தினம்அதிகாலை கைப்பற்றியிருந்தனர்.

குறித்த மீனவர்கள் கடற்படையின் விசாரணையின் பின்னர் யாழ் மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் பாரப்படுத்தப்பட்ட பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (மு-9)




# ரவியின் முடிவு...

தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்றையதினம் உரையாற்றிய அவர், இதனை குறிப்பிட்டுள்ளதுடன், ரவி கருணாநாயக்கவின் முடிவை வரவேற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், ரவி கருணாநாயக்க தவறு செய்ததாக தகுதி வாய்ந்த நீதிமன்றத்தினால் கண்டறியப்படவில்லை.

நாட்டினதும், நல்லாட்சி அரசாங்கத்தினதும் நலன் கருதி அவர் பதவியை விட்டு விலக தீர்மானித்திருக்கும் முடிவை நான் வரவேற்கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றில் உரையாற்றிய போது கூட்டு எதிர்க்கட்சியினர் கூச்சலிட்டமை குறிப்பிடத்தக்கது. (மு-11)


அறிவுபூர்வமான முதலீடு - வளமான எதிர்காலம்
யாழ் - முதலீட்டாளர் கருத்துக்களம்
Aug.26 (Saturday) @ 9.30am
@Tilko City Hotel
முன்பதிவு : Call & SMS to 0777822014
CSE COLOMBO STOCK EXCHANGE
(C-9287)

விற்பனையாளர் தேவை
யாழ் நகரில் உள்ள பிரமாண்டமான ஜவுளிக்கடைக்கு (புடைவை நிறுவனத்துக்கு) அனுபவமுள்ள, பழக விரும்பும் ஆண் / பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் கணனியில் Bill போடும் அனுபவமுள்ளவரும் உடன் தேவை (ஆண்/பெண்)
தொடர்புகளுக்கு : 077 526 9182 / 021 222 5464
(105)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
(102)

ஜனா டிஜிட்டல் பிறிண்டிங்
வேலைவாய்ப்பு
- கிராபிக் டிசைனர் (ஆண், பெண்)
- வரவேற்பாளர் (பெண்)
- வெல்டிங் வேலை
- விற்பனைப் பிரதிநிதி (Marketing)
இல.226, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.
(C-9303) தொடர்பு: 071 211 553

TECHNO WORLD
A/L தொழில்நுட்பபிரிவு 2019, 2018
SFT
2019 A/L - விசை
2018 A/L - நீர் நிலையியல்
சக்தி (யா/ஸ்கந்தவரோதய கல்லூரி)
Bio - TEC
திருக்குமரன் (யா/நெல்லியடி மகா வித்தியாலயம்)
E-Tec
A/L 2019 - Drawing
சேரலாதன் (தொழில்நுட்ப பீடம்)
ஆரம்பம் : 12.08.2017 4.00 மணி
இடம் : • யாழ்ப்பாணம், பெருமாள் கோவில் வீதி (லிங்கம் கூல்பார் அருகாமை)
• குளப்பிட்டிச் சந்தி அருகாமை
077 170 3549
(C-9301)

நடமாடும் மிருகவைத்திய சேவை
சுன்னாகத்துக்கு அண்மையில் மிருக வைத்திய தேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும். Dr.K.கிருபாகரன்
0779738802
முருகேச பண்டிதர் வீதி, சுன்னாகம்.
(085)

Group Class
A/L தொழில்நுட்பபிரிவு 2018, 2019
பொறியியல் தொழில்நுட்பம் (E-Tec)
2019 - Auto Mobile 2018 - Paper Class
அருண்குமார் (யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி)
SFT 2019 A/L - விசை
2018 A/L- நீர் நிலையியல்
ராகவன் (மானிப்பாய் இந்துக்கல்லூரி)
ஆரம்பம் : 12.08.2017 மாலை 3.00 மணி
இடம் : யாழ். இந்துக்கல்லூரி அருகாமை (Harikanan Printer)
குளப்பிட்டிச் சந்தி அருகாமை
077 017 5346
(C-9301)

V2 TRAVELS
PASSPORT
வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
VISA EXTENSION FOR FOREIGN PASSPORT (வீசா எக்ஸ்ரென்சன்)
0768227499
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
• அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
• மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
• விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
• எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு
UK - 550/= (C-9275)
கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே (நிபந்தனைக்குட்பட்டது)
V2 TRAVELS-0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணம் வேம்படிச்சந்திக்கு அருகாமையில் அமைந்திருக்கும் எமது KINGS ELECTRONICS(PVT) LTD நிறுவனத்திற்கு
- Heavy Vehiles Driver
- Showroom Sales Representative(ஆண், பெண்)
- Showroom sale manager
பணியாளர்கள் உடன் தேவை 16.08.2017th திகதிக்கு முன்னர் சுயவிபரக்கோவையுடன் நேரில் சமூகமளிக்கவும்.
தொடர்புகளுக்கு
KINGS ELECTRONICS(PVT) LTD
021 4546699
12, Point Petro Road, Jaffna. (வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)
(C-9294)

அண்ணா வெளிநாடுகளுக்கான துரித பிரதிகள் சேவை
070 330 5500
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
கனடாவுக்கு (Canada) மிகக் குறைந்த கட்டணத்தில் கப்பல் ஊடாக அனுப்பிடவும்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்
யாழ்ப்பாணம் | ஊர்காவற்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை
(C-9290)

தையல் வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள் மட்டும்)
பெண்களுக்கான உள்ளாடைகள், வெளி ஆடைகள், தைப்பதில் அனுபவம் உள்ளவர்களும் தையல் பழக உள்ளவர்களும் தேவை.
தொடர்பு : 071 424 7094, 0770382014
9/1 பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(097)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.